# அ.கி.ப
# மணிமலர்



# அ. கி. ப.

# மணி விழா

## மலர்

வெளியிட்டோர்:
அல்லி நிலையம்,
18, முத்து முதலி தெரு,
புரசை, சென்னை-7.

அச்சிட்டோர்:
மாணிக்கம் பிரஸ்,
அமைந்தகரை, சென்னை-29.

# முன்னுரை

பண்டைப் பாண்டியர் தலைநகரமாகிய தண்டமிழ் மதுரை நகரின் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் வடக்காடி வீதியில் இருந்து கொண்டு அருந்தமிழ்த் தொண்டும் சமயத் திருத்தொண்டும் வான் புகழ் வள்ளுவர் கருத்தைப் பரப்பும் பெருந்தொண்டும் செந்தமிழ்ப் புலவர்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்யும் அருந்தொண்டும் திருத்தமுறப் பல்லாண்டுகளாகச் செய்து தமிழக மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு வருவதோடு, மதுரை நகரவைப் பேருதவியையும் பாராட்டையும் பெற்றிலங்கும் மதுரைத் திருவள்ளுவர் கழகமானது, தமிழக முதுபெருந்தலைவர் தமிழவேள் உயர்திரு. P.T. இராசன், பார்-அட்-லா அவர்கள் தலைமையில், என் தந்தையார் திரு. அ.கி.ப. அவர்களது தமிழ்த் தொண்டைப் பாராட்டு முகத்தான் 15-1-1962 திங்கட் கிழமை இரவு திருக்கோயில் வடக்காடி வீதியில் அன்னார்க்கு மணிவிழா நடத்திப் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கியதோடு, அறிஞர் பெருமக்களிடமிருந்தும் கழகங்களிடமிருந்தும் புலவர் பெருமக்களிடமிருந்தும் பெற்ற வாழ்த்துக்களைத் தன்னகத்தே கொண்ட கையெழுத்து மணிவிழா மலரையும் வழங்கிப் பெருமைப் படுத்தியது பலருக்கும் நினைவில் இருக்கலாம். அம்மலரை அச்சிடும் பொருட்டு அன்றைய கழகச் செயலாளர் பண்டித வித்துவான் ச. சாம்பசிவன் அவர்கள் என் தந்தையார் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும் எழுதிக் கொடுத்தார்கள்.

அம்மணிவிழா மலர் இப்போது நூலாக வெளிவந்துள்ளது.

என் தந்தையாருக்கு மதுரையில் மணிவிழா நடத்திச் சிறப்பித்த மதுரைத் திருவள்ளுவர் கழகத்துக்கும், சென்னையில் மணிவிழா நடத்திச் சிறப்புச் செய்த சென்னைத் திருவள்ளுவர் கழகத்துக்கும், அன்னார்க்குப் பைந்தமிழ்ப் பாவலர் என்னும் பட்டமளித்துப் பாராட்டிய மதுரை எழுத்தாளர் மன்றத்துக்கும், வாழ்த்துக்கள் அனுப்பிய கழகங்களுக்கும் நிலையங்களுக்கும் புலவர் பெருமக்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் மாணவ நண்பர்களுக்கும் என் பணிவு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மணி மலரைத் தொகுத்துதவியதோடு அதில் இடம் பெறுதற்கு வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை எழுதித் தந்த திரு .ச. சாம்பசிவன் அவர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றி உரித்தாகுக.

18, முத்து முதலி தெரு,
புரசை, சென்னை-7.
15-6-1965

அ. ப. சோமசுந்தரன்

பைந்தமிழ்ப் பாவலர்

# பரந்தாமனார்

## வாழ்க்கைக்குறிப்பு

*இதனை இயற்றியவர்:*

*மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலாளர்*
*பண்டித, வித்வான் ச. சாம்பசிவன், பசுமலை, மதுரை.*

**தோற்றம்**

"ஈங்குநந் தமிழர் பொன்று
திருந்திட வேண்டு மென்றால்
தேங்கமழ் மொழியாம் நந்தம்
தீந்தமிழ் மொழியைக் கற்றுப்
பாங்குற உலக மெல்லாம்
பரப்பிடல் வேண்டும் வேண்டும்;
தூங்கிடில் தமிழர் வாழ்வே
தொலைந்திடும் உணர்வீர் நன்றே!"

எனத் திரு. பரந்தாமனார் தமிழர்தம் கடமையைத் தகவு டன் மொழியும் தறுகணாளர்; நெஞ்சிற் றோன்றும் நேரிய

கருத்தை அஞ்சாதுரைக்கும் ஆண்மையாளர்; தம்மு ணர்வால், தம்முழைப்பால் முன்னேற்றங்காணும் மூதறி ஞர்; சிறியவரோ பெரியவரோ எவர் வரினும் சிரித்த முகம் இனிய பேச்சு இவற்றால் சிந்தை மகிழ்விக்கும் சீர் திருத்தச் செம்மல்; 'வாழ்க்கைக் கலை'யை வகுத்துரைக் கும் வாய்மையாளர்; 'பேச்சாளராக'ப் பணிபுரியும் பேரா சிரியர்; 'நல்ல தமிழை' நாட்டிற் பரப்பும் நற்றமிழ்வாணர்; 'மறு மலர்ச்சிக் கவிதை' பாடும் மாண்பாளர்; 'வரலாறு' விரித்துரைக்கும் வண்டமிழ்ச் செல்வர்.

பரந்து ஏறிய நெற்றி; திரண்டு வளைந்த மூக்கு; முறுக்கி விட்ட மீசை; பண்புகாட்டும் புன்சிரிப்பு; உருட்டி விட்ட ஒள்ளிய தலைப்பாகை; ஏறுபோற் பீடுநடை; எடுப் பான வ. உ. சி. தோற்றம் — ஆம், இவையே 'பைந் தமிழ்ப் பாவலர்' பரந்தாமனார் உருவம்.

### இளமைப் பருவம்

உலகுபுகழ் அணிநகரம்; கடற்கரையில் உறுநகரம்; ஓங்கு பண்பில் இலகு தமிழகந்தனது தலைநகரம்; வாணி கத்துக்கிடமாய் நல்ல திலகமெனத் திகழ் நகரம்; செல்வம் மலி மணிமாடம் சேர்ந்ததாகி அலகில் கலைவளர் நகரம்; தருமமிகு சென்னை எனப் புகழ்சான்ற தண்டமிழ்த் தலை நகரம்; ஆன்றவிந் தடங்கிய சான்றோர் பலர் வாழ் திரு நகரம்; எந்நாட்டினரும் எம்மொழியினரும் தம்பால் வந் தால் தகவுடன் ஏற்கும் தனிநகரம்; அதுவே சென்னைமா நகரம். அந்நகரத்துக்கருகே பத்துக் கல் தொலைவில் அமைந்துள்ளது செங்நீர்க் குப்பம் என்னும் சீரூர். அவ் வூரில், நடுத்தரத் தமிழ்க் குடியில் சந்தியப்ப முதலியார் என் பார் விளக்கமுற்றிருந்தார். அவர், அக்காலத்தில், புரசைப் பாக்கத்தில் அட்டாவதானம் செய்து அம்புவி சிறக்க வாழ்ந்த அறிஞர் சபாபதி முதலியார்பாற் பாடங் கேட்ட

பெரியார்; கவி பாடும் ஆற்றல் கைவரப் பெற்றவர்;

> "ஏரார் திருச்சென்னை ஏகம்ப நாதன்மேற்
> சீரார் தமிழ்ப்பதிகஞ் செப்பநெஞ்சே—பேரார்
> கருப்பு விலையகனைக் காய்ந்தார் தருமோர்
> மருப்பு விநாயகனை வாழ்த்து"

என்ற செய்யுளைக் கடவுள் வாழ்த்தாகக் கொண்டு சென்னை ஏகாம்பரேசுவரர்மீது 'ஏகாம்பரேசுவரர் பதிகம்' பாடிய இன்றமிழ்ப் புலவர். அன்றியும் அவர் ஆங்கிலத்திலும் போதிய அறிவு பெற்றிருந்தவர். ஆதலின், அவர் பாடுந் தொழிலையே தம் வாழ்க்கைத் தொழிலாகக்கொள்ளாமல்,சென்னைக் கோட்டையிலிருந்த படை மறவர் ஓய்வுகால ஊதியப் பணியகத்தில் ஆய்வாளராகப்பணி புரிந்து வந்தார்; கடமை, கட்டுப்பாடு இவற்றைத் தம்மிரு கண்களாகக் கொண்டு ஒழுகினர். இறைவன்பால் ஈடிலா அன்பு கொண்ட இந் நல்லார், ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் விளக்குத் திருப்பணியும் செய்து வந்தார். அஃது இன்றும் இடையறாது நடைபெற்று வருகின்றது. இத்தகு பெரியார் சூளை அவதானம் பாப்பையர் தெருவில்—சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர்தம் வீட்டுக்கு எதிர் வரிசையில் அமைந்த — தம் இல்லத்தில் தாயம்மா என்ற தகவுடை நங்கையைத் தம் துணைவியாகக் கொண்டு இல்லறத்தை இனிதே ஆற்றிவந்தார். இவ்விருவருக்கும் அருமைப் பெண்மகவாகத் தோன்றியவர் சிவக்கியானம் ஆவார். தம் குலத்தை விளக்கத் தோன்றிய ஒரே செல்வியாதலின் பெற்றோர், அவ்வம்மையாரைக் கண்ணினும் மேலாகக் காத்து வந்தனர். தக்க பருவம்வந்துற்ற காலை மணமகனை நாடி மருகியிருந்த காலத்துத் தக்கார் ஒருவர் தலைப்பட்டார்.

திருவள்ளூர் அருகே அல்லிக் குழி என்பதோர் ஊர் உண்டு. ஆங்கிருந்து சென்னையிற் குடியேறிய குடும்பங்

கள் பல. அவற்றுள் சவுந்தர முதலியார் குடும்பமும் ஒன்று. சவுந்தர முதலியாரும் அவர்தம் துணைவியாரான தெய்வயானையம்மையாரும் சென்னையில் வாழ்ந்து வந்தனர். இவர்கட்குப் பிறந்தவர் கிருட்டினசாமி. இவர் மருந்து தரு கலையோடு கைரேகை பார்ப்பதில் தேர்ந்தவர்; வீடு கட்டும் கலையிலும் வல்லவர்; வைணவத்தில் ஆர்வமுடையவர்; தவறான நம்பிக்கைகளை மறுத்துச் சொல்லும் மாண்பினர்.

இத்தகு பண்பினரே தம் செல்வி சிவக்கியானத்துக் கேற்ற கணவர் எனத் தெளிந்த சந்தியப்ப முதலியார் இவ்விருவருக்கும் மணவினை முடித்து மகிழ்ந்தார். கிருட்டினசாமி முதலியாரும் சிவக்கியானத் தம்மையாரும் மனம் ஒத்த இல்வாழ்க்கை இனிது ஏற்று, இல்லறக் கடன்களை இடைவிடாமற் செய்து வரலாயினர். இவர்கள் ஆற்றிய அருந்தவத்தால் மக்கள் நால்வர் தோன்றினர். மூத்தவர் செல்வ விநாயகம்; இரண்டாமவர் தர்மவர்த்தினி; மூன்றுமவர் பாலசுப்பிரமணியம்; நான்காமவரே பைந்தமிழ்ப் பாவலர் பரந்தாமனர். இந்நால்வரில் பாலசுப்பிரமணியம் என்பார், தம் பதினன்காவது அகவையிலேயே அமரர் உலகு அடைந்துவிட்டார்.

கிருட்டினசாமி முதலியாருக்கும், சிவக்கியானம்மாளுக்கும் 15-7-1902 வெள்ளிக்கிழமை வைகறைப் போதில் தோன்றிய பரந்தாமனர், தம் தாய்வழிப் பாட்டனராகிய சந்தியப்ப முதலியார் வீட்டில் வளர்ந்து வந்தார். பரந்தாமனர் தம் இளமைப் பருவம், நல்லதொரு சூழ்நிலையில் அமைவதாயிற்று. இவர் வீட்டினருகே நடராசர் திருக்கோயில் ஒன்று உண்டு. அங்கே 'நடராசர் பக்த சனசபை' யினர், நால்வர் திருநாளில் சிறந்த அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகளை நடத்துவர். பரந்தாமனர், அத்தகு சொற்பொழிவுகளைத் தவருமற் கேட்கச் செல்வதுண்டு.

பரந்தாமனருக்குப் பதினைந்து வயது இருக்கும். அப்போது மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த வள்ளல் பாண்டித் துரைத்தேவர், இந் 'நடராசர் பக்த சன சபை'க் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய நிகழ்ச்சியைக் கண்ணுற்று மகிழ்ந்த பரந்தாமனர் இன்றும்கூட நினைவிற் கொண்டுள்ளார். அப்பகுதியில், யாராவது இயற்கை நிலை எய்திவிட்டனரென்றால், பதினாரும் நாள் இறுதிக் கடனன்று தக்க பெரியோர்களைக் கொண்டு, திருவிளை யாடற்புராணம், மணிவாசகர் வரலாறு, காரைக்காலம்மை யார் வரலாறு முதலியவற்றுள் ஏதாவது ஒன்றை விரித் துரைக்கச் செய்வது வழக்கம். இதனைப் பிரசங்கம் என் பர். அத்தகு சமயங்களிலும் பரந்தாமனர் ஆங்குச் சென்று கேட்பதுண்டு.

அக்காலத்தில் இராசாராம் பிள்ளை என்பார், நல்ல தமிழில் இனிமையாகப் பேசும் ஆற்றல் பெற்றிருந்தார்; புராணச் சொற்பொழிவுகள் செய்வதில் வல்லவர். அப் பகுதியில் அவர் ஞாயிறு தோறும் ஏறத்தாழ மூன்று மணி நேரம் சொற்பொழிவு செய்து வரலானர். இதனையும் பரந் தாமனர் தொடர்ந்து கேட்டு வந்தார்.

மேலும், யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் எழுதிய 'சைவ வினு விடை' நூலைத் தம் இளமைக் காலத்தே நன்கு படித்துத் தெளிவு பெற்றிருந்தார் பரந்தாமனர். இன்னோரன்ன செயல்களால், பரந்தாமனரின் இளமை உள்ளத்தே தமிழ்ப்பயிர் கால்கொள்ளத் தொடங்கிப் பிற் காலத்துச் செழித்து வளர்ந்து நற்பயன் நல்குவதாயிற்று. தம் பத்தாம் வயதில் புலால் உண்ணும் தீய பழக்கத்தை அடியொடு விட்டொழிக்கலானர். தம் குடும்பத்தாருள் பெரும்பாலோர் அதனை உண்ணும் வழக்கமுடையராயி னும், இவர் மட்டும் இன்று வரையிலும் மரக்கறி உணவை உண்ணும் வழக்கத்தையே மேற்கொண்டுள்ளார்.

பரந்தாமனர், தம் தெருவிலேயே அமைந்திருந்த தொடக்கப் பள்ளியிற் சேர்ந்து முதலிரு வகுப்புகள் படித்தார்; பின்னர்ச் சூளையிலுள்ள பள்ளியிற் சேர்ந்து நான்காம் வகுப்பு வரை பயின்ருர்; அதன் பிறகு, வேப் பேரிச்சாலையில் உள்ளதும், இருநூறு ஆண்டுகட்கு மேற் பட்டுக் கல்வித் தொண்டு செய்து வருவதுமாகிய திருப் பவுற் பள்ளியில் (St. Paul's High School) ஐந்தாம் வகுப் பிற் சேர்ந்து பயிலலானர். இப் பள்ளி, அன்றுஞ் சரி, இன்றுஞ் சரி, தமிழகத்திலேயே தலைசிறந்த பள்ளியாக விளங்கி வருகின்றது. பெரும் புலவர்களான மயிலை-சண் முகம் பிள்ளை, கா. ரா. நமச்சிவாய முதலியார், மணி. திருநாவுக்கரசு முதலியார், ச. த. சற்குணர் முதலானே ரைத் தம் ஆசிரியர்களாகக் கொண்டு, அதனற் புகழ் பெற்ற பள்ளி இது. ஒரு காலத்தில் இஃது, இரண்டாம் நிலைக்கல்லூரியாகத் திகழ்ந்திருந்தது. சமயத் தொண் டோடு கல்வித் தொண்டும் புரிந்து வந்த ஐரோப்பியர் களே, இதன் முதல்வர்களாக இருந்து வந்தார்கள்.

இந்தப் பள்ளியில் பரந்தாமனரைச் சேர்த்த பெருமை, பரந்தாமனரின் அத்தை மகன் தங்கவேலு முதலியா ரையே சாரும். பரந்தாமனர் இப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு (S. S. L. C.) வரை முறையாகக் கல்வி பயின்ருர். உயர் வகுப்புகளில் ஆங்கிலத்தையே பயிற்சி மொழியா கக் கொண்டு படித்த பரந்தாமனர், இங்கிலாந்து நாட்டு வரலாறு, தமிழ் இவற்றை விருப்பப் பாடங்களாக (Optionals) எடுத்துப் படித்தார். அப்போது, இப்பள்ளி யின் முதல்வராக விளங்கியவர் கே. சி. மெக்பர்சன் என்ற ஐரோப்பியராவார். பேராசிரியர்களான கா. ரா. நமச்சிவாய முதலியாரும், மணி திருநாவுக்கரசு முதலியா ரும் முறையே மேல் நிலை வகுப்புகட்கும் கீழ்நிலை வகுப்பு

கட்கும் தமிழ் கற்றுத் தந்தனர். இவ்விருவரிடமும் பரந்தாமனர் ஒவ்வோராண்டு படித்திருக்கிறர். நமச்சிவாய முதலியார், மேரியரசி கல்லூரிக்கும், திருநாவுக்கரசு முதலியார் முத்தியாலு பேட்டை உயர் பள்ளிக்கும் சென்ற பிற்பாடு, பேராசிரியர் ச. த. சற்குணர், தலைமைத் தமிழாசிரியரானர். இவரிடமே ஐந்து, ஆறும் படிவங்கள் தமிழ் பயின்ருர் பரந்தாமனர்.

சற்குணர்பால் அமைந்த நல்லியல்புகள் பல. தாய்மொழியாம் தமிழ்மீது அளப்பரிய பற்றுக் கொண்டு, அதன் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த பெரியருள் ஒருவர் இவர். கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவராயினும், இவர் பிற சமயத்தின்பாலும் பெரு மதிப்புடையவர்; ஆதலின், பலரது போற்றலுக்கும் உரியவரானர். தெய்வத் திருவாசகத்தையும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தையும், கம்பராமாயணத்தையும் பாராட்டிப் பேசுவார்; அவ்வாறே புறநானூறு முதலான சங்கத் தமிழ் நூல்களின் தனி மாட்சியை அழகுபட எடுத்துரைப்பார்; சிந்தாமணியின் சுவையை இனிது ஊட்டுவார்; இன்றமிழில் கவி பாடும் வகையும் கற்றுத்தருவார். தாம் இறந்த பின், தம்பாலிருந்த புறநானூற்று நூலைத் தம்முடன் சவப்பெட்டியிற் சேர்த்துப் புதைத்துவிட வேண்டும் என்று தம் மாணவர்களிடம் வேண்டிக் கொண்டாரெனில், இவர் தம் தாய்மொழிப் பற்றை எங்ஙனம் அளவிட்டுரைக்க முடியும்? இவர் விருப்பத்திற்கேற்ப அங்ஙனமே செய்யப் பட்டது.

சற்குணர் பரந்த நோக்கமுடையவர்; உண்மை உயர்வளிக்கும் என்னுங் கோட்பாடுடையவர்; நேர்மை வழியே நேரிய வழியே எனக் கொண்டவர். இத்தகு பண்புகளைத் தம் மாணவர்களிடத்தும் வளர்த்து வந்த பெருந்தகையாளர் இவர்.

தூய தொண்டுள்ளங் கொண்ட நற்குணவள்ளல் சற்குணரிடம் பள்ளியில் மட்டுமின்றித் தனிப்பட்ட முறையிலும் தமிழ்க் கல்வி பயிலும் வாய்ப்பு நம் பரந்தாமனருக்குக் கிட்டியது. சற்குணர்தம் வீடு, இராயப்பேட்டையில் திரு. வி. க. வீட்டிற்கு அருகில் இருந்தது. பரந்தாமனர், தாம் பள்ளியிற் படித்த காலத்திலேயே, தமதாசிரியர் சற்குணர் வீட்டிற்கு ஞாயிறுதோறும் சென்று அவரிடத்து நன்னூல் முதலான இலக்கண நூல்களை ஐயந்திரிபுறக் கற்றுத் தெளிந்தார். பரந்தாமனரிடத் தமைந்த தமிழார்வம், முன்னிலும் பன்மடங்காவதற்கு வழி கோலிய பெருமை, சற்குணருக்கே உரியது. 'பண்பிற் சிறந்தவர் பரந்தாமனர்' என்று இன்று யாவரும் போற்றுமாறு வாழ்கின்றார் எனில், அதற்கு வழிகாட்டியவர், வாழ்ந்து காட்டியவர் பேராசிரியர் சற்குணரே யாவார்.

சற்குணரின் அருமந்த மாணவராயமைந்த பரந்தாமனர், பள்ளியிற் படித்த காலத்தே, பள்ளித் தமிழ் மன்றச் செயலாளராக இருந்து, செல்வக் கேசவ முதலியார், மறைமலையடிகள், நமச்சிவாய முதலியார் ஆகிய தமிழ்ப் பேரறிஞர்களை வரவழைத்துப் பேசச் செய்திருக்கிறார். அதனால், பரந்தாமனரை மாணவ நண்பர்கள் நன்கு மதிக்கத் தலைப்பட்டனர்.

இங்ஙனம் பள்ளியில் பலராலும் போற்றப்பட்ட பரந்தாமனர், *1921*-இல் பள்ளியிறுதி வகுப்பில் தேறி, வெளியேறினர். உடனே, சென்னைக் கர்னட்டிக் பஞ்சாலையில் எழுத்தர் பணி இவருக்குக் கிடைத்தது. தாமும், தம் ஆசிரியரைப் போலவே தமிழாசிரியராக, தமிழ்ப் பெரும் புலவராக விளங்க வேண்டும் என்று வேணவாக் கொண்டிருந்த பரந்தாமனருக்கு எழுத்தர் பணி பார்ப்பதில் சிறிதும் விருப்பமில்லை. ஓராண்டே இவர் அவ்வலுவலை மேற்கொண்டார். பின்னர்ச் சற்குணர்தம்

பரிந்துரையினால், இவர் பயின்ற திருப்பவுற் பள்ளி யிலேயே இவருக்கு உதவித் தமிழாசிரியர் பணி கிடைத்தது. தமதாசிரியர் வழிகாட்டப் பரந்தாம னர் சீரிய முறையில் தமது பணியைச் செய்து வந்தார். அப்போது, எவ்வாற்றானும் பட்டப் படிப்புப் படித்து மேனிலை எய்தவேண்டும் என்னும் உயரிய குறிக்கோள் இவருடைய உள்ளத்து எழுந்தது. இதனை அறிந்த சற் குணர், இவ்வேட்கையினை நிறைவேற்றற்கு ஆவன செய் தார். அதன் பயனாக, 1925-இல் பள்ளியில் படிப்புக் கென விடுப்புப் பெற்றுச் சென்னைப் பச்சையப்பன் கல் லூரியில் இடைக் கலை வகுப்பிற் சேர்ந்து பயிலலானார். அங்கே, கச்சிக் கலம்பக உரையாசிரியர் மோசூர் கந்த சாமி முதலியார் என்பார் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தார். பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியா ரும் அப்போது அங்கேதான் பணிபுரிந்து கொண்டிருந் தார். இவ்விருவரிடமும் பரந்தாமனார் தமிழ் கற்றார். இடைக் கலையில் தேறிய பின், இளங்கலை வகுப்பில் சேர்ந்து, அரசியல், வரலாற்றுப் பாடங்களைச் சிறப் புப் பாடங்களாக எடுத்தார். 'திராவிட இந் தியா' எனும் நூல் எழுதிய புகழ் பெற்ற டி. ஆர். சேஷ ஐயங்காரும், வரலாற்றுப் பேராசிரி யர் சி. சீனிவாச ஆச்சாரியாரும் இவருக்கு வரலாறு கற் பித்த ஆசிரியர்களாவர். பரந்தாமனாருக்கு வரலாற்றில் பெரும் பற்றுண்டாக்கியவர்கள் இவர்களே. இப்பற்றே 'நாயக்க மன்னர் வரலாறு' எனும் அரிய நூலைப் பரந்தாம னர் எழுதுவதற்குத் தூண்டுகோலாய் இருந்தது எனலாம்.

கல்லூரியிற் படித்த காலத்தும் பரந்தாமனாருக்கு நல்ல பேரும் புகழும் கிடைத்தன. இவருக்கு ஈராண்டு கள் உதவித்தொகை கிடைத்தது. இவர் அவ்வப்போது நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு

பரிசுகளைப் பெற்றிருக்கிறார். இளங்கலை வகுப்பின் முடிவில் 'பெருந்தகையாளர் பரிசி'னைப் (Gentleman prize) பெற்றார்; 'இராமச்சந்திர ஐயர் தமிழ்ப் பரிசை' ஈராண்டுகள் அடைந்தார்.

கல்லூரித் தமிழ் மன்றச் செயலர் பணி இவருக்குக் கிடைத்தது. செயலராக இருந்த காலத்து இவர் செய்த செயல்கள் பல. அவற்றுள் குறிப்பிடத்தக்கன இரண்டு: ஒன்று, திருமணம் செல்வக் கேசவராய முதலியாரின் திருவுருவப் படத்தை மன்றச் சார்பில் திறக்கச் செய்தமை; அடுத்துப் பனகல் அரசரின் திருவுருவப் படத்தைத் திறக்கச் செய்தமை. அப் போது, பனகல் அரசர் மீது 'பனகல் மன்னர் மன்னைக் காஞ்சி' என்ற நூலை எழுதி வெளியிட்டார் பரந்தாமனார். அக்கல்லூரியின் முதல்வராக இருந்த டாக்டர் இரத்தினசாமி என்பார் சட்டக் கல்லூரியின் முதல்வராகச் சென்றபோது, அவர் மீது 'பெருமாணவர் ஆற்றுப் படை' என்ற செய்யுள் நூலைப் பாடித் தம் நன்றி யறிதலைப் புலப்படுத்திக் கொண்டார். இங்ஙனம் நன் மாணவராய் இலங்கிய நம்பி பரந்தாமனார், *1929* – இல், இளங்கலைத் தேர்வு எழுதினர். எக்காரணத்தாலோ அதில் வெற்றி கிட்டாது போயிற்று.

**தமிழாசிரியர்**

கல்லூரிப் படிப்பை முடித்து விட்டுத் திரும்பிய பரந் தாமனார், மீண்டும் திருப்பவுல் பள்ளியில் தமிழாசிரியர் பணியை மேற்கொண்டார். அங்குத் தலைமைத் தமிழாசிரி யராக இருந்த சற்குணர், கிறித்தவக் கல்லூரிக்குத் தமிழ்ப்பேராசிரியராகச் சென்று விட்டார். ஆதலின், தலைமைத் தமிழாசிரியப் பணி, பரந்தாமனருக்கே கிடைத் தது. தமிழாசிரியராக இருப்போர், பயிற்சியும் (Training)

பெற்றிருந்தால் சிறப்புடையது எனக் கருதிய பரந்தாமனர் 1931 - இல் சிதம்பரம் சென்று, ஆங்குள்ள மீனாட்சி கீழ்நாட்டு மொழி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து ஓராண்டு படித்து, 1932 மார்ச்சுத்தேர்வு எழுதி முதல் வகுப்பில் தேறினர். அப்போது, இவர் இலக்கணப்பெரும் புலவர் பூவராகம் பிள்ளையிடம் இலக்கணப் பாடங்கற்றார். பயிற்சி பெற்றபின் இவர் திரும்பவும் திருப்பவுற் பள்ளித் தலைமைத் தமிழாசிரியப் பணியை மேற்கொண்டார்; இதே பள்ளியில் ஏறத்தாழ இருபத்து மூன்றரை ஆண்டுகள் தமிழாசிரியராக அமர்ந்து ஆயிரக்கணக்கான மாணவர் கட்கு அருந்தமிழின் அழகை, மேன்மையை, உயர்வை, மாட்சியை எடுத்துரைத்து, மாணவரிடையே 'நல்ல தமிழ் ஆசான்' எனும் நற்பெயரையும் பெற்றார். இதற்கிடையில் முடிக்காத இளங்கலைத் தேர்வை மீண்டும் எழுதித் தமிழ்ப்பாடத்தில் முதற்றரத்தில் தேறினர்; பின்பு 1949–இல் தமிழை முதன்மையாகக் கொண்டு, முதுகலைத் தேர்வு (M. A) எழுதி, முதன்முறையிலேயே முதற்றரத்தில் தேறினர். 'முயற்சி திருவினையாக்கும்' என்னும் முதுமொழிக்கு இலக்கியமாகத் திகழ்பவர் பரந்தாமனர் என்று சொல்வதில் தவறொன்றுமில்லை.

### தமிழ் விரிவுரையாளர்

தமிழ் வளர்க்கும் தண்டமிழ் மதுரையில், கலைக்கென உழைக்கும் கவின்மிகு பெரியார் ஒருவர் உளர். அவரே கல்லூரி பல கண்ட காவலர் கலைத்தந்தை கருமுத்து. தியாகராசச் செட்டியார் ஆவார். அவர் தோற்றுவித்த தியாகராசர் கல்லூரி, வையைக் கரையில் வானுற நிற்கின்றது. பண்புகள் பலகொண்ட பாவலர் பரந்தாமனருக்கு இக்கல்லூரியில் தமிழ்விரிவுரையாளர் பணி கிடைத்தது. எனவே, இவர் திருப்பவுற் பள்ளியினின்றும் விலகி, மதுரைத் தியாகராசர் கல்லூரியில் 9-1-1950-இல் தமிழ்

விரிவுரையாளராகப் பொறுப்பேற்ருர். அன்று முதல் இன்றுவரை, எவ்வித இடையீடுமின்றித் தம் பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்ருர்.

## தொண்டுகள்

பள்ளியிலும், கல்லூரியிலும் படித்த காலத்திலேயே தொண்டுகள் பல செய்த பரந்தாமனர், பிற்காலத்து வாளா இருப்பாரோ? திருப்பவுற் பள்ளித் தமிழாசிரிய ராக இருந்தகாலத்துஞ்சரி, தியாகராசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகப்பணி புரியும் இக்காலத்துஞ்சரி, பரந் தாமனர் பிறர்க்குழைக்கும் பெரு நோக்கத்தினின்று சிறி தும் பிறழவில்லை. தமிழின்பால் தளரா வேட்கை கொண்ட இப்பெரியார், 15-1-1925-இல், சென்னையில், 'தென்னிந்தியத் தமிழ்க் கல்விக் கழகம்' (South Indian Tamil Academy) ஒன்றைத் தோற்றுவித்தார். தமதாசிரி யர் சற்குணரை அதன் நிலேத்த தலேவராக அமர்த்திப் பெருமைப் படுத்தினர். தமிழுணர்ச்சி மங்கியிருந்த அக் காலத்தில், தமிழைப் பரப்புதல் ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட பரந்தாமனர், தமது ஆசிரியரைக் கொண்டு, தமிழ் வகுப்புகளே நடத்தச்செய்தார். இவ்வகுப்புகளில் தாமும் மாணவராக இருந்து கேட்டதோடன்றிப் பலரை யும் கேட்குமாறு செய்தார். அக்காலத்தில் பரந்தாமனரு டன் இவ்வகுப்புகளில் பயின்றவர்கள் பலராவர். அவர்க ளில், கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் பூ. ஆலாலசுந்த ரஞ் செட்டியார், பச்சையப்பன் கல்லூரியிற் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கும் பண்டித வித்துவான் ரா. நடேச நாயகர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். இக் கல் விக் கழகத்துச் செயலாளராகப் பரந்தாமனரே இருந்து வந்தார். ஏறத்தாழ ஏழாண்டுகள் இக்கழகம் செவ்வனே நடந்து வந்தது.

இத்தொண்டுடன் தம் நண்பரான அண்ணல் சமூகத் தொண்டர் ஆ. மு. கோட்டிலிங்கனர் செய்து வந்த மது விலக்குப் பணியில் சேர்ந்துழைத்தலும், உடல் நலத்துக் குரிய வழிவகைகளை ஏழைமக்களுக்கு விளக்குதலும், மேற்கொண்டார்; சென்னைப் புரசையில் உள்ள பொன்னன் சேரியில் தம் நண்பர் திரு ஆ. மு. கோட்டிலிங்கனர் நடத்தி வந்த முதியோர் இரவுப் பள்ளியில் தம் நண்பர் திரு. தி. வீ. இராமச்சந்திரனர், எம்.ஏ., பி.எல். அவர்களோடு சேர்ந்து துணைபுரிந்தார்.

திருக்குறளினிடத்துப் பெருமதிப்புக் கொண்ட பேராசிரியர் பரந்தாமனர், அதனைத் தமிழர் அனைவரும் நன்குணர்ந்து கடைப்பிடித் தொழுகவேண்டும் என்னும் நோக்கத்தால், ஒல்லும் வகையான் குறள்நெறி கூறி அதன்பாற் பற்றுக் கொள்ளச் செய்வார்; சென்னைத் திருவள்ளுவர் கழகத்தில் பல்லாண்டுகள் தலைவராக இருந்து அரும்பணி செய்துள்ளார். அவ்வாறே தமிழ்ப் பணியே தலையாய பணியெனக் கொண்ட சென்னை மாணவர் மன்றத்திலும் பெரும் பங்கு கொண்டவர் பரந்தாமனர். "பனி பெய்யும் நள்ளிரவானாலும், பகலோன் காயும் நடுப்பகலானாலும் கவலாது சென்னை மாணவர் மன்றத்திற்கு வந்திருந்து தொண்டாற்றித் தமிழ் வளர்த்தவர் அ. கி. பரந்தாமனர்" என அம்மாணவர் மன்றம் பெருமையுடன் கூறுகின்றது. பரந்தாமனரின் தொண்டுளமறிந்த 'தமிழகப் புலவர் குழு'வும் இவரைத் தன் உறுப்பினராகக் கொண்டது; செயலர் பணியும் தந்தது.

**பைந்தமிழ்ப் பாவலர்**

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

எனப் பாட்டுக்கொரு புலவராம் பாரதியாரால் போற்றப்

பட்ட இத்தமிழகத்தே தெய்வத் திருக்குறளைத் தமிழர் அறியாது, போற்றாது, மதிக்காது வாழ்ந்த காலமும் ஒன்றிருந்தது. அக்காலத்தே, குறள்நெறி பரப்புதலே தம் வாழ்வின் குறிக்கோள் எனக்கொண்ட தி. ப. சுப்பிர மணிய தாசர் என்னும் நல்லார் ஒருவர் தோன்றி, ஊர் தோறும் சென்று உண்மைக் குறளின் உயர்வை எடுத் துரைத்தார். தென்பாண்டி நாட்டில் அவர் செய்த பணி கள் அளப்பில. அன்னவர் தம் பேருழைப்பால் உருவா யதே 'மதுரைத் திருவள்ளுவர் கழகம்'. இது, மதுரை, அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாயண்ணலின் அருமைத் திருக்கோயிலில், வடக்காடி வீதியில் அமைந் துள்ளது. மதுரையில் தமிழ் வளர்த்த பெருமையில், தமிழ்ச் சங்கத்திற்கு அடுத்தபடி இடம் பெறுவது இக் கழகமேயாகும். கடந்த இருபத்திரண்டு ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி, சிறப்பாகத் திருக்குறட் பணி, தெய்வப் பணி செய்து வருவது கண்கூடு.

'அ. கி. ப.' எனும் மூன்றெழுத்துக்கொண்ட அறிஞர் பரந்தாமனார், *1950*-இல், மதுரைக்கு வந்தவுடனே, இக் கழகத்தின் பணிகளை முன்னமே நன்குணர்ந்தமையின், தாமே இக்கழகத்திற்கு வருகை புரிந்து, கழகப் பணி களில் பெரிதும் ஈடுபடலானார்; மதுரை மக்களின் நன் மதிப்புக்குப் பெரிதும் உரியவரானார். அதனால், இத் திருவள்ளுவர் கழகத்தின் துணைத்தலைவர் பொறுப்பு இவருக்குக் கிடைத்தது. பல்லாண்டுகள் அப்பணியைச் செவ்வனே புரிந்தாராதலின் கழக ஆட்சிக்குழுத் தலைவர் பணியும் இவருக்குக் கிட்டிற்று. தாம், சென்னையிலிருந்த காலத்து எத்தகு பணிகளை மேற்கொண்டாரோ, அத்தகு பணிகளை மதுரையிலும் மேற்கொண்டார். 'பரந்தாமனார் கலந்துகொள்ளாத தமிழ் மேடை இல்லை; இவர் பாராட் டாத திருமண நிகழ்ச்சிகள் இல்லை' என்று சொல்லு மாறு இவர் பணிகள் அமைந்துவிட்டன.

தமிழ்த்தொண்டு செய்பவர்களை-தமிழுக்குழைக்கும் புலவர்களைத் தமிழுலகு தக்க முறையில் பாராட்டத் தவறிவிட்டது எனலாம். இக்குறையைப் போக்க மதுரைத் திருவள்ளுவர் கழகம் முன்வந்தது. எனவே, நாவலர் ச. சோமசுந்தர பாரதியாருக்குக் 'கணக்காயர்' என்னும் கவின்மிகு பட்டந்தந்து போற்றியது; பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனாருக்குச் 'செந்நாப் புலவர்' எனும் செந்தமிழ்ப் பட்டந்தந்து பாராட்டியது; வரலாறு கண்ட ஆசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தாருக்குக் 'கல்வெட்டுப் பேராசிரியர்' எனும் சிறப்புமிகு பட்டந் தந்து மகிழ்ந்தது; தமிழில் ஆட்சி நடத்த வழிகோலிய கீ. இராமலிங்கனருக்கு 'ஆட்சிச் சொற் காவலர்' எனும் அரிய பட்டந் தந்து அமைந்தது.

இத்தகு வான்புகழ் வள்ளுவர் கழகம், நாற்பதாண்டுகட்கு மேலாக நாடு, மொழி இவைகட்கு உழைத்த நற்றமிழ்ப் புலவராம் பரந்தாமனுர்க்குப் பாராட்டுச்செய்ய விழைந்ததில் வியப்பொன்றுமில்லை. அதற்கேற்பப் பரந்தாமனரும், ஐம்பத்தொன்பதாம் ஆண்டைத்தாண்டி, அறுபதாம் அகவையை எட்டிப் பிடித்தார். இதுவே தக்கவாய்ப்பு எனக் கருதிய மதுரைத் திருவள்ளுவர் கழகம் 'பரந்தாமனரின் மணிவிழாக்' கொண்டாடி மகிழ முடிவு செய்தது.

மாண்புமிகு இம்மணி விழா, 15-1-1962-இல் (தைத் திங்கள் 2-ஆம் நாள் திங்கட்கிழமை) மிகச் சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. அன்று மாலை ஐந்து மணிக்கு, மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து திருவள்ளுவர் கழகத்திற்குக் குதிரை பூட்டப்பெற்ற வண்டியில், தமிழறிஞர் புடைசூழ, நாதசுர இன்னிசை முழங்கப் பரந்தாமனர்

ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். கோயில் ஆடி வீதியில், வள்ளுவர் கழக மன்றத்தில், கழகத்தின் பெருமைதரு தலைவர் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் மணிவிழா நிகழ்ந்தது. கழகத் துணைத் தலைவர் கி. பழனியப்பன் அவர்கள் வரவேற்புரை நல்கக் கழகச் செயலாளர் பரந்தாமனருக்கு வாழ்த்துப் பாமாலை படித்துக் கொடுத்தார். பேராசிரியை தே. தியாக ராசன் அம்மையார், கழகத்தார் உருவாக்கிய 'வாழ்த்து மலரை' வழங்கினர். மதுரையில் நல்ல தமிழ் வளரப் பாடுபட்டுவரும் மதுரை எழுத்தாளர் மன்றத்தார், தம் மன்றத் துணைத் தலைவராம் பரந்தாமனருக்கு இம்மணி விழாவின்போது பாராட்டுச் செய்ய விரும்பினர். எனவே, அதன் தலைவர் சித்தாந்த சைவப் பேராசிரியர் வித்து வான் ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்கள், பரந்தாம னரைப் பாராட்டி அவருக்கு மதுரை எழுத்தாளர் மன்றத்தின் சார்பில் 'பைந்தமிழ்ப் பாவலர்' எனும் பாங்குறு பட்டத்தை வழங்கினர்கள். அப்பட்டம், மன்றத் தார் அளித்த பொற் பதக்கத்தில் பொறிக்கப்பட்டுப் பாவலருக்குக் கொடுக்கப்பட்டது. பின்னர்த் தமிழவேள் அவர்கள், கழகச் சார்பில் அ. கி. பரந்தாமனருக்குப் பொன்னடை போர்த்தி 'வெள்ளிச் சுருள்' ஒன்றையும் அளித்தார். நெல்லைத் திருக்குறள்மணி – வித்துவான் அ. க. நவநீத கிருட்டினனரும், சென்னை மாணவர் மன்றத் தலைவர்–தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்களும் பைந்தமிழ்ப் பாவலரைப் பாராட்டிப் பலபட உரைத்தனர். சென்னை மாணவர் மன்றமும், வாலாசா பாத் இந்தமத பாடசாலையும் வாழ்த்துரைகள் வழங்கின. பரந்தாமனர் தம் ஓய்வுக் காலத்தில், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரும் 'செந்தமிழ்' இதழின் ஆசிரியர் பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழவேள் அவர்கள் கேட்டுக் கொண்டார். முடிவில் பைந்தமிழ்ப்



மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து மணிவிழா ஊர்வலம் தொடங்குகிறது.



தமிழவேள் திரு பி. டி. இராசன் அவர்கள் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினரின் வாழ்த்திதழ் அடங்கிய வெள்ளிப்பேழையை வழங்குகிறார்கள்.



மதுரை எழுத்தாளர் மன்றம் ''பைந்தமிழ்ப் பாவலர்'' என்னும் பட்டம் அளிக்கின்றது.



சென்னைத் திருவள்ளுவர் கழகம் நடத்திய மணிவிழாவில் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பொன்னுடை போர்த்துகின்றார்கள்.



மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் 1962-ஆம் ஆண்டு
ஆட்சிக் குழுவினர்

பாவலர் பரந்தாமனர், தமக்களித்த பாராட்டுரைகட்கு இனிய முறையில் நன்றி தெரிவித்தார்.

இம்மணி விழாவை யடுத்து, மதுரைத் தியாகராசர் கல்லூரி மாணவர்களும், பாவலருக்கு விழா நடத்திப் பாராட்டினர்கள். அக் கல்லூரியில் முன்னர்ப் பயின்ற முதுகலை மாணவர்களும், பிற நண்பர்களும் ஒருங்கு கூடிக் கல்லூரிச் செயலாளர் கருமுத்து. தி. சுந்தரஞ் செட்டியாரவர்கள் தலைமையில் விழா நடத்திப் பொன்னடை போர்த்திப் பாராட்டினர்கள். சென்னைத் திருவள்ளுவர் கழகத்தாரும், 9-6-1962-இல் சென்னைப் புரசை அன்ன தான சமாஜ மண்டபத்தில் பாவலருக்குப் பாராட்டுச் செய்தனர்.

## நூல்கள்

பாவலர் பரந்தாமனர் எழுதிய கட்டுரைகள் பல; வெளியிட்ட நூல்கள் பல. இவர் சென்னையிலிருந்த போதே, சிறுவர்கட்கும், உயர்நிலைப்பள்ளி மாணவர் கட்கும் பல பாட நூல்கள் எழுதியுள்ளார். பாரதி தமிழ் வாசகம், திருவள்ளுவர் செந்தமிழ் வாசகம், நவீன தமிழ் இலக்கியக்கோவை, மதுரை மணிமாலை, மானிடன் செய்த மாண்புறு செயல்கள், தலைசிறந்த பாண்டியர் முதலானவை மாணவர்கட்கென இவர் எழுதிய நூல்கள். 'தென்னிந்தியத் தமிழ்க் கல்விக் கழக'ச் சார்பில் இவர் எழுதிவெளியிட்ட 'தமிழ் மகள் திருப்பள்ளியெழுச்சி'யை அக்கால அமைச்சராக இருந்த சர். T. சிவஞானம் பிள்ளை அவர்கள் பாராட்டியதோ டமையாது இப்பாடல் களை மனப்பாடஞ் செய்பவர்களுக்குப் 'பொற் பதக்கம்' தருவதாகக் கூறி, அதற்காகப் போட்டி விழா நடத்தச் செய்து, அவ்வாறே கொடுத்தார். மற்றும் பைந்தமிழ்ப் பாவலர் இக் கல்விக் கழகத்தின் வாயிலாகப் 'பெரு

மக்கள் கையறு நிலையும் மன்னைக்காஞ்சியும்' என்னும் செய்யுள் நூலையும் வெளியிட்டார்.

வழுவின்றித் தமிழ் எழுதவும் எளிய மொழியில் இனிய முறையில் யாவரும் புரிந்து கொள்ள வழி காட்டும் வகையில் 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா ?' என்னும் நூலை இவர் எழுதியுள்ளார். 'பேச்சாளராக', 'வாழ்க்கைக் கலை', 'மதுரை நாயக்கர் வரலாறு' 'வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும்', 'திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும்,' 'பன்னிரு கட்டுரைகள்', 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' 'கவிஞராக', 'எங்கள் தோட்டம்', (சிறுவர் பாடல் நூல்) முதலான நற்றமிழ் நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவை யனைத்தும் இவர்தம் சொந்த வெளியீடுகளாகும். இவை தவிரத் தம் ஆசிரியர் தமக்குச் செய்த நன்றிக்கு அறிகுறியாகப் 'பேராசிரியர் ச. த. சற்குணர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு' நூலொன்றும் வெளியிட்டுள்ளார்.

**மனையறம்.**

பாவலர் பரந்தாமனர், பள்ளியிறுதி வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே மனையற வாழ்வை மேற்கொண்டு விட்டார். படித்த, நல்ல தமிழ்க் குடும்பத்தில் கன்னியப்ப முதலியாருக்கும் அன்னம்மாள் என்பவருக்கும் அருமை மகளாகத் தோன்றிய **கணேசம்மாள்** என்னும் அம்மையாரை 1-6-1921-இல், தம் இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். இவ்விருவரும் இல்லறமாம் நல்லறத்தை நன்முறையில் ஆற்றிவந்தனராயினும், தம் குலத்தை விளங்க வைக்கும் மக்கட் பேறில்லாது மனம் வருந்துவாராயினர். இறையருளால், பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தபின், அருமைத் திருச்செல்வன் தோன்றினன். தந்தை வழிப் பாட்டனர் பெயராகிய சோமசுந்தரன் என்னும் சிவப்பெயர் அவனுக்குச் சூட்டப்

பெற்றது. பாவலர் தம் திருச்செல்வனை இளங்கலைப் பட்டம் பெறுமாறு படிக்க வைத்தார்; சோமசுந்தரனுக்குச் சந்தான இலக்குமியை மணமுடித்து மகிழ்ந்தார்; தம் செல்வன் வழி 'இளங்கோ' எனும் பெயரனைப் பெற்றிருக்கிறார். தம் தமையனார் புதல்வர்களான தியாகசுந்தரன், சண்முகசுந்தரன் இவர்களையும் வளர்த்துக் கல்வி கற்பித்து மணஞ்செய்து வைத்தார். தியாகசுந்தரம் தொழிற்கல்வி கற்றுச் சென்னை நகராட்சியில் அலுவல் பார்க்கின்றார். சண்முகசுந்தரம் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர். இவர் மனைவி திருமதி மோகனா சண்முகசுந்தரமும் இளம் அறிவியல் பட்டம் (B.Sc.) பெற்றவர். இருவரும் ஆசிரியர் பயிற்சிப் பட்டங்களும் பெற்று ஆசிரியர்களாகத் தொண்டு புரிகின்றனர். இவ்விரு புதல்வர்களுக்கும் குழந்தைகள் உண்டு.

**வாழ்க பாவலர் :**

ஒரே பள்ளியிற் பயின்று, அவ்வொரே பள்ளியில் 23 ஆண்டுகள் தமிழ்ப்பணி புரிந்த பைந்தமிழ்ப் பாவலர் பரந்தாமனார், இப்போது ஒரே கல்லூரியில் பதினான்கு ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டு செய்து வருகிறார். கல்லூரியில் தம்மிடத்துப் பயிலும் மாணவர்களை 'இவர் வைதாலும் அம்மாணவர்கள் இவரை வெறுப்பதில்லை. "திட்டினாலும் விட்டுவிலகோம்' என்று அவர்கள் கூறுவராயின் பரந்தாமனாரின் பண்பை எங்ஙனம் புகழ்வது? தொண்டைநாடு தந்த சான்றோர், உயர்குணக்குன்று, தமிழ்க்காவலர், பைந்தமிழ்ப் பாவலர் பரந்தாமனார் இன்னும் பல்லாண்டு பாரிற் சிறந்து வாழ வாழ்த்துவோமாக!

# அ. கி. பரந்தாமனர் மணி விழா

## மதுரையில்

மதுரை, சன. 15, 1962

"நாட்டுக்கும் மொழிக்கும் தாம் கற்ற கல்வி பயன் படும் முறையில் சிறப்பாகப் பணியாற்றி வருபவர் திரு. அ. கி. பரந்தாமனர்" என்று திரு. பி. டி. இராசன் இன்று இங்குப் பாராட்டிக் கூறினர்.

தியாகராசர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனருக்கு அறுபதாண்டு நிகழ்வதையொட்டித் திருவள்ளுவர் கழகச்சார்பில் மணி விழா ஒன்று நடத்தப் பெற்றது.

இவ் விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் திரு. பி. டி. இராசன் மேலும் கூறியதாவது: "முன்னர் தமிழர் களிடத்தில் இருந்த நல்லியல்புகள் இப்பொழுது இல்லா மல் மறைந்து விட்டன. ஆகவே, குறளை நன்கு படிக்க வேண்டுவது இன்றியமையாததாகும். அறநூல்களைப் படிப்பதால் மட்டும் பயனில்லை. அதற்கேற்றபடி குணம் அமையவேண்டும். இந்த முறையில், தாம் கற்ற கல்வி யானது நாட்டுக்கும் மொழிக்கும் பயன் படும் விதத்தில் பேராசிரியர் பரந்தாமனர் பணியாற்றி வருகிருர்."

கழகத் துணைத்தலைவர் திரு. கி. பழனியப்பன் அனை வரையும் வரவேற்றுப் பேசினர்.

திருமதி தே. தியாகராசன் வாழ்த்து மலர் ஒன்றைத் திரு. பரந்தாமனருக்கு வழங்கினர்.

ஔவை திரு. சு. துரைசாமிப் பிள்ளை தமிழ் எழுத்தா ளர் மன்றச் சார்பில் 'பைந்தமிழ்ப் பாவலர்' என்னும் பட் டத்தைத் திரு. பரந்தாமனருக்கு அளித்துப் பேசுகையில் 'பாவன்மையும், எழுத்துவன்மையும், சொல்வன்மையும் வாய்க்கப் பெற்றவர் பரந்தாமனர்" என்று கூறிப் பாராட் டினர்.

திரு. அ. கி. பரந்தாமனருக்கு எழுத்தாளர் மன்றச் சார்பில் பொற்பதக்கம் ஒன்றும் அளிக்கப்பட்டது. திரு வள்ளுவர் கழகச் சார்பில் பொன்னடை போர்த்தப்பட் டது. திரு. மு. வரதராசனர் முதலிய தமிழ்ப் பேராசிரியர் களிடமிருந்தும் பல கழகங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

சென்னையைச் சேர்ந்த புலவர் திரு. மயிலை சிவமுத்து பாராட்டுரை வழங்கிப் பேசுகையில் தமிழாசிரியர்களுக் குப் பிற ஆசிரியர்களுக்கொத்த ஊதியம் கிடைக்கப் பாடு பட்டவர் திரு. பரந்தாமனர் என்று கூறினர்.

நெல்லை வித்துவான் திரு. அ. க. நவநீதக் கிருட்டி னன் பேசுகையில் 'எண்ணற்றத் தமிழ்த் திருமணங்கள் நடைபெறப் பெரிதும் துணை புரிந்தவர் பரந்தாமனர்' என்று பாராட்டினர்.

திரு. அ. கி. பரந்தாமனர் தமக்களிக்கப்பட்ட பாராட்டிற்கு நன்றி கூறிப்பேசினர்.

திருவள்ளுவர் கழகச் சார்பில் வித்துவான் திரு. ச. சாம்பசிவனும் பரந்தாமனரிடம் கற்ற மாணவர்கள் சார் பில் ஔவை திரு. நடராசனும் வாழ்த்துப் பாக்களைப் படித் தனர். திரு. சைலப்ப ஓதுவார் இறை வணக்கம் பாடினர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து திரு. பரந்தாமனார் ஊர்வலமாக நகரின் முக்கிய வீதிகள் வழியாக அழைத்துவரப்பட்டார்.

"தமிழ் நாடு" — 16-1-'62.

---

சென்னை, ஜூன் 9, 1962.

சென்னைப் புரசை அன்னதான சமாஜம் கடந்த 9-6-1962 மாலை, வண்ணக் காகிதம், மாவிலை ஆகிய தோரணங்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டுக் காட்சியளித்தது. மாலை 5 மணியளவில், சென்னைப், புரசைத் திருவள்ளுவர் கழகப் பொறுப்பினர் வெகு மும்முரமாக வருவோர் எல்லாரையும் வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தனர். மங்கள கீதங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. இச் சிறப்பு ஏற்பாடுகள் மதுரைத் தியாகராசர் கல்லூரிப் பேராசிரியரும் சென்னைத் திருவள்ளுவர் கழகத் தலைவருமாகிய பெருந்தகை பைந்தமிழ்ப் பாவலர் உயர் திரு, அ. கி. பரந்தாமனார், எம். ஏ. அவர்களுடைய அறுபதாவது வயது நிறைவு பற்றிய மணிவிழாவிற்காகவே நடைபெற்றன.

மாலை ஆறு மணிக்கெல்லாம் பெருந்தகைப் பாவலர் அவர்களுடைய ஆசிரிய நண்பர்களும் புலவர் பெருமக்களும் பத்திரிகையாசிரியர்களும் பழைய மாணவர்களும் திரளாகக் குழுமியிருந்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., முதுபெரும் புலவர் திரு. மயிலை சிவ முத்து, பண்டித, வித்துவான் திரு ரா. நடேச நாயகர், திரு தி. வீ. இராமச்சந்திரன், பண்டித திரு வி. நடேசனார், வித்துவான் திரு சா. சுந்தரனார், திருமதி செ. கலைச்

செல்வி அம்மையார், திரு பெ. பதுமநாபன், சென்னை மாநகர் மன்றப் பொறியியல் வல்லுநர், ஹாஜி திரு M. மீரான், B E., A.M.I.E., ஆட்சிமொழிக் காவலர், திரு கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ., திரு தொ. ரா. பார்த்தசாரதி முதலியார், பி.ஏ. "பத்ம ஜோதி" ஆசிரியர், நா. சின்னையா செட்டியார் ஆகியவர்கள் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஆறரை மணியளவில் ஆசிரியர் பெருந்தகை திரு. அ. கி. ப. அவர்கள் தம் குடும்பத்தினருடன் மங்கள ஒலிக்கிடையே சிறப்பாக மணிவிழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். குழுமியிருந்த அத்துணை பேர்களும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஆசிரியரவர்களை வரவேற்று உபசரித்து அலங்கரிக்கப்பட்டிருந்த தனி இருக்கையில் அமரச் செய்தனர்.

பிறகு, சென்னை நகர இளைஞர் மன்றத் தலைவரும் திருவள்ளுவர் கழகத் துணைத் தலைவருமாகிய திரு. தொ. ரா. பார்த்தசாரதி முதலியார் அவர்கள் வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று முன்னுரை வழங்கியபோது இவ் விழா விருந்தினராய் வீற்றிருக்கும் பேராசிரியர் அ. கி. ப. அவர்களும் தாமும் நெருங்கிய உறவினரேயாயினும் இருவரும் உற்ற நண்பர்களாகவே உறவாடி வந்துள்ளதாகவும்; திருவாளர் அ. கி. ப. அவர்கள் அரிய குண நலன்களுக்கு உறைவிடமானவர்களென்றும், இக் குணங்களைத்துணையும் அவர்கள்தம் ஆசிரியர் பெருந்தகை காலஞ்சென்ற சற்குணர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளாரென்றும், இவர்கள் தமிழுக்கும் தமிழ் மக்கள் நலனுக்கும் ஆற்றியுள்ள தொண்டுபற்றித் தமிழகமே இவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளதென்றும் கூறி, இவ் விழாவிற்குத் தலைமை வகிக்க எல்லாவிதங்களிலும் பொருத்தமான டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

அவர்களை இப்பணியை ஏற்று விழாவை நடத்திவைக்குமாறு வேண்டிக்கொண்டார்.

சைவ நெறிக் காவலர் டாக்டர் மா. இராசமாணிக்கனர் அவர்கள் தம் தலைமையுரையில், பாவலர் பரந்தாமனரும் தாமும் ஒரே கல்லூரியில் ஆறு ஆண்டுகள் தமிழ்த் தொண்டு புரிந்ததாகவும், அப்போது அ. கி. ப. அவர்கள் எப்பொழுதும் எதையும் அஞ்சாது எடுத்துக் கூறும் சிறப்புக் குணம் பெற்றிருந்ததைக் கண்டதாகவும், அவர்கள் இனிய எளிய முறையில் பேசும்சொல் வன்மையுடன் எழுத்து வல்லமையும் பெற்றிருப்பதைத் தாம் இன்றும் பாராட்டுவதாகவும், இவர்கள் எழுதியுள்ள பல நூல்களுள் நாயக்கர் வரலாறு என்னும் ஆராய்ச்சி நூல் மிகவும் சிறப்புடையதென்றும், தாம் கடந்த 35 ஆண்டுகளாக இவர்களுடன் தொடர்புடைமையால் இவர்கள் பல துறைகளில் வல்லுநராயிருப்பது மட்டுமேயன்றி, சிறந்த தமிழ்த் தொண்டராகவும் திகழ்கின்ருர் என்பதைக் குறிக்கப் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும், இவர்களுடைய அரிய பண்புகளையும், இவர்கள் ஆற்றிவரும் பணியையும், காட்டிவரும் நேயத்தையும் கருதித் தாம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மதுரைக் கல்லூரி வாழ்க்கையில் தாமும், பிற தமிழாசிரிய நண்பர்களும் இவர்களை 'பெரிய அண்ணு' என்றே அழைக்கும் பழக்கம் கொண்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டார்கள்.

பாராட்டுரை வழங்கிய மாணவர் மன்றத் தலைவர் உயர்திரு மயிலை சிவமுத்து அவர்கள், தமக்கும் பாவலர் பெருமான் பரந்தாமனர் அவர்களுக்கும் நெடுநாளைய தொடர்பு உண்டென்றும், தாம் சொல்லவேண்டிய அருங் குணங்கள் அத்துணையும் தலைவரவர்கள் கூறிவிட்டதால் தாம் தனியாகச் சொல்லவேண்டியது அதிகம் இல்லையென்றும், இவர்கள் தம் மாணவர் மன்றத்திற்குப்

பேருதவியாக இருந்துள்ளார்களென்றும், இவர்களுடைய நற்பணியைப் பின்பற்றி எல்லாரும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கூறி வாழ்த்தியருளினர்.

இதன் பிறகு கழகச் சார்பில் சைவப் பெரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பாவலர் பெருந்தகைக்குப் பொன்னடை போர்த்தி வாழ்த்தியருளினார்கள். நண்பர்களிடமிருந்தும் பல பெரியோர்களிடமிருந்தும் வந்திருந்த வாழ்த்துச் செய்திகளையும் மதுரைத் திரு. மு. வீரமணி அவர்கள் அச்சிட்டனுப்பிய வாழ்த்தும், திருவள்ளுவர் கழக வாழ்த்துரையும் படிக்கப்பட்டன.

பின்னர் நண்பர்களும் இயக்கத்தினர்களும் தத்தம் அன்பிற்கும், மரியாதைக்கும் அறிகுறியாக மலர் மாலைகளைச் சூட்டியும் ஆடைகளை அணியச் செய்தும் போற்றிப் பாராட்டினர்கள். நிகழ்ச்சி நிரலில் குறித்தபடி பண்டிதர்களும், புலவர் பெருமக்களும் தத்தம் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் வழங்கினர்கள். பெண்கள் சார்பாகத் திருமதி கலைச்செல்வி அம்மையார் தம் ஆழ்ந்த மரியாதையையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

விழாவில் பங்கு கொண்டவர்களுக்கும், தம்மைப் பாராட்டிப் பேசிய பெருமக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில், பாவலர் அ. கி. ப. அவர்கள் தாம் இளமையிலிருந்தே தமிழார்வம் கொண்டிருந்ததாகவும், தாம் தமிழ்த் தொண்டை ஏற்ற காலத்தில் தமிழுக்கு அவ்வளவு சிறப்பு நம் நாட்டவர்களிடமும் இருந்ததில்லை என்றும், அக் காலத்தில் ஆங்கிலத்தில் பேசுவதையே மக்கள் பெரிதும் விரும்பினர் என்றும், அப்படிப்பட்ட காலத்தில் தாம் தமிழ்த் தொண்டு செய்யவேண்டியதாக இருந்தது என்றும், தாம் இத்தகைய தொண்டு செய்வதற்கு மூல

காரணமாக இருந்தவர் தம் குருநாதராகிய உயர்திரு சற்குணரே யாகையால் அவர்களுக்கு முதற்கண் தம் வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்துவதாகவும், தம்மைப் பாராட்டிப் பேசிப் பெருமை படுத்திய அத்துணை அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினர்.

சென்னைத் திருவள்ளுவர் கழகச் செயலர் திரு. சுந்தரம் அவர்கள் நன்றி கூற, கழகத்துணைச் செயலர் திரு. ஆதிதேவநாதன் அவர்கள் மங்கள கீதம் பாட, விழா இனிது முடிவுற்றது.

—"பத்மஜோதி"

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் மனங்கனிந்து
வழங்கிய

## மங்கல வாழ்த்து

(ஆறுசீர் விருத்தம்)

உலகுபுகழ் அணிநகரம் கடற்கரையில் உறுநகரம்
ஓங்கு பண்பில்
இலகுதமி ழகந்தனது தலைநகரம் வாணிகத்துக்
கிடமாய் நல்ல
திலகமெனத் திகழ்நகரம் செல்வமலி மணிமாடஞ்
சேர்ந்த தாகி
அலகில்கலை வளர்நகர மதுசென்னை நகரமென
அறிவர் யாரும். 1

மருதமுத லாகியநா னிலப்பொருள்கள் நாடோறும்
மருவப் பெற்றுக்
கருதலுறு நாற்றிசைசேர் நாடுகள்செய் பலபொருள்கள்
கலத்திற் சேர்ந்து

வருதலினப் பெருநகரம் நெய்தனிலத் தேயமைந்து
மகிழ்ச்சி யின்பம்
தருதலின ஃ தந்நிலமும் அந்நாடும் எனத்திகழும்
சார்வார்க் கெல்லாம். 2

சான்றவரை மிகவுடைத்தென் பதற்கேற்பச் சண்முக
சார்ந்த சீர்த்தி [ஞர்
ஆன்றவறி வமைநமச்சி வாயர்சிவ முத்துமதி
யறிஞ ராகத்
தோன்றியபேர் பெறுவரத ராசனெனப் பலர்தோன்றும்
தொண்டை நாட்டில்
ஏன்றபுகழ் அந்நகரில் வருபுலவன் பரந்தாமன்
என்னும் ஏந்தல். 3

மருந்துதரு கலையோடு கணிநூலில் மிகத்தேர்ந்து
மக்க டம்மை
வருந்துபிணி பலதீர்த்து வாழ்வித்த பெருவள்ளல்
வாய்மை மேன்மை
பொருந்துகிருட் டினசாமி, சிவக்கியா னத்தம்மை
போற்றிச் செய்த
திருந்துதவத் தாலுதித்த இவனியல்பு வரன்முறையிற்
செப்பலுற்றும். 4

புன்னைவளர் புரசைநகர்ச் சபாபதியாம் நாவலன்பாற்
பொருந்திக் கற்ற
அன்னவழிப் பாட்டனுர் ஏகாம்ப ரேசுவரர்க்
கன்பாய் அன்று

முன்னை முறைப் படிபதிகஞ் சொன்னசந்தி யப்பரைப்
மொழிமேற் பற்றுத் [போல்
தன்னை நிகர்ப் பவரின்றி இளமையிலே மனத்தியைந்து
சாரப் பெற்ருன். 5

கோவிருந்து செங்கோலோச் சியசென்னை மாநகரிற்
கூடி யுள்ள
பூவிருந்த வல்லியுறு முதலியார் மரபில்வரு
புலவன் இன்னேன்
சேவிருந்தான் அடிபரவுந் திருநாவுக் கரசர்நமச்
சிவாயர் தம்பால்
நாவிருந்த புலமைவளச் சற்குணர்பாற் றமிழ்ப்புலமை
நண்ணி ஞனல். 6

தொன்மைமிகு தூயபவுல் உயர்பள்ளி தனிற்சேர்ந்து
தொடர்ந்து கற்று
நன்மைமிக நிறையாரும் படிவத்திற் றேறியபின்
நல்ல உள்ளத்
தன்மைமிகும் ஆசிரியர் சற்குணர்தம் முடன்கூடித்
தமிழ்கற் பிக்கும்
வன்மைமிக அப்பள்ளி ஆசானென் றிவன்சின்ஞள்
வாழ்ந்தான் முன்ஞள். 7

குலமுதலா கியவியல்பு கணேசம்மாள் மிகப்பெற்றுக்
குலவல் கண்டு
நலமுறப்பத் தொன்பதாம் அகவையினின் மணம்
நண்ணி மேலும் [புரிந்து

புல்முறவே பச்சையப்பர் கல்லூரி யிடைக்கலையிற்
பொருந்தித் தேறிப்
பலகலைசேர் பி.ஏ. யும் படித்துயர்வு கொளத்தேர்ந்து
பட்டம் பெற்றான். 8

சொற்பயிற்சி பாப்புனைவு கட்டுரைகள் வரைதலெனச்
சொல்லு மிந்தப்
பற்பல்வா முறைகளிலே கல்லூரி வாழ்க்கையிலே
பரிசு பெற்றுக்
கற்பிக்கும் பயிற்சிபெறத் திகழண்ணா மலைப்பல்கலைக்
கழகஞ் சேர்ந்து
நற்பயன்கை யுறமுதன்மை பெறத்தேறித் தன்றகுதி
நாட்டி னான்முன். 9

பின்னாளில் இருபான்மூன் றாண்டுகளாய்ப் பவுல்பள்ளி
பெருமை எய்தத்
தன்னாசான் மகிழ்தொண்டு* புரிந்தெம்மே எழுதிமுதல்
தரத்தில் தேறிப்
பன்னாள்கள் புரசைநகர்க் கழகங்கள் வளர்ச்சியுறப்
பணிகள் செய்திங்
கிந்நாளிற் றியாகேசர் கல்லூரி யாசிரியன்
என்ன வுள்ளான். 10

*[எம். ஏ. -முதுகலைப் பட்டம்]

பேறுபெறு மகன்சோம சுந்தரமும் நல்லறிவு
பெறுதற் காகும்
வீறுபெறு நாயக்க அரசர்வர லாறுமுதல்
விளங்கு நூலும்
நூறுதலை முறைதிகழத் தமிழகத்திற் கெச்சமென
நுவல ஈந்தின்
ருறுபதி னவைகொடு நிலவுகின்ருன் பாராட்டும்
அடைகின் ருனல். 11

எங்கள்பெருந் தலைவரெனத் திகழ்தமிழ வேள் தலைமை
யேற்று வண்மை
மங்கலமார் திருக்கரத்தாற் பொன்னுடை போர்த்தவும்
வாழ்த்துக் கூறித் [யாம்
துங்கமலர் சொரியவுஞ்சேர் பரந்தாமன் குலத்தோடு
தொன்று தொட்டுத்
திங்களணி சடைப்பெருமான் திருவருளாற் பல்லாண்டு
சிறந்து வாழ்க. 12

இம்மங்கல வாழ்த்தினை இயற்றியவர், மதுரைத் திரு வள்ளுவர் கழக ஆசிரியரும், மதுரைத் தூயமரியன்னை உயர் நிலைப் பள்ளித் தமிழாசிரியருமான திருவாளர் பண்டித கந்தசாமிப் புலவர் ஆவார்.

சென்னை மாணவர் மன்றத்தினர்
மதுரையில் நடந்த மணிவிழாவில்
படித்தளித்த

# மணிவிழா வாழ்த்து மலர்

(அறுசீர் விருத்தம்)

தேனென்றும் கனியென்றும் தீங்கனியின் சாறென்றும்
    தமிழை இந்நாள்
வானளவப் புகழ்கின்றார்; தமிழன்னை மகிழ்கின்றாள்;
    ஆனால், முன்னாள்
ஏனென்று கேட்பவர்கள் இல்லாத காலமுதல்
    இனிய வாழ்வில்
ஊனாக உயிராகத் தமிழ்வளர்த்தான் பரந்தாமன்
    வாழ்க! வாழ்க! 1

அன்னைதனைத் தாலாட்டி அமுதூட்டி வளர்த்திட்ட
    அந்நாள் தொட்டே
தன்னுணர்வால் உழைப்பதனால் முன்னேற்றம் உறப்பெற்ற
    தகைசால் அண்ணல்
பன்னாளும் இலக்கியப்பூஞ் சோலையிலே உலவுபரந்
    தாமன் இந்நாள்
பொன்னான தமிழ்நூல்கள் புதுமைமணம் கமழ்ந்திடவே
    ஆக்கித் தந்தான்.

சொன்னாலும் அவன்பெருமை வாய்மணக்கும்;
களிக்கும் கண்கள்; (கண்டாலும்
எந்நாளும் அவன்பண்பை நினைத்தாலும் பூரிப்புக்
கொள்ளும் நெஞ்சம்;
மன்னுதி மன்னர்திரு கருமுத்து தியாகேசன்
மதிக்கும் செம்மல்;
பன்னாளும் தமிழ்ப்பண்பிற் பதிந்திடுசீர் பரந்தாமன் 3
வாழ்க! வாழ்க!

சின்னவரோ பெரியவரோ எவர்வரினும் சிரித்தமுகம்
இனிய பேச்சால்
'என்னசெய்தி? எங்குவந்தீர்?' எனக்கேட்டே உபசரிக்
இயல்புச் செம்மல்; (கும்
சென்னையினில் எம்மன்றம் சிறந்திடவே புரந்திடுநற்
செயலின் வீரன்;
பொன்னகராம் மதுரையிலே மணிவிழாக் கொள்வ
பூரிக் கின்றோம். (தனால் 4

சொல்லென்றால் கேட்பவர்கள் உள்ளத்தைத்
தோற்றம் வேண்டும்; [தொடுகின்ற
நல்லுரைகள் அவ்வகையில் நாடோறும் பொழிகின்ற
மேகம் ஆனன்;
பல்லாண்டாய்த் தமிழ்போற்றும் பாவலனும் மயிலை
முத்துப் பண்பன்; [சிவ
வெல்லும்சீர்த் தொண்டுகளில் பெரும்பங்கு கொண்ட
மேன்மை யாளன். [தொரு 5

எப்போதும் சிரித்தமுகம்; எப்போதும் ஏழைகளுக்
கிரங்கும் உள்ளம்;
எப்போதும் இனியமொழி பேசும்வாய்; நன்மைக்கே
எழுதும் நற்கை;
எப்போதும் தமிழ்மொழியின் நலம்நாடி இங்குமங்கும்
ஓடும் கால்கள்;
எப்போதும் இப்படியே இருக்கின்ற பரந்தாமன்
ஏந்தல் வாழ்க! 6

வினைத்திட்பம் என்னும் ஓர் அதிகாரம் வகுத்திட்டான்
வள்ளுவன்றன்;
தினைத்துணையும் தவறாமல் அதனுக்கோர் இலக்கிய
திகழ்கின் றாய்நீ; [மாய்த்
இனித்ததிரு வள்ளுவர்மன் றச்சார்பில் இன்றுமணி
விழாவைக் கண்டோம்;
மனத்துயர்சிந் தனையாளா! பேச்சாளா! எழுத்தாளா!
வாழ்க! வாழ்க! 7

கொள்ளையன்பு கொண்டவனே! குலவுதிருக் குழந்தை
அரிய நண்ப! [களின்
அள்ளியள்ளி அவர்கட்கா ஆயிரமாய்ப் பாட்டளிக்கும்
அறிஞர் ஏறே!
உள்ளத்தால் பொய்யாத உத்தமனே! பரந்தாம
ஒளிவி ளக்கே!
வெள்ளம்போல் தமிழ்க்கூட்டம் தமிழ்நெஞ்சால்
வாழ்க! வாழ்க! [வாழ்த்துகின்றோம்! 8

நின்னுட்கள் திங்களௌன நீண்டிடுக! நீண்டதிங்கள்
ஆண்டே யாகி

உன்னிடுமவ் வாண்டதுவும் ஊழிபல போல்பொலிக
என்ன அந்நாள்

பன்னுபதிற் றுப்பத்துப் பகர்ந்ததுபோல் பண்பினனே
வாழ்க! வாழ்க!

தன்னேரில் தமிழ்போலத் தழைத்துலகில் நலமுடனே
வாழ்க!வாழ்க! 9

சென்னைத் திருவள்ளுவர் கழகத்தார் அனுப்பிய

## வாழ்த்துப்பா

உலகெலாம் உவந்தே உச்சிமேற் கொள்ளும்
நலமார் அறிஞர் நாயனார் அனைய
தூயோர் உடைத்துத் தொண்டைநன் னாடெனத்
தாயாம் தண்டமிழ் ஔவை சாற்றிய
பெருமை சான்றஇத் திருவார் நாட்டில்
அருந்தமிழ் மணங்கமழ் அல்லிக் குழிவாழ்
உழுவித் துண்ணும் உயர்குடிச் செம்மல்
ஆன்றோர் சந்தி யப்பரின் பெயரனே!
கிருட்டிண சாமியின் கெழுதகை புதல்வ!
செந்தமிழ்ப் பெருமைசால் சென்னையம் பதியில்
புலவர் பலர்வாழ் புரசைப்பாக் கத்து
மாணவர் முதலா யாவரும் மதிக்கப்
பல்கலைக் கழகப் பட்டம் பெற்றே
திருப்பவுற் பள்ளியில் திறமார் தமிழ்ப்பணி

பல்லாண் டாற்றியும், பாரினுக் கோர்மறை
நல்கிய தேவர் நற்பெயர் தாங்கித்
திருக்குறள் பரப்பும் செந்நெறித் தொண்டுசெய்
சென்னைத் திருவள் ளுவர்கழ கத்தின்
ஆன்ற தலைவராய் ஆண்டுகள் பலவா
இனிதே விளங்கி ஏற்றநல் வழிசெயும்
பைந்தமிழ்ப் புலவ! பாங்குறு சீல!
சங்கத் தமிழ்வல சற்குணர் பெருமான்
மெச்சிய மாணவ! வித்தக மணியே!
சொல்லின் செல்வர் தொழுதகு சேதுப்
பிள்ளை யவர்தம் பீடுறு நண்ப!
இளமை முதலா ஏழையர்க் கறிவு
வழங்கிடு வள்ளலே! வண்டமிழ்க் கொண்டலே!
நாட்டில் எவரும் நல்ல தமிழைப்
பேசிட எழுதப் பெருநூல் அளித்தோய்!
கைம்மாறு வேண்டாக் கடப்பா டுடைய
செந்தமிழ்ச் செல்வ! சிந்தைக் கினிய
பைந்தமிழ் ஈவோய்! பார்நிகர் பொறையோய்!
கரும வீர! கடனறி காட்சிய!
கழகமோ டமர்ந்தே கன்னித் தமிழ்க்கும்
இனிதே தொண்டுசெய் இறையனார் மைத்துனர்
பெயர்கொள் பெரிய! பரந்தாம அண்ணல்!
தமிழ்த்தாய்த் தொண்டே தகைசால் தொண்டென
அறுபதாம் அகவை அடைந்தும் அணிபெறப்
பணிசெய் தின்புறும் பாங்குறு பெரியோய்!
மதுரை மாநகர் மன்னி ஓங்குசீர்
தியாக ராசர்கல் லூரியிற் சிறக்கத்
தமிழ்ப்பணி ஆற்றும் தகைசால் ஆசான்!
பதியெழு வறியாப் பண்புறு சென்னை

அகன்று மதுரை அணிநகர் சேர்ந்தும்
அருங்குறள் தொண்டே ஆங்கும் நிகழக்
கழகம் சேர்ந்து களிப்புடன் பணிசெய்
தீந்தமிழ்த் தொண்ட! திருநிறை வள்ளால்!
ஈண்டறு பானுண் டினிதே நிறைவதால்
மாண்புசேர் தொன்னகர் மதுரைமா நகரில்
பெருநா ளாகப் பேணுபு புரியநின்
திருநாள் மங்கலத் தொருமாண் சிறப்பும்
பூண்டே வேண்டிய வேண்டியாங் கெய்தினை;
இருசுட ருலகுக் கொருநீ யாகி
ஒருபே ராற்றலும் போற்றிவரு நாளும்
ஆயுளும் மறைமொழி ஆசியும் அடைந்து
பூவா லவனடிப் போதினைப் புனைந்து
செந்தமிழ் வன்மையும் வந்தமை கண்மையும்
மருது வழங்கி யருது போற்றி
அன்பர்கள் உள்ளத் தகலா திருந்தே
இன்பமு தூற்றும் இலக்குமி கேள்வன்
மாலிருஞ் சோலை மலைவாழ் அழகன்
வேங்கட வெற்பின் விமலன் அருளால்
திருநிகர் துணையுடன் பெருமைகொள் மகனுடன்
இன்பம் பலவும் இயைபுடன் எய்தி
மன்னுக பெரியோய் வழிவழி
ஒன்றுங் கன்னித் தமிழுடன் உவந்தே!

காரைக்குடித் திருக்குறள் கழகத்தார் அளித்த

## வாழ்த்துப்பா

எத்திக்கும் புகழ்மணக்க
  உமதறிவால் தமிழ்வளர்த்தீர்;
முத்தமிழும் சொந்தமென
  முழுதுரிமை கொண்டீர். 1

சத்தான தமிழெழுதச்
  சரியான முறையுரைத்தீர்
பத்தாறும் நிறைவெய்தப்
  பாங்குடனே நீர்வாழ்வீர்! 2

இன்னமுதச் சொல்லாளன்
  இளமைநிலை எழிலாளன்
தண்ணமுதத் தமிழ்கற்குந்
  தமிழிளைஞர் தனியாசான் 3

கண்ணுற்ற காணுதே
  கருத்தில் உருவெழுதி
உன்னுல் தமிழ்கற்றே
  உயர்ந்திட்டோர் எத்துணைபேர்! 4

அன்னவர்கள் வாழ்த்தொலிக்க
  அட்டியுண்டோ புகழ்வளரச்
சொன்னேம் நல்வாழ்த்து
  சேர்ப்பீர் புகழதனை. 5

தங்கத் தமிழ்வளர்க்குந்
  தனிக்காரை நகர்வாழும்
எங்கழகம் இனிதாய்
  இயக்கிவரும் நல்விழவில், 6

அன்புப் பரந்தாம!
　　அளித்தீர் அறிவுரைகள்;
அன்பாசி தம்மோடே
　　எய்திட்டீர் அறுபதினை, 7

என்றவுடன் எய்திட்டோம்;
　　இறும்பூது வணங்கிட்டோம்.
கன்னித் தமிழன்னை,
　　காப்பாய் அவர்தம்மை! 8

இன்னுமோர் அறுபதாண்டும்
　　இழைப்பார் நும்மேனி
தண்ணொளிரும் தங்கத்
　　தமிழ்ப்பாட்டால் என்றிறைஞ்சி. 9

போடி நாய்க்கனூர்த் திருப்புகழ்ச் சபையார் அனுப்பிய

## வாழ்த்துப்பா

ஆராய்ந் தறிவின் அமுதமெம்பால்
　　முகந்தள்ளி யள்ளிச்
சீராயிருந்து வழங்கு கின்றான்
　　திருவள்ளுவர் வந்து
ஈராயிரம் பின் அணிமா
　　மதுரையில் இன்தமிழைப்
பாராய்ந்த சென்னைத் தலைநகர்
　　தந்த பரந்தாமனே! 1

தெள்ளத் தெளிந்ததமிழ்
　　வாரிதியாய்ச், சிறந்தபல
உள்ளத் தணையும்
　　மணிக்கருவூலம், உலகுபெற
வள்ளத்தியைய வழங்குகின்முன்
　　தமிழ்வள்ளுவன் போல்
பள்ளத் தணை நீர் அணையான்
　　உயர்ந்த பரந்தாமனே! 2

வாடும் பயிர்க்குமழை
　　பொழிந்தாலன்ன, மாமழைபார்த்து
ஆடும் மயிற்கு முகில்
　　திரண்டாலன்ன, ஆதரவு
தேடும் உயிர்க்(கு) அங்கயற்
　　கண்ணி தண்ணருள் சேர்வதுபோல்,
பாடுமெமக்குப் பரந்தாமனுர்
　　அருள்பாலித்ததே. 3

செங்கோட்டை, நெடுவயல் அச்சன்புதூர்த்
திருவள்ளுவர் கழகத்தார் அனுப்பிய

## வாழ்த்துப்பா

சான்றவர் தோன்று கின்ற
　　தொண்டைமண் டலத்தில் தோன்றி
ஆன்றபல் துறையுங் கற்றங்
　　கடக்கமோ டொழுக்கம் வாய்மை

தோன்றிட ஒழுகிப் பின்னர்த்
தூயதமிழ் நூலும் யாத்தே
ஈன்றோர்க்குப் புகழை ஈந்த
இன்சொல்லோய் வாழ்க! வாழ்க! 1

வண்டமிழ் மதுரை வந்து
வள்ளுவர் கழகத் தொண்டும்
கண்டவர் வியக்கு மாறு
கவினுறு நாட்டுத் தொண்டும்
ஒண்மையை விரும்பு வார்கட்
குதவுகல் லூரித் தொண்டும்
கொண்டுபல் புகழைப் பெற்ற
கோதிலாக் குரிசில் வாழ்க! 2

உயர்குடிப் பிறந்தோர் நட்பும்
உள்ளத்தில் தூய பண்பும்
வயங்குதண் இனிய சொல்லும்
வடுவிலா நடுவும் யார்க்கும்
பயமிலா உறுதி நெஞ்சும்
பார்ப்பவர்க் கெளிய நோக்கும்
அயர்விலா உழைப்புங் கொண்ட
அருட்பரந் தாம!வாழ்க! 3

மணிவிழா அழைப்புக் கண்டு
மனம்மிக மகிழ்ந்தோம் ஆங்கே
அணியுறத் திகழும் கூடல்
அண்ணலார் அருளி னாலே
மணிவிழாச் சிறக்கும் நுந்தம்
மாணுறு தொண்டு வாழும்;
திணியுறு புகழு மோங்கும்;
சிறந்துபல் லாண்டு வாழ்க! 4

சென்னைச் சூளை நகர இளைஞர் கழகத்தினர் அனுப்பிய

## வாழ்த்துப்பா

இரட்டை விருத்தம்

திருவார் சென்னைச் சூளைஒளிர்
சீர்சால் இளைஞர் கழகத்துத்
தொண்டன் வேளாண் குலதிலகன்
சொல்லும் பண்பு மிகநிறைந்தோன்
பெருமை திகழப் பல்லாண்டாய்ப்
பேரும் புகழுங் கருதாது
பிறங்கும் உலகில் மக்களெலாம்
பெரிதும் ஓங்கத் தொண்டாற்றித்
திருந்து வழிகள் கண்டாற்றும்
தேசன் பட்டக் கலைதேர்ந்தோன்
திருவார் சென்னைப் பதிநீங்கிச்
சீரார் மதுரைத் தொண்டாற்றும்
அருமை நம்பி பரந்தாமன்
ஆண்டு பலவும் வாழியவே!
அரிய மைந்தர் மனைவியுடன்
ஐயன் வாழி வாழியவே! 1

உலகோர் ஏத்தும் உத்தமர்தம்
ஒப்பில் வாழ்க்கை கற்றுய்ந்தோன்
உவப்போடச்சீர் தன்னிடமும்
உறவே நாளும் உழைத்திடுவோன்
பலருந் தென்சொல் கற்றிடவே
பகரும் நூல்கள் தருபுலவன்
பண்பார் கவிதை பற்பலவும்
பலருங் கற்க உதவுபவன்

சிலநல் லோரின் குழுவிலுளான்
சீரார் சென்னைப் புரசையினன்
சிரிப்போ டின்சொற் செல்வத்தான்
சிறுவர் சிறுமி பேரன்பன்
புலவர் முத்துத் தாத்தாவின்
பொற்பார் நண்பன் நற்றெண்டன்
புவனம் புகழ வளம்பெற்றே
பொலிவோ டுயர்ந்து வாழியவே! 2

சந்த விருத்தம்

வாழி வாழி எங்கள் அண்ணல்!
அறிஞர், வாழி வாழியே!
வாழி வாழி தமிழைக் காத்து
வளர்க்கும் தொண்ட, வாழியே!
வாழி வாழி எங்கள் நண்ப,
வள்ளல், வாழி வாழியே!
வாழி வாழி வையை மணலின்
நீடு வாழி வாழியே! 3

*சென்னைத் திருவள்ளுவர் கழகத்தார்*
*சென்னையில் நடத்தியபோது அளித்த*

## மணிவிழா வாழ்த்து

செந்தமிழ் மணங்கமழ் சென்னையம் பதியில்
புலவர் பலர்வாழ் புரசை யதனில்
பிறங்கி வளர்ந்த பெருந்தமிழ்ப் புலவ,
சங்கத் தமிழ்வலர் சற்குணர் வழிவரும்
மாணவ மணியே, வண்மை நலத்தோய்,

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றுத்
திருப்பவுற் பள்ளியில் சிறப்புடன் ஆசான்
பணியே செய்த பண்பின் பயனால்
மாடக் கூடல் மதுரை மாநகர்
திகழுநற் செல்வர் தியாக ராசர்
திருப்பெயர் தன்னில் திகழ்கல் லூரியில்
தமிழ்ப்பே ராசான் தகுபணி ஆற்றுந்
தண்டமிழ்க் கொண்டலே, பண்நிகர் பெரியோய்,
செந்தமிழ் நாட்டுச் செந்நாப் புலவருள்
அ. கி. ப. என்னும் அருங்குணச் செம்மலே,
குழந்தைகள் நலமுறக் கொஞ்சுந் தமிழில்
'முத்துப்பாடல்' எனுந்தேன் ஈந்தோர்
தண்டு தாங்கிடும் தளர்வுறு நிலையிலும்
தொண்டால் இளமையும் தோலா ஊக்கமும்
பெற்றொளிர் பெரியார் பீடுகொள் திருவினர்
மயிலை சிவமுத்து மனத்தொளிர் மணியே,
திருக்குறள் பரப்பத் தோன்றிய எங்கள்
சென்னைத் திருவள் ளுவர்கழ கத்துத்
தலைவராய் நீடு தகுபணி செய்வோய்,
வாழ்வைச் சுவைக்க வள்ளுவர் நெறியைத்
தமிழில் வடித்துத் தந்தொளிர் பெரும,
ஒல்லும் வகையால் ஓவா(து) அறவினை
செல்லும் வகையெலாம் செய்களன் றிசைத்த
செந்நாப் போதார் செந்நெறி பற்றி
உடல்பொருள் நலனை உன்னுத லின்றி
அறுபதாம் அகவை அடைந்து விளங்கினும்
'என்றும் உளவாம் இருந்தமிழ் தனக்கே
என்றும் தொண்டினை இளையா தாற்றுவன்'
என்றே பணிசெய் எழிலார் இளைஞரே,

தமிழே நிகர்த்த தக்கோர்க் கெல்லாம்
தமிழே அனையாய், தண்ணளி மிக்கோய்,
தங்கள் மனைவியும் தமிழ்வல மகனர்
சோமசுந் தரனும் மருகிசந் தானமும்
பெயரனும் சூழப் பெருநில மதனில்
பொதுமறை தந்தே புகழ்பெற வாழ்திரு
வள்ளுவர் வான்புகழ் உளநாள் வரைக்கும்
வண்டமிழ்த் தொண்டராய் வாழ்க! வாழ்கவே!

## மணிவிழா வாழ்த்து

வித்துவான் மு. வீரமணி, வணிகர், மதுரை.

அறுசீர் விருத்தம்

நண்ணிய மாண வர்கள் நலமுடன் சிறந்து வாழ
எண்ணருங் கல்வி தன்னை எழிலுடன் வாரி நல்கும்
அண்ணலா ராகும் எங்கள் அருட்பரந்தாமனரைப்
பண்பெலாம் நாடிச் சென்றே பாரினிற் சிறந்த அம்மா!

பலதுறை அறிவும் வாரிப் பாங்குடன் எமக்கு நல்கி
உலகியல் அனைத்தும் காட்டி உயரிய ஊக்கம் ஊட்டி
நலமுடன் வாழச் செய்த நற்பரந் தாம வள்ளல்,
நிலமகள் உள்ள மட்டும் நிகரிலா தினிது வாழி!

உளங்கவர் முறையில் நூல்கள் உவப்புடன் ஆக்கித் [தந்தார்
களங்கமில் உள்ளம் பெற்றுக் கவினுறச் சிறந்து நின்றார்

விளங்கிய அறிவின் மிக்கார் வேள்பரந்தாமவள்ளல்
வளர்தமிழ் உள்ள மட்டும் வளமுடன் வாழி வாழி !

தண்டமிழ் அன்னை போற்றும் தனயராய் ஆற்றல் மிக்க
தொண்டராய்ப் பணிகள் ஆற்றித் தூயநல்
[மணிவி ழாவும்
கண்டனர் எங்கள் செம்மல் கவின்பரந்தாம வள்ளல்
மண்டலம் உள்ள மட்டும் மாண்புடன் வாழி, வாழி !

வெண்பா

உற்றவொரு நண்பராய் ஊறுற்ற காலத்தோர்
நற்றுணையாய் எங்களுக்கோர் நற்குருவாய்—நற்குணக்
குன்ருகக் காட்சிதரும் கோதில் பரந்தாமர்
என்றென்றும் வாழ்க இனிது !

வண்டமிழ்ப் புலவர்கள் அனுப்பிய

## வாழ்த்துப்பாக்கள்

செந்தமிழ் நம்பி

கி. பழனியப்பன்,
புரவலர்,
மதுரைத் திருவள்ளுவர் கழகம்.

பாவலராய்ப் பாவிசைத்துப் பல்லோரும் இன்பமுற
நாவலராய்ப் பேசிடுவர், நற்றமிழின் — காவலர்
நம்பினேர்க் கென்றுமோர் நற்றுணையாஞ் செந்தமிழ்
நம்பி பரந்தாம ஞர். 1

திருவள் ளுவர்கழகம் திக்கெலாம் போற்றப்
பெருவிழாக் கண்ட பெரியார் — அருமைப்
பரந்தாம ஞரிங்குப் பல்லாண்டு வாழ
வரந்தர வேண்டுமிறை வா! 2

நன்மைசேர் ஞானி

*திராவிட மொழியறிஞர் வித்துவான்*
**வே. வேங்கடராசுலு ரெட்டியார்.**

அறுசீர் விருத்தம்

உண்மையென அறிந்ததனை அஞ்சாமல்
நேரேநின் றுரைக்கும் உள்ளத்
திண்மையன் நற்சிவகசிந் தாமணியின்
பொருள்தேர்ந்து தெரிப்போன் நூலின்
வண்மையுறு வடமொழியின் பயனையறிந்
துளமதித்தோன் வந்து கற்போர்க்
கெண்மையன்சற் குணவாசன் பால்கற்ற
பரந்தாம! இசைமிக் கோயே!

அன்பினில் அருளில் பேசும்
அமைதியில் யாவர் மாட்டும்
நண்பினில் ஏற்றுக் கொண்ட
நற்செய லாற்று கின்ற
முன்பினில் சொல்லும் வாய்மை
மொழியினில் மொழியுஞ் சொல்லின்
இன்பினில் நின்போல் உள்ளார்
யார்தமி ழாசான் மாருள்? 2

அறிவினில் அரிய வுண்மை
யறியக்கொள் அவாவில் ஐந்தன்
செறிவினில் கற்ற நூலின்
தெளிவினில் சினந்தார் மாட்டும்
பொறையினில் மாணாக் கர்க்குப்
போதிக்கும் ஆற்றல் சான்ற
நிறைவினில் அருமைத் தாய
நிறையினில் நிகர்வார் யாரே? 3

நாட்டினில் தொழில்கள் மிக்கு
நன்பயிர் செழித்து, மேலாம்
நாட்டினே டொப்பச் செய்யும்
நாயகர் செயலைப் போற்றல்
வாட்டமில் லாமல் மக்கள்
வாழ்வழி நூலை யாக்கல்
ஈட்டிய புகழின் நின்போல்
இருப்பவர் சிலரே நம்முள். 4

நல்லன பகைவர் மாட்டும்
நயனுற ஏற்றுக் கோடல்
அல்லன உற்றார் கூறின்
அகற்றுதல் நமது சொல்லில்
இல்லன பிறர்சொல் லுள்ளும்
ஏற்குதல் இனைய செய்கை
பல்லவும் நினது நூலிற்
பயின்றவர் அறிவ ரன்றே. 5

தொன்மையை விடாமை இந்நாள்
தோன்றிடு மவற்றுள் ஏற்ற
நன்மையைக் கோடல் இன்ன
நலக்கெலாம் உறையு ளானோய்!
நின்மனை வாழ்க்கை காணின்
நீதனி யோகி; அன்றேல்
நன்மைசேர் ஞானி என்பேம்;
நாங்களீ தறிவேம் அன்றோ? 6

நற்கலை கற்றுத் தேர்ந்து
நவில்திறன் படைத்துள் ளன்பாற்
கற்பிக்குந் தன்மை யெல்லாம்
கருவிலே படைத்த நின்றன்

சொற்படி யொழுகி நாளும்
துலங்குறு நூல்கள் நின்பால்
கற்பவர் தாமே மேலைக்
கடுந்தவம் புரிந்தோர் காணின். 7

வெண்பா

பன்னு புகழ்சேர் பரந்தாம! பாங்குறவே
மன்னு தமிழ்வளர்க்கும் மாண்பினேய்! — இன்னும்நீ
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியர்
எல்லா நலனும் இயைந்து.

எல்லார்க்கும் நல்லவர்

கவிஞர் எம். பி. மாஸ்கரேனஸ்,
தூத்துக்குடி.

எண்சீர் விருத்தம்

நல்லவரும் அல்லவரும் நயந்து போற்ற
நற்செயல்கள் அத்தனையும் நண்ணிப் பண்ணும்
எல்லவர்க்கும் நல்லவனும் எமது தாயாம்
இனியதமிழ்க் காதரவாய் நிற்கும் நண்பன்
சொல்லுவதில் எழுதுவதில் தனித்த சீரான்
துகளில்லாப் பரந்தாமன் தொடர்ந்திப் பூவில்
பல்லாண்டு பல்லாண்டு வாழ்வான் வேண்டிப்
பரனடியை எதுபொழுதும் பணிவோம் மன்னே.

பொலிந்தே வாழி

மதுரைத் தியாகராசர் கல்லூரித்
தமிழ் விரிவுரையாளர்
நா. பாலுசாமி,
எம். ஏ., எம். லிட்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பென்னும் இன்னுரையால்
மன்னுபுகழ் வள்ளுவனும் மாதேவன் நிற்காப்பப்
பன்னூற் பரந்தாம வாழி
பொன்னெடு பல்லாண்டு புவிதனிற் பொலிந்தே.

மணிவிளக்கே!

வித்வான் ஆ. இராசகோட்டியப்பன்,
விருதை.

பண்டைநாட் சான்றோ ரொப்பீர்!
பைந்தமிழ்ப் பரவை யுண்ட
கொண்டலே! பரந்தாமப்போர்க்
குரிசிலே! மதுரை வள்ளல்
தண்டமிழ்த் தியாக ராசர்
கல்லூரி மணிவிளக்கே!
எண்டரு கால மெல்லாம்
ஏற்றமோ டினிது வாழி!

அன்பன், நண்பன், ஆசான்

மதுரைத் துணைக்கலெக்டர்
சு. இராமச்சந்திர பத்தர், பி. ஏ.

அன்பன் பரந்தாமன் ஆர்ந்த குணக்குன்றம்
இன்பமிகு சொற்பொழியும் ஏரெழிலி — தன்புகழால்
பொன்னுடைப் போர்த்துப் புலவர்க் கணியாக
எந்நாளும் வாழ்க இனிது. 1

நண்பன் பரந்தாமன் நல்ல தமிழ்ப்புலவன்
பண்பு நிறைந்த பணிமொழியான் — எண்பலவாம்
புத்தகங்கள் தந்து புவிக்கு விளக்கானன்
நித்தலும் வாழ்க நிலத்து. 2

ஆசான் பரந்தாமன் ஆர்வமொடு மாணவர்க்குத்
தேசார் அறிவு தெருட்டுவோன் — நேசாரும்
அன்புத் தமிழ்மணங்கள் ஆற்றுவித்தோன் ஏற்றமிகும்
இன்பமுடன் வாழ்க இசைந்து. 3

நாவலர் ஏறே

பண்டித – வித்துவான்
தி. சங்குப் புலவர்,
சென்னை.

நேரிசை அகவல்

வாழியர் வாழியர் பல்லாண்டு வாழியர்
வாழி மதுரை வடக்காடி மறுகு
வள்ளுவர் கழக மிந்நாள் மணிவிழாக்
கொள்ளுநற் பேறு வாய்த்த குருசில்
சீரார் தியாக ராசர்கல் லூரிப்
பேரா சிரியருட் பிறங்கிய புகழோன்
அமிழ்தன தமிழ்மொழி யாய்ந்து வளர்க்குந்
தமிழகப் புலவர் குழுவருந் தகையோன்
கட்டுரை கவிதை மட்டில வியற்றிச்
சொற்பொழி வாற்றித் தூயநம் மொழியின்
அருமை பெருமை யமைநயங் காட்டி
ஒருமை யுளத்தோ டுயர்தனிச் செம்மொழி
இதுவென வறியார்க் கெடுத்து நாட்டிப்
புதுமைத் தொண்டு புரிந்துவாழ் பண்பினன்
பரந்தாம னுரெனப் பார்புகழ்
பேர்பெறு பெருந்தகை நாவலரேறே.

## நூல் போற்றும் பரந்தாமன்

திருவையாறு அரசர் கல்லூரி
தமிழ்ப் பேராசிரியர்
புலவர் வி. அ. அரங்கசாமி

தொண்டை நன் ஞட்டினிலே துலங்கிடுநற் [சென்னையினிற்
ருேன்றி நன்றே
பண்டைநம் நூல்போற்றும் பரந்தாம பண்பெல்லாம்
பரித்த தூயோய்
அண்டையரும் அன்புறவே அயலாரும் ஆர்வமுற
அமைந்த சான்ருேய்
கண்டவரும் கருத்துறவே கன்னலுறு தமிழ்த்தாயைக்
கருத்துட் கொண்டோய், 1

நாட்டிலுறு நற்றமிழர் நாகரிகம் பண்பாட்டை
நவிலும் நாவால்
ஏட்டிலுறு இசைபெறவே இயைந்திடுநின் கீர்த்தியினை
இசைக்க நின்று
பாட்டிலுறு பாவலர்கள் பகர்ந்தாலும் நின்தொண்டின்
பயனை ஓரின்
நாட்டிலுறு மிளைஞர்க்கும் நன்னெறியை நயப்புறுத்தும்
நலமே யன்ருே? 2

எண்மையுற இனிமைதர ஏற்றங்கொள ஆற்றல்பெற
இசைக்கும் தோன்றல்
வண்மையுற வழங்குநின்றன் வசையிலா ஆய்வுரை [யின்
வன்மை யாலே
நன்மையுற நந்தமிழர் நாவலரும் நாட்டமுற
நயந்தே பாரில்
உண்மையுற மணிவிழவின் உறுபுகழால் பல்லாண்டும்
உற்று வாழி! 3

அஞ்சா நெஞ்சன்

டாக்டர் ம. சுந்தரம்,
M.A., M.Litt., Ph.D.,
மதுரை.

அறுசீர் விருத்தம்

நெஞ்சில் உறுதி கொண்டிடுவான்
நேர்மை நெறியில் நின்றிடுவான்;
வஞ்சம் என்ப தறியா தான்;
வாய்மை ஒன்றே அறிந்திடுவான்;
கொஞ்சும் அன்பில் தாயனையான்;
குளிர்ந்த பண்பில் தமிழனையான்;
அஞ்சா நெஞ்சன் அ.கி.ப.
அவன்பேர் என்றும் வாழியவே! 1

ஐந்து பத்தும் ஒருபத்தும்
ஆன ஆண்டைக் கடந்திட்டான்;
முந்தும் வெகுளி, அழுக்காறும்
பகையை முற்றும் கடந்திட்டான்;
முந்திப் பிறந்த செந்தமிழாம்
மூரிக் கடலும் கடந்திட்டான்;
சிந்தை குளிர வாழ்த்தும்எம்
செந்நா வினையும் கடந்திட்டான்! 2

வ.உ.சி போல் வடிவுடையான்;
வாழ்க்கைக் கலையை வகுத்துரைப்பான்;
பாவல் லோனாய் மறுமலர்ச்சிப்
பாக்கள் தம்மை வடித்திடுவான்;
நாவல் லோனாய், எழுத்தாளர்
மன்றத் திற்கு நற்றுணையாய்
மேவு கின்றான் அவன் புகழே
மேலும் சிறந்து வாழியவே! 3

(வேறு)

கண்மணி குளிரும் வண்ணம்
காவலன் அ.கி.ப.வின்
நன்மணி விழாவைக் கண்டேன்;
நலமுடன் அன்னோன் இன்னும்
பன்னெடுங் காலம் வாழ்ந்து
பைந்தமிழ் மொழிவ ளர்த்துப்
பொன்விழா தனையும் கண்டு
பொலிகென வாழ்த்து கின்றேன். 4

ஆசிரியத் தலைமணி

திருக்குறள்மணி, வித்துவான்
அ. க. நவநீதகிருட்டினன்,
நெல்லை.

பைந்தமிழின் திருவுருவே யெனப்பொலியும் பரந்தாம!
பசுந்தமிழ்நூ லாசிரிய! என்றும்
நந்தமிழர் நலனுடிப் பலதுறையிற் பணிபுரியும்
நயப்போத காசிரிய! ஞானம்
சந்தமுற வழங்குமுயர் ஆசிரியத் தலைமணியே!
தழைமுப்பே ராசிரியக் குன்றே!
வந்தனையாம் புரியமணி விழாக்கொண்ட மணவாள!
வளர்தமிழைப் போல்வாழி நன்றே!.

நற்றமிழ் நாவல!

மேலைச்சிவபுரி க. செ. புலவர் கல்லூரி
விரிவுரையாளர்
வித்துவான் க. சங்கரநாராயணபிள்ளை.

உலகெலாம் வாழும் வகையினை யுணர்த்து முயர்தமி
ழாங்கில முடனே
இலகிடக் கற்றே கற்றவை யாய்ந்திங் கெளிதினில்
யாவரு முணர

நலமுறப் பயிற்றுந் திறலுறு சான்றோய்!
நற்றமிழ் நாவல! நயமார்
பலவகை நூல்கள் கவிதைகள் யாத்தாய்
பார்புக ழும்பரந் தாம்! 1

சீர்மிகு தமிழர் நாட்டினிற் றலைமைச் சிறப்புறு
சென்னைமா நகரில்
பார்புகழ் குடியிலுதித்தனை யுலகு
பண்பின ரிடத்ததே என்ற
ஏர்தரு மொழிக்கிங் கிலக்கிய மாகி
யெழில்மிகு மதுரைமா நகர்க்கண்
கார்நிகர் தியாக ராசர்கல் லூரிக்
கனித்தமிழ்ப் பணியிறு லுயர்வோய். 2

காரது கைம்மா றின்றியே பூமி
கவின்பெற வழங்குதல் போலப்
பாரது தமிழால் வளமுற வெங்கும்
பண்புசால் சொன்மழை பொழிவாய்
தாரது திகழும் திருமணந் தமிழால்
தக்கவா றியற்றுவித் திடுவாய்
ஏரது கொண்ட நின்றமிழ்ப்பணிக
ளினும்பல வெண்ணுதற் கெளிதோ? 3

முத்தமிழ்க் காவல் கொண்டசீர்ப் பெரியோன்
மூதறிவாளனும் முதல்வன்
இத்தரை வாழத் தமிழகப் புலவர்
குழுவது கண்டவ னின்சொல்
வித்தகன் விசுவ நாதமாந் தக்கோன்
வீறுடன் பேணுமக் குழுவில்
அத்த!நீ புரியும் செயல்களும் கண்டிங்
கன்பரே மிகமகிழ் கின்றேம். 4

நின்பெருந் தொண்டா லுளமிக மகிழ்ந்தே
நிலமிசைத் தமிழ்நலம் பேணும்

தென்பெரு மதுரைத் திருவள்ளுவர்கழ
கத்தினர் நின்செயல் போற்றி

அன்புடன் நின்ற றுபத் தாண்டி
னணிவிழா வியற்றல்கண் டுவந்தேம்;

இன்புட னிதுபோ லெண்பது நூறு
விழாக்களு மியைய நீவாழி! 5

என்றும் இளைஞர் இவர்

'தமிழண்ணல்'

இராம. பெரிய கருப்பன், M. A.,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

பூண்ட தலைப்பாகை வெண்மைப் பொலிவழகும்
பாண்டியரைப் போல்மீசை, பண்பொளிரும் புன்சிரிப்பும்
கேட்க நடுக்கும் கிளர்குரலும் கேட்பார்க்கு
வேட்கை உணர்த்தும் விரிவுரையும் யாமறிவோம்!
ஆற்றல் பெருந்தன்மை அன்பு கனிவுடைமை
தோற்றம் கடமையிலே கண்டிப் பிவையறிவோம்!
நல்ல தமிழ்வளர, நல்வாழ்வு பெற்றிலங்க
வெல்லத் தமிழ்வெல்ல வேண்டும் புதுநூல்கள்
தந்து தமிழுக்கோர் ஆபத்து வந்ததென்றால்
முந்தி எதிர்த்தழிக்க முன்னிற்கும் வீரர்
பரந்தாம னரென்று பாரறியும்! நாமும்
தரந்தோன்று நல்ல தமிழர் எனஅறிவோம்!
ஆண்டறுப தென்றநிலை இன்றறிந்தோம்!
[ஆயினுந்தாம்
பூண்ட இளமைப் பொலிவினையே வாழ்த்திடுவோம்:
"என்றும் தமிழரிவர்; என்றும் பெரியரிவர்;
என்றும் இளைஞரிவர் என்று!"

சென்னை H.U.C. உயர்நிலைப்பள்ளிச்
செயலாளர்
டி. ஆர். பார்த்தசாரதி, பி. ஏ.

பூமணம் மிகுந்த பொழில்பல நிறைந்து
நாமகள் விரும்பும் நல்லோர் பலர்வாழ்
தலைநகர் சென்னைப் புரசை தன்னில்
கலைபல கற்று நலமுடன் விளங்கும்
பரந்தா மனார்எனும் அறிஞர் பெருமான்
பரிந்துரை பகர்தமிழ்ப் பேராசிரியோய்!
வரையாது வழங்கும் வள்ளல் மனம்போல்
கரவாது மாணவர்க் குணர்த்தும் நல்லோய்!
'நல்லதமிழ் வேண்டுமா? என்னும் நயமிக்க
வல்லஒரு தமிழ்நூல் வரைந்தளித் திட்டோய்!
புரசைத் திருவள் ளுவர்தம் கழகம்
தரத்தில் பெரிதும் உயரப் புரிந்தோய்!
கூடல் மாநகர் சென்றும் ஆன்றோர்
பாடல் ஆய்ந்து பாங்குடன் விளங்கி
சீரும் சிறப்பும் ஒருங்கே பெற்றுப்
பேரும் புகழும் கொண்ட பெரியோய்!
தமிழகப் புலவர் குழுஉறுப் பினரில்
அமிழ்தம் போல ஒருவராய் இருந்து
தமிழ்ப்பணி யாற்றிடும் தண்டமிழ்ப் புலவோய்!
அறுபதாம் ஆண்டு நிறைவு விழாதான்
உறுவது கண்டே உள்ளம் மகிழ்ந்து
மாட்சிமை தங்கிய காட்சியைக் காணப்
புலவர் குழுவும் பேரா சிரியரும்
நாவலர் பாவலர் நல்லோர் யாவரும்
பொன்னுடை போர்த்திப் பாராட்டு நல்கும்
நன்னாடு வாழ்த்த வாழ்க வாழ்கவே!

என்னுசான்

மதுரை செந்தமிழ்க் கல்லூரித்
தமிழ் விரிவுரையாளர்
பண்டித, வித்துவான்
மு. உலகநாதன்

எண்ணில்லா விண்மீனக் கூட்டந் தன்னில்
எங்குமொளி பரப்புகின்ற நிலவைப் போன்றே
எண்ணில்லா மாணவர்க்கே கல்வி தன்னை
என்னுசான் பரந்தாமன் ஈத்து வந்தான்!
மண்ணகத்தில் பொருளைத்தான் ஈத்து வப்பார்!
மாத்தமிழில் புலவனிவன் அறிவு தன்னை
எண்ணில்லா வழிகளிலே மாண வர்க்கே
எடுத்துரைத்தான் புகட்டிநின்றான்! குமண வள்ளல்! 1

ஏத்துபுகழ் இளங்கோபோல் கவிஞன்! எண்ணும்
எழுத்தினிலே வள்ளுவன்போல் அறிஞன்! சொல்லில்
சாத்தனைப்போல் சொல்லுகின்ற புலவன்! வீரம்
தரும்பாட்டில் பாரதிபோல் புலமை யாளன்!
மூத்ததமிழ்ப் புலவர்களில் மூத்தோன்! மீசை
முறுக்கிவிட்ட பாண்டியனின் தோன்றல்! நாளும்
பாத்துறையில் பலகவிஞர் தம்மை ஆக்கும்
படைப்பென்னும் துறைக்கிவனோர் கவிதைச் சிற்பி! 2

என்னுசைக் களவில்லை! ஆனால் என்ன?
இவனின்னும் இதனைப்போல் புகழப் பெற்றுத்
தன்மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டு செய்து
தமிழுள்ள மட்டுமிவன் வாழ வேண்டும்!
பொன்னல்ல பொருளல்ல பெரிது வாழ்வில்!
புகழோடு பொதுவாழ்வில் ஈடு பட்டுத்
தன்னினத்தை உயர்த்துதற்கே உழைத்து நிற்கும்
தமிழாசான் பரந்தாமன் நீடு வாழ்க! 3

நாவுக்கரசன்

எண்சீர் விருத்தம்

எழில்மதுரை வள்ளுவனுர் கழகச் சிங்கம்!
எழுத்தாளர் மன்றத்தின் ஏந்தல்! சங்க
வழிமரபைப் பேணுதற்கேஉழைக்கும் தங்கம்!
வருதடையை உடைத்தெறியும் வீரர்! "காரைக்
கழகத்தின்" விழவிலுரை பொழியும் மேகம்!
"கருமுத்து" நிழல்மின்னும் அறிவுமுத்தாம்.
அழகுதமிழ் வளர்க்கும்நூல் குவிக்கும் எங்கள்
"அ.கி.ப" மூவெழுத்தின் அறிஞர் வாழ்க!

தவஞானச் செல்வர்களும் அறிஞர் பெருமக்களும்

அனுப்பிய

# வாழ்த்துரைகள்

மதுரையாதீனம் திருப்பெருந்திரு
சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய அடிகளார் அவர்கள்.

70 தெற்காவணி
மூலவீதி, மதுரை.

தங்கள் கழகத்து ஆட்சிக்குழுத் தலைவர் பேராசிரியர் அ. கி. பரந்தாமனர், எம். ஏ. அவர்கட்கு 14—1—62 ஞாயிற்றுக் கிழமையன்று மணி விழாக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளதை அறிந்து மகிழ்கின்றோம்.

திருவள்ளுவர் கூறியிருக்கின்ற பண்புகள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற அன்னருக்குத் திருவள்ளுவர் கழகத்திலிருந்தே பாராட்டு விழா கொண்டாடப் பெறுவது மிகவும் போற்றுதற்குரியது. அதனைப் பரந்த நோக்குடன் ஒழுங்கு செய்த அனைவரது பெருந்தகைமையினையும் பாராட்டுகின்றோம்.

அன்னருக்குத் திருவருளே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், உடல் நலமும், பொருள் 'நலமும், பிற நலங்களும் மென்மேலும் பெருகி, தமிழுக்கும் சைவத்திற்கும் இன்னும் அரிய ஆராய்ச்சி நூல்கள் பல இயற்றி, பல்லாண்டு வாழ்ந்து திகழத் திருவருள் பாலிக்குமாறு,

எல்லாம்வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதித்த விபூதிப் பிரசாதமும் குங்குமப் பிரசாதமும் எழுந்தருளச் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| முதுபெரும் புலவர் | 137, வடக்கு ராஜவீதி, |
| மாணிக்கவாசக அடிகள் | தஞ்சை. |

தமிழ்ப் பேராசிரியர், திரு அ. கி. பரந்தாமனர் M.A., அவர்களை 17 ஆண்டின்முன் எனக்கு நண்பராக்கியவர் வித்துவான், திரு நா. சீநிவாச முதலியார் அவர்கள் ஆவார்கள். பேராசிரியர் நற்பண்பு, பெருந்தகைமை முதலிய சீரெல்லாம் தமிழகத்திற்கு நன்கு தெரியும். அவருடைய ஆசிரியர் சற்குணர் தமது சற்குணமெல்லாவற்றையும் மொழிப்புலமையுடன் குழைத்தூட்டியுதவினர் எனலாம். எனினும், இயல்பாகவே நண்பர் குணசீலராகத் திகழ்பவர். அவரது தோற்றமே இவ்வுண்மையை உணர்த்தும்.

மணிவிழாக் கொள்ளும் மாண்பிற்கு உரியராய் இந்நாள் விளங்கினும், சதாபிடேக விழாவையும் பெற்றிலங்கும் புண்ணியம் உடையவர். ஆதலின், அந்நாள்காறும் இந்நாள் போல இனிது வீற்றிருப்பார், கச்சித்திருவேகம்பன் திருவருளால் இருமொழிப் புலவர் அ. கி. பரந்தாமனர் நீண்ட ஆயுளும், நல்லுடலும் பெருஞ் செல்வச் சிறப்பும், இன்ப வாழ்வும் எய்திச் சுற்றம் துணைசூழ நன்கு வாழ்க, வாழ்க, வாழ்க!

சென்னை அத்தியட்சர் மேதகு. மறைத்திரு. தாவீது. செல்லப்பா, M.A., D.D. அவர்கள்

தபால் பெட்டி எண் 702
சென்னை-6.

திரு பரந்தாமனாரை நான் அநேக ஆண்டுகளாக அறிவேன். 1937-ம் ஆண்டு நான் சென்னை வேப்பேரி தூயபவுல் பள்ளிக்குத் தலைவராக நியமிக்கப் பெற்ற போது, பரந்தாமனாரவர்கள் அப்பள்ளியில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராக விளங்கினார்கள். தமிழ்ப் பண்டிதர் களில் மிகவும் சிறப்பு வாய்ந்தவரெனச் சீக்கிரத்தில் கண்டுகொண்டேன். தமிழ்மட்டுமறிந்த தமிழாசிரியர் களுக்குத் தமிழின் மேன்மை பூரணமாகத் தெரிவது அரிது. ஆனால், பரந்தாமனாரவர்களுக்கு ஆங்கிலப் புல மையுமுண்டு. ஆதலின், தமிழின் மேன்மை நன்றாய் அறிந்து கொள்வதோடு கூட, தமிழைப் புதிய முறையில் போதிப்பதற்குச் சக்தி வாய்ந்தவராயிருந்தார். அவரு டைய ஏனைய குண இயல்புகளை நான் அதிகமாய் எடுத் துப்பேசத் தேவையில்லை. அவர் சிறந்த ஆசிரியராக பெயர்பெற்றதோடு கூட, தலைவர், மற்றும் ஆசிரியர், மாணவர்கள் முதலியோருடைய மதிப்பிற்குரியவராகவு மிருந்தார்.

தூய பவுல் பள்ளியில் இருக்கும் போதுதான், நான் அவரை அதிகமாய் உற்சாகப்படுத்த, அவர் எம். ஏ., தேர்வில் முதல் வகுப்பில் தேர்ந்தார். அதற்குப்பின் தியாகராசர் கல்லூரியினின்று அழைப்பு வந்தபோது நான் அவ்வழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு யாதொரு தடையும் செய்யவில்லை. எம் பள்ளியின் நஷ்டம், கல்லூ ரியின் லாபம்!

நான் இப்பாராட்டு விழாவிற்கு வந்து கலந்துகொள்ள முடியாவிட்டாலும், என் வாழ்த்துரையை மிக மகிழ்ச்சி யுடன் அனுப்பி வைக்கின்றேன்.

தி. சுந்தரம், B.COM.,
ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ் லிமிடெட்
இயக்குநரும்,
தியாகராசர் கல்லூரிச் செயலாளரும்.

த. பெ. எண் 160,
மதுரை-1

தெண்ணீர் வயல் தொண்டை நன்னாட்டில் பிறந்து, சங்கமிருந்து தமிழராய்ந்த மதுரை மாநகரில் பேராசிரியர் பணியேற்றுத் தாய்மொழித் தொண்டைத் தனிச் சிறப் புடன் ஆற்றிவரும் உயர்திரு. அ. கி. பரந்தாமனாருக்குக் கூடலம்பதித் திருவள்ளுவர் கழக ஆதரவில் மங்கல மணி விழா பொங்கல் நன்னாளில் நிகழ விருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர் பரந்தாமனார் சிறந்த இலக்கணப் புலவர்; இன்தமிழ்க் கவிஞர்; நாவன்மை மிக்கவர்; எழுத்தாற்றல் சான்றவர். இவ்வாறு கூறுதல் வெறும், புகழ்ச்சியில்லை; முற்றும் உண்மை. இதற்கு அவர் யாத்துள்ள வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், நல்ல தமிழ் எழுத வேண்டுமா, மறுமலர்ச்சிக் கவிதைகள், பேச்சாளராக, மதுரை நாயக்கர் வரலாறு முதலிய நற் றமிழ் நூல்கள் தக்க எடுத்துக்காட்டாக மிளிர்கின்றன.

மேலும், பேராசிரியர் அவர்கள் இன்முகங் காட்டிப் பண்பின் தலைபிரியாச் சொற்கள் கூறி, அன்புடன் எல் லாரோடும் பழகி "உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரியும்" பெருந்தன்மை வாய்ந்தவர்.

இத்தகை நற்பண்புகள் மிக்க பேராசிரியர் பரந்தா மனார் வையை மணலினும் பல்லாண்டு வாழ்ந்து, தாய் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் மேலும் பல அரிய தொண்டுகள் ஆற்றி, சிறப்பும் செல்வமும் சான்று, புகழ் மிக்கோங்கி இலங்குகவென ஆலவாய் அண்ணலின் திரு வருளை வழுத்துகின்றேன்.

முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம் திருச்சி–8

அன்பும், பண்பும் ஒருங்கே அமைந்த அருந்தமிழ்ப் புலவர் திரு அ. கி. பரந்தாமனர் அவர்கள் ஆசிரியத் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும், எழுத்துத் துறையிலும், பேச்சுத் துறையிலும், செயல் துறையிலும் தமிழ் கூறும் நல்லுலகிற்குச் செய்துள்ள தொண்டுகள் பல.

அவர்களது அறுபதாம் ஆண்டு விழாச் செய்தி என்னை மகிழ்விக்கிறது. ஆசிரியர் அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடனிருந்து நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டு செய்து, சிறப்பெய்தி வாழவேண்டும் என முழுமனதோடு வாழ்த்துகிறேன்.

செட்டிநாட்டரசர் ராஜாசர் செட்டிநாடு மாளிகை,
முத்தையா செட்டியார் அடையாறு, சென்னை–28.

தங்கள் அன்புள்ள 20—12—61-உ கடிதம் கிடைத்தது. சந்தோஷம்.

உயர்திரு. பரந்தாமனர் அவர்கட்கு 14—1—62-ல் பொன்னுடை போர்த்தி வாழ்த்து மலர் வழங்க ஏற்பாடுகள் செய்து வருவதைக் கேட்க மிகவும் சந்தோஷம். அறுபதாவதாண்டு நிகழ்ந்து கொண்டிருக்கும் இன்னாருக்குஇச்சமயம் இம்மணி விழாவை ஏற்பாடு செய்திருப்பது சாலப் பொருத்தமாகும். உயர்திரு. கருமுத்து தியாகராசர் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிவரும் உயர்திரு. பரந்தாமனர், எம்.ஏ. அவர்களுக்கு மேன் மேலும் பல நூல்கள் இயற்றவும், தமிழ்ப் பண்புகளை எங்கும் மேன்மேலும் பரப்பி வரவும் போதிய திடகாத்திரத்தையும் நீண்ட ஆயுளையும் ஆண்டவன் அருள வேண்டுமாயும், 14—1—62ல் நடக்கவிருக்கும் மணி விழா சிறப்பாக நடைபெறவேண்டுமாயும் பிரார்த்திக் கிறேன்.

டாக்டர் மு. வரதராசன்,
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

செல்லம்மாள் தெரு,
சென்னை-30.

அறிஞர் திரு. அ. கி. பரந்தாமனர் முப்பது ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டு புரிந்து வருபவர். நேர்மையும் ஒழுங்கும் இவர்தம் சிறந்த பண்புகள். இவர் இயற்றியுள்ள நூல்கள் மாணவருலகைப் பெரிதும் கவர்ந்துள்ளன. திருக்குறள் முதலான நூல்களிலும் தமிழர் பண்பாட்டிலும் பேரார்வம் கொண்ட புலவராதலால், இவருடைய எழுத்துக்கள் இளைஞர்களின் உள்ளங்களிலும் அத்தகைய ஆர்வத்தைத் தோற்றுவித்து வருகின்றன.

இவர் பழகுதற்கு இனியவர்; கருத்து வேறுபாடு பற்றிக் காழ்ப்புக் கொண்டறியாதவர்; புறங்கூறுதல் முதலான சிறுமைகள் அறியாதவர். பயிலும் நூல்களில் தெளிவு பெற்றது போலவே, வாழும் வாழ்விலும் தெளிவு பெற்று ஒழுக்கத்தால் விழுப்பம் எய்தியவர். இவர்தம் மணிவிழா இனிது நடைபெறுக. வாழிய பல்லாண்டு!

தெ. பொ. மீனட்சிசுந்தரன்,
பேராசிரியர்,
அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

அண்ணமலை நகர்

நண்பர் திரு. பரந்தாமனரைப் பல ஆண்டுகளாக அறிவேன். தமிழ் நன்ருக வளரவேண்டும் என்ற எண்ணம் கொண்டு ஆசிரியராகப் பணியாற்றி வருபவர். திரு. சற்குணர் என்ற பெருந்தமிழரின் மாணவர். அவர் எழுதியும் பேசியும் கற்பித்தும் செய்த தொண்டினைப் பாராட்டி அவர் அறுபதாண்டு நிறைவுறுங் காலத்தில் பொன்னடை போர்த்தி மகிழ்விப்பது கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி. 'அவர் வாழ்க நீடூழி!'

டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.ஏ., எம்.எல்.சி.,
தலைமையாசிரியர்,
ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-5.

திரு. அ. கி. பரந்தாமனர் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் செய்துள்ள தொண்டு பெருமையோடு பாராட்டுதற்குரியது. அவர் மாணவர்களையும் மற்றவர் களையும் நல்ல தமிழில் எழுத வேண்டுமென்றும் பேச வேண்டுமென்றும் எஞ்ஞான்றும் வலியுறுத்தி வந்தவர்; மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் வழிகாட்டியாக நல்ல உரைநடை நூல்கள் அமைத்துத் தந்தவர். அவரிடம் பயின்று பட்டம் பெற்றுள்ள நூற்றுக்கணக்கான மாணவர்கள் அவரை அடியொற்றிப் பெருந்தொண்டுகள் தமிழ்நாட்டிற்குச் செய்வார்களென எதிர்பார்க்கிறேன். அத்தொண்டிற்கு அவர்களை ஆளாக்கிவிட்டுள்ள பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் போற்றுதற்குரியவர்.

அண்மையில் மணிவிழா காண இருக்கும் அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து சிறந்த நற்பணிகள் பல புரிதற்கு இறைவன் அருள் புரிக என வழுத்துகின்றேன்.

டாக்டர் மா. இராசமாணிக்கனர்,
M.A., L.T., M.O.L., PH.D.,
துணைத்தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.
சென்னை-5

பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்களைக் கடந்த 30 ஆண்டுகளாக நான் அறிவேன். சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. ச. த. சற்குணர் அவர்களின் மனத்துக்கிசைந்த முதல் மாணவராக நமது பேராசிரியர் விளங்கினர். இவர் உழைத்து முன்னேறியவர்; ஆங்கிலமும் தமிழும் வல்லவர்; உயர்ந்த எழுத்தாளர்;

சிறந்த ஆராய்ச்சியாளர்; கைதேர்ந்த கணக்காயர்; இனியவை கூறல், அடக்கமுடைமை, பண்புடைமை, அன்புடைமை, அருளுடைமை முதலிய நற்பண்புகளுக்கு இலக்கணமாகத் திகழ்பவர்.

பேராசிரியர் எழுதியுள்ள "வாழ்க்கைக்கலை", "நல்ல தமிழ் எழுத வேண்டுமா?", "மதுரை நாயக்கர் வரலாறு" என்னும் நூல்கள் இவருடைய ஆராய்ச்சி அறிவை நன்கு புலப்படுத்துவன. இவர் இயற்றியுள்ள கவிதை நூல்கள் இவரது செய்யுளியற்றும் திறனை நன்கு தெரிவிப்பன.

பேராசிரியர் ஆணித்தரமாகப் பேசும் ஆற்றலுடையவர்; தம் கருத்துக்களை அஞ்சாது கூறுபவர். **தமிழ்—தமிழர்—தமிழகம்** இவை நன்முறையில் வளர்ச்சிபெற வேண்டும் என்பதுவே இவரது வாழ்க்கையின் குறிக்கோள். இந்த அறிஞர் கைம்மாறு கருதாமல் தமிழ்த் தொண்டு செய்து வருபவர்.

இப்பெரியார் மணிவிழா நன்முறையில் நடைபெறுக! என் மனத்துக்கியைந்த "பெரிய அண்ணு"வாகிய பேராசிரியர் பரந்தாமனர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்து வரும்படி அம்மையப்பர் திருவருளை அகங்குழைய வேண்டுகின்றேன்.

இப்பெரியாருக்கு மணிவிழா நிகழ்த்தி மகிழும் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினர்க்கு என் நன்றியும் வணக்கமும் உரிய.

டாகடர் வ. சுப. மாணிக்கம்,
எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.,
முதல்வர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

திரு. அ.கி. பரந்தாமனர் மொழி மரபும் பண்பு மரபும் குன்றாத தமிழ்த் தோன்றல்; தமிழ் கற்றுத் தமிழ் காத்துத்

தமிழாக்கித் தமிழ் பரப்பியவர்; நட்புக்கு இனியவர், இகலற்ற புலமையர்.

தக்க கழகம் தக்கவர்க்கு மணிவிழா செய்வது எல்லா வகையானும் போற்றத்தக்கது.

பரந்தாமனர் வரலாற்றறிவு மிக்க தமிழ் ஆசிரியர். அத்துறையிற் பெரும்பணி செய்ய வேண்டும் என வாழ்த்துவன்.

மகாவித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை,

36, முத்தியாலு செட்டி தெரு,
புரசைப்பாக்கம்,
சென்னை-7.

அன்பர் அ. கி. பரந்தாமனரவர்கள், எம்.ஏ., அறுபதாம் ஆண்டு எய்தியமைக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் மகிழ்ந்து மணிவிழாக் கொண்டாடவிருப்பதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகின்றேன்! பண்பார் புலவர் பரந்தாமனர் வாழ்வு பண்பும் பயனும் வாய்ந்தது. பல்லாற்றானும் சிறந்து விளங்கும் அவரது தமிழ்த் தொண்டு இன்னம் பல பெரும்பாராட்டுக்குரியது. திருவள்ளுவர் வகுத்துக் காட்டிய வாழ்க்கைப் பாதையில் வழுவாது நின்று வாழ்ந்துவரும் பேராசிரியர் பரந்தாமனரைப் பாராட்டுவதில் மதுரைத் திருவள்ளுவர் கழகம் முன்னேடியாய்த் திகழும் முதன்மையைப் பெரிதும் பாராட்டுகின்றேன்!

'பண்புடையார்ப் பட்டுண்டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்பது வள்ளுவர் வாய்மொழியாதலின், தமிழ் நாடு தம் தொண்டால் ஏற்றமுற்றிலங்கப் பரந்தாமனர் பல்லாண்டு நலனெலாம் பெற்று வாழ இறைவன் திருவருள் துணை நிற்க வேண்டுமென அதனை மனமொழி மெய்களாற் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேன்!

அ. மு. பரமசிவானந்தம்,
எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

'தமிழ்க்கலை இல்லம்',
சென்னை-30.

அமைதியே உருவாக, ஆரவாரமற்று, அன்புப் பணியாற்றும் நல்லாசிரியர்தம் அறுபதாம் ஆண்டு நிறைவு அறிந்து மகிழ்கின்றேன். மணிவிழாத் தலைவராகிய அன்பர் பரந்தாமனர் வாழ்வாங்கு வாழும் நல்லவர். கொள்வோர் கொள்வகை அறிந்து மாணவருக்குத் தேவையான நல்ல கல்வியைத் திறம்படக் கற்பிப்பவர். பலநூல்களின் நல்லாசிரியர். நாடும் தமிழும் நாமும் வாழ வேண்டுமென உளத்தால் நினைத்து உற்ற செயலாற்றும் வல்லவர். அவர் மணிவிழா அறிந்து தமிழ்ச் சமுதாயம் மகிழக் கடமைப்பட்டுள்ளது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மங்காது ஓங்கித் திகழும் வண்டமிழினைப் பரப்பும் தண்டமிழ்ச் செல்வராகிய அ. கி. பரந்தாமனர் அவர்கள் அத்தமிழின் இனிமைபோன்று இன்னும் பன்னெடுநாள் பாரில் சிறந்து ஓங்கி உயர்க என வாழ்த்துகின்றேன்.

வாழி நீடுழி!

ச. சச்சிதானந்தம் பிள்ளை,
B.A., L.T.,

175-A, லாயிட்ஸ் ரோடு,
சென்னை-14.

மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு அ. கி. பரந்தாமனரவர்கட்கு மணிவிழாக் கொண்டாடத் தங்கள் "திருவள்ளுவர் கழகம்" முன்வந்திருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். புலவரைப் போற்றும் புகழ்மிகப் படைத்த மதுரை மாநகரில் இவ்விழா நிகழ்வது சாலப் பொருத்தமே.

பேராசிரியர் பரந்தாமனார் பல்வகைச் சிறப்புகளை உடையவர். சுருங்கச் சொல்லின், "ஆத்திரையன் பேராசிரியன் பாடிய பொதுப் பாயிர"த்தில் குறித்துள்ள "பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியர்" தம் பண்புகள் பல பேராசிரியர் பரந்தாமனார்பால் விளங்குகின்றன. அவர் செய்துவரும் அரிய அவ்வொழுக்கத் தொண்டுகளைப் பலரறியப் பாராட்டுதல் நாட்டு நலனைப் பெருக்குவதாகும்.

மனித வாழ்க்கையில் முதலறுபது ஆண்டுகள் ஆயுளின் முற்பகுதியேயாகும் என்பது பண்டையோர் கொள்கை. நமது பேராசிரியரவர்களும் குறைந்தது இன்னும் அறுபதாண்டு காலமேனும் புவியினுக்கொளியாய்—புண்ணியம் பெருக்கும் புனித சக்தியாய்—இனிது வாழ அங்கயற்கண்ணி பங்கர் அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்து, வாழ்த்துகின்றேன்.

தி. வீ. இராமசந்திரன், M.A., B.L., J.P.,
24, கரியப்ப முதலி தெரு, சென்னை–7.

திரு. அ. கி. ப. அவர்களின் மணிவிழா நிகழுதல் குறித்தும், அவ்வமயம் அவர்தம் தமிழ்த் தொண்டுதனைப் பாராட்டி மலரொன்று வெளிவருதல் அறிந்தும் நான் பேருவகை எய்துகிறேன். இன்று நேற்றல்ல, ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக, அவர் பள்ளியிறுதி வகுப்பிற் பயின்ற காலந்தொட்டே, அவரை அறிந்திருக்கிறேன். தமிழுலகுக்கு அவர் ஆற்றிய பணியினைப் பற்றியும் அவர் குணநலன்களைப் பற்றியும் ஒருசில கூறுவதனிலும் மகிழ்ச்சி தருவது பிறிதொன்றில்லை.

காலஞ்சென்ற தமிழறிஞர் திரு. சந்தியப்ப முதலியார் அவர்களின் பெயரன் என்றபின், திரு. பரந்தாமனார் அவர்

களின் தமிழறிவுக்கும் தமிழார்வத்துக்கும், வித்தினின்றும் வேறுன்றிய விருக்ஷம் என்றுதானே உருவகம் கூற இயலும்? திரு. அ. கி. ப. அவர்களின் தமிழறிவுக்குக் கால்கோள் விழா நடாத்திய பெருமை ஆசிரியப் பெருந் தகை திரு. ச. த. சற்குணர் அவர்களையே சாரும். தம் ஆசிரியரைப் போன்றே திரு. அ. கி. ப. அவர்கள் பெரும் புகழுக்கும் காரணமாயிருப்பது யாதெனின் இவரது நூல் களில் இலக்கிய மேற்கோள்கள் எடுத்தாளப்படுவதும், ஆங்கில இலக்கியக் கலப்பினால் தமிழிலக்கியம் சிற்சில சமயம் புதுமெருகு பெறுவதை இவர் உணர்ந்திருப்பதும் ஆகும்.

திரு. சற்குணர் அவர்கள் அளித்த ஊக்கம் இவர் பள்ளியிறுதித் தேர்வுக்குப்பின் ஆசிரியத் தொண்டு ஏற்கக் காரணமாயிருந்தது. பின்னர் இவர் அதை விடுத்து இடைநிலை, பி. ஏ. வகுப்புகள் தேறித் தில்லையில் மீனைக்ஷி பயிற்சிக் கல்லூரியில் பயின்று மீண்டும் ஆசிரியப் பணி ஏற்றார். தம் ஆசானின் வாக்கை ஏற்றுத் தமிழில் எம்.ஏ. பட்டத்தை முதல் வகுப்பில் திரு. அ. கி. ப. பெற் றதும் இவர்தம் சிறந்த எதிர்காலம் தெற்றெனத் தெரிந் தது.

திரு. பரந்தாமனர் உண்மைத் தமிழறிஞர். இவர் கல்வி இன்றும் முற்றுப்பெறவில்லை. இன்றும் இவர் ஓய் வின்றிப் படிக்கின்றார். எந்தத் துறையிலும் இவர் அறி யாதது மிகச்சில. இவர் படித்துத் தெரிகின்றார்; தெரிந்து உரையாற்றுகின்றார்; மற்றைய காலங்களில் நூல்களும், கட்டுரைகளும் எழுதிக் குவிக்கின்றார். தமிழ்த்தொண்டு இவரது பொழுதுபோக்கு. இத்தகைய இவரது தொண்டு பெரும் பொருளீட்ட வேண்டுமென்ற அவாவினால் அல்ல; கற்றதைக் கற்பிக்க வேண்டுமென்ற விசால நோக்கினால் என்று கூறுதல் மிகையாகாது.

முதற்கண் இவர் இயற்றிய 'தமிழ்ப்பெருந்தேவி திருப்பள்ளியெழுச்சி' இவரிடம் கரந்துறைந்திருந்த திறனை வெளிப்படுத்தியது. இன்று இவரது நூல்களும் கவிதைகளும் பெருமளவில் வெளிவந்து மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து உவகையூட்டுகின்றன. மிகச் சரளமான முறையிலே தங்குதடையின்றிக் காட்டாற்று வெள்ளமெனப் பாய்ந்து செல்லும் இவரது தமிழ் நடை மிகவும் போற்றற்குரியது. இவரது வெண்பாக்கள் தனிச் சிறப்புடையன. திரு. அ. கி. ப. அவர்கள் பள்ளி மேல் வகுப்புக்களுக்குப் புத்தகங்கள் வரைந்ததோடு நில்லாது, தமிழ் மாணவர்களுக்குப் பயனுள்ளதான 'நல்லதமிழ் எழுத வேண்டுமா?' என்னும் சிறந்ததொரு நூலும் இயற்றியுள்ளார். தமிழ்த் தாயின் புதல்வர்களை மேடைப் பேச்சு வல்லுநர்களாக்கப் 'பேச்சாளராக' என்னும் இவரது நூல் மிகவும் உதவும். இவரது 'மறுமலர்ச்சிக் கவிதைகள்' இவரது கற்பனைச் செறிவையும், 'மதுரை நாயக்கர் வரலாறு' இவரது சரித்திர ஆராய்ச்சித் திறனையும் வெளிப்படுத்துகின்றன.

உழைப்பும் ஊக்கமும், ஆக்கம் தரத்தவறுவதில்லை. திரு. பரந்தாமனர் அவர்களது இன்றைய நிலையே இதற்குச் சான்று. ஆனல், வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பும் பரந்த நோக்கையும், கிடைத்ததைக் கொடுத்து விடும் பண்பையும், இவரது நண்பர் சிலர் தவருகப் பயன்படுத்தி இவரைச் சில முறை சிக்கலில் விட்டிருக்கின்றனர். இவர் என்றுமே தம் மாணவர்களிடம் கடுமை காட்டாதவர். தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும், கல்லூரி விடுதித் தலைவராகவும் இவர் மாணவர்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார் என்ருல், அது அன்பினுல் அன்றி அடக்குமுறையால் அல்ல. தமிழ் வளர்த்த மதுரையில் திரு. பரந்தாமனர் தமக்கென ஒரு தனி இடத்தைத் தம் மேடைப் பேச்சுக்களாலும், தாம்

இயற்றிய பல நூல்களாலும் தேடிக்கொண்டிருக்கிறார். இவர் தலைமையில் மணம்செய்து கொண்டோரும், இவரிடம் மணவாழ்த்துப் பெற்றோரும் எண்ணிறந்தோர்.

கணக்கிலடங்காத இவர்தம் நண்பர்களுடன் நானும் கலந்து, திரு. அ. கி. பரந்தாமனார் அவர்களது நீண்ட ஆயுளுக்கும், நிறைந்த செல்வத்துக்கும் எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகின்றேன்.

அண்ணல்
ஆ. மு. கோட்டிலிங்கனார், 20, பெருமாள் நாய்க்கன் தெரு,
சமூக நலத் தொண்டர், சென்னை -7.

உயர்திரு. அ. கி. பரந்தாமனார், எம்.ஏ. அவர்கள் தமிழகத்துப் பேரறிஞர்களுள் ஒருவர். அவர் தமிழுக்கும் தமிழகத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் பல.

நான் பரந்தாமனாரை நாற்பதாண்டுகளாக அறிவேன். நாங்கள் இருவரும் பள்ளி நண்பர்கள். அவர் சென்னைத் திருப்பவுல் உயர்நிலைப் பள்ளியில் படித்த பின்னர்ச் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் சிதம்பரம் மீனாட்சி கீழ்த்திசைப் பயிற்சிமுறைக் கல்லூரியிலும் படித்தார். நண்பர் சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ச. த. சற்குணர் அவர்களிடம் தமிழை முறையாகக் கற்றார்.

தமிழுணர்ச்சி மங்கியிருந்த அக்காலத்தில் நாங்கள் சென்னையில் 1925-ஆம் ஆண்டில் தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்கம் நிறுவித் தமிழ் இலக்கிய வகுப்புக்கள் நடத்தியதோடு, சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட்டிருந்தோம். பரந்தாமனார் பொதுக்காரியதரிசியாக இருந்து சங்கத்தை நடத்தினர். அவர் மதுவிலக்குப் பிரசாரத்திற்கு வேண்

டிய பாட்டுக்கள் இயற்றியும் பேசியும் வந்தார்; மற்றும் சென்னைப் புரசையில் உள்ள கிராமச்சேரி, பொன்னன் சேரி ஆகிய இடங்களில் இரவு முதியோர் பள்ளிக்கூடங் கள் நடைபெறத் துணை நின்றார். இச்சமூக ஊழியத்திற்கு வித்திட்டவர் எங்கள் பள்ளித் தலைவர் திரு. மெக்பர்சன் ஆவார்.

இளமை முதற்கொண்டே பரந்தாமனாருக்குக் கவிதை இயற்றுவதில் ஈடுபாடுண்டு. அவர் தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்க வாயிலாக வெளியிட்ட "தமிழ்ப் பெருந்தேவி திருப்பள்ளியெழுச்சி'யைப் பாராட்டி, அக் கால அமைச்சர் திரு. சிவஞானம் பிள்ளை அவர்கள் அப் பாடல் போட்டி ஏற்படுத்தச் செய்து, அப்போட்டியில் வெற்றி பெற்றவருக்குத் தங்கப் பதக்கம் பரிசளித்தார். நண்பருக்குப் பாரதியார் பாடல்களும் திருக்குறளும் மிகவும் பிடித்தமானவை.

திரு. பரந்தாமனார் காட்சியில் எளியர்; பேச்சில் இனியர்; நட்பின் சிகரம்; அறிவில் வித்தகர்; மனத்தால் உத்தமர்; பண்பில் சிறந்தவர்; "அடக்கம் அமரருள் உய்க் கும்; அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்." என்னும் குறளுக்கு இலக்கணமாய் விளங்குபவர்.

ஆயிரம் பிறைகண்ட அ. கி. ப. அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து பல அரிய நூல்களைத் தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

பூ. ஆலால சுந்தரம் செட்டியார், M.A.,
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைக் கிறித்துவக் கல்லூரி.

'சிவனகம்'
5/19, பேராசிரியர் காலனி,
அகரம் வீதி,
தாம்பரம்.

உயர்திரு. அ. கி. பரந்தாமனார் அவர்களின் அரிய நட்பினை யான் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் பெற்றுள்

ளேன். யானும் அவரும் 1928-29-ம் ஆண்டில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் செயலாளர்களாகப் பணிபுரிந்தோம். சென்னைக்கு அடுத்துள்ள புரசைப்பாக்கத்தில் என் நண்பர் தென்னிந்திய தமிழ்க் கல்விச் சங்கம் (South Indian Tamil Academy) என்ற ஒரு சங்கத்தை நிறுவி அதன் வாயிலாகப் பல சிறப்பட்ட தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார். இச்சங்கத்தின் சார்பில் பேராசிரியர் ச. த. சற்குணர் B. A. அவர்கள் ஞாயிறு தோறும் தமிழ் வகுப்பு நடத்தி வந்தார்கள்; பத்துப் பாட்டு, புறநானூறு, தொல்காப்பியம் முதலிய நூல்களுக்கு அவர் விளக்கவுரை தந்தார்கள். திரு. சற்குணர் நடத்திய அந்த வகுப்பில் படித்தவர்களுள் பலர் தற்போது தமிழ்ப் பேராசிரியர்களாக இருந்து தமிழ்ப் பணி புரிந்து வருகின்றனர்கள். அவர்களுள் ஒருவர் என் அரிய நண்பர் பரந்தாமனர்.

திரு. பரந்தாமனர் சென்னைத் திருப்பவுல் உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழ் ஆசிரியராகப் பணி ஆற்றிய போது மாணவர்களுக்குத் தமிழ் மொழியினைக் குழைத்து ஊட்டினர் என்பேனகில் அது புனைந்துரையன்று. அவருடைய மாணவர் பலர் தமிழில் செய்யுள் இயற்றும் திறமை பெற்றனர். திரு. பரந்தாமனர் சென்னையில் திருவள்ளுவர் கழகம் என்ற ஒரு கழகத்தைத் தோற்றுவித்தார். ஞாயிறு தோறும் அங்குத் திருக்குறள் வகுப்பு இன்றும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. தம் ஆசிரியர் ச. த. சற்குணரிடத்தில் பரந்தாமனருக்கு அளவுகடந்த அன்பு உண்டு. அவ்வாறே திரு. சற்குணர் அவர்களும் திரு. பரந்தாமனரைத் தம் மகன் போன்று பேணி வந்தார். என் நண்பர் சிறந்த பேச்சாளர் மட்டும் அல்லர், சிறந்த எழுத்தாளரும் ஆவர் என்பதற்கு அவர் இயற்றியுள்ள நூல்களே சான்றாக அமைந்துள்ளன. "தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து" என்பதற்கு

ஏற்ப என் நண்பர் தொண்டை நாட்டிற் பிறந்து, பயின்று, தமிழ்த் தொண்டாற்றிப் பிறகு "பாண்டிய நாடே பழம்பதியாகும்" என்ற பாண்டிய நாட்டிற்குச் சென்று அங்குள்ள மதுரைமா நகரத்தில் பல சிறப்புற்ற தமிழ்த் தொண்டு ஆற்றி வருகின்றார்கள். அவர் தற்போது 60 ஆண்டுகள் நிரம்பப் பெற்றார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. என் நண்பரின் தோற்றம் சிறந்த தமிழ் வீரரின் தோற்றத்தை நினைப்பூட்டும். முறுக்கப்பட்டுள்ள அவரது மீசை அவர் வீரத்திற்கு அறிகுறியாகும். என் நண்பர் உழைப்பு, அறிவுடைமை, பணிவுடைமை, குரு பக்தி, இடுக்கணழியாமை ஆள்வினையுடைமை, ஈகை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று முதலிய பண்புகள் நிரம்பப் பெற்றவர். இத்தகைய பண்புகள் நிரம்பப் பெற்றுள்ள என் அரிய நண்பரின் மணி விழா சிறக்க நடைபெறுவதாக. அவர் இன்னும் பல தமிழ்த் தொண்டாற்றிப் பன்னெடுங்காலம் சிறக்க வாழுமாறு அம்மையப்பராக விளங்கும் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரரை யான் என் மனமொழி மெய்களான் இறைஞ்சுகின்றேன்.

வித்துவான் நா சீனிவாசன், சென்னை-21.
தமிழாசிரியர்,
சர். தியாகராயர் உயர்நிலைப்பள்ளி,

தமிழ்ப் பேராசிரியர் அ.கி.ப. அவர்கட்கு மணி விழா நடைபெறும் செய்தி யறிந்து நான் கழிபேருவகை கொள்கின்றேன். திருவருட் செல்வர் அ. கி. ப. அவர்களுடன் 1939-ம் யாண்டிலிருந்தே நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றேன். சென்னையிலுள்ள வேப்பேரியில் சிறப்புடன் விளங்கும் திருப்பவுல் உயர்நிலைப்பள்ளியில் இவர்களின் தலைமையின் கீழ் எட்டுயாண்டுகள் துணைத் தமிழாசிரியனாகப் பணிபுரியும் பேறுபெற்றேன். அன்று முதல் இன்றுவரை இவர்கள் எளியேன் வாழ்க்கைக்கோர் நல்வழிகாட்டியாகத் திகழ்கின்றார்கள்.

உயர்திரு. அ.கி. ப. திருப்பவுற் பள்ளியின் பழைய மாணக்கர். இவர்கள் எம்.ஏ. பட்டம் பெறும்வரையில் அப்பள்ளியிலேயே தமிழ்த் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்தார்கள். கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும், மலர் நிகர் மாட்சியும், உலகியலறிவும், இன்னோரன்ன பிற உயர்குணங்கள் யாவும் ஒருங்கமையப் பெற்ற உத்தம சீலர்; கொள்வோன், கொள்வகை யறிந்து கற்பிக்கும் பேராற்றல் படைத்தவர்.

அந்தக் காலங்களில் உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரி யர்களின் கூட்ட நிகழ்ச்சிகள் யாவும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன; ஏன், நாடு உரிமை பெற்றுள்ள இப் போதுங்கூட ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. ஆனால், நம் நாடு உரிமைபெறுதற்கு முன்னரேயே திருப் பவுற் பள்ளியின் முதல்வராக விளங்கிய மறைத்திரு. தாவீது செல்லப்பா ஐயரவர்கள் நடத்திய ஆசிரியர் கூட்டங்களிற் பெரும்பான்மையானவை நம் மணி விழாத் தலைவர் திரு. அ. கி. ப. அவர்களின் செந்தமிழ்ச் சொற் பொழிவுகளின் வாயிலாகவே முடிந்தன. ஒருநாள் திருப் பவுல் உயர்நிலைப்பள்ளி முதல்வர் அவர்களின் தலைமை யில், திரு. அ.கி.ப. அவர்கள் "தமிழ் கற்பிக்கும் முறை" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். அவ் விரிவுரையைச் செவிமடுத்த ஆசிரியர்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தனர். "இரண்டா யிரம் யாண்டுகட்கு முன்னரேயே தமிழர், கற்பிக்கும் முறையைச் செவ்வனே அறிந்து கற்பித்தனர்" என்பதை நம் சொற்பொழிவாளரின் வாயிலாக அறிந்த பள்ளியின் முதல்வர் அவர்கள், திரு. அ. கி. ப. அவர்களின் புலமை யினையும் கற்பிக்கும் ஆற்றலினையும் வியந்து போற்றி னர்கள்.

"அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும் மிகை மக்களால் மதிக்கற்பால" என்பதற்கேற்ப திரு. அ.கி.ப.

அவர்கள், ஆன்றவிந்தடங்கிய தமிழ்ச் சான்றோர்களாகிய திரு. வி. க., ச. த. சற்குணர், நாவலர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் போன்ற புலவர் பெருமக்களின் நன்மதிப்பினைப் பெற்று விளங்குகின்றார்கள். தமிழ்ப் பெரியார் திரு. வி.க. அவர் கட்கு மணிவிழாச் சிறப்பினை நடத்தி அவர்கள்மீது "திருத் தொண்டர் ஆற்றுப்படை" என்னும் பாமாலை இயற்றிச் சூட்டி அவர்களின் தூய்மையான உள்ளத்தில் நிலைத்து விளங்கும் பேற்றினைப் பெற்றுத் திகழ்கின்றார்கள்.

பின்னர், திரு. வி. க. அவர்கள் கண்ணிழந்து நோய் வாய்ப்பட்டு மரணப்படுக்கையிலிருந்தபோது திரு. அ.கி.ப. அவர்களும் அடியேனும் சென்று அவர்களைக் கண்டோம். அப்போது திரு. வி. க. அவர்கள் தம்மீது இவர்கள் இயற்றிய தொண்டர் ஆற்றுப் படையின் செய்யுள் நயத்தைப் பாராட்டிப் பேசியதோடு அதன்படி ஒன்று தேவையென்றும் சொன்னார்கள். அச்செய்யுட் பகுதி இவர்கள் இயற்றித் தொகுத்துள்ள 'மறுமலர்ச்சிக் கவிதைகள்" என்னும் நூலிற் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் திரு. அ. கி. ப. அவர்கள் புலவர் பெருமக்களின் நன்மதிப்பினைப் பெற்றொழுகும் நற்றவச்சீலர் என்பது நன்கு விளங்கும்.

நம் நாட்டில் ஆங்கிலப் புலமை பெற்றவர்கள் பலர் உள்ளனர். ஆயினும், அவருள் மிகச் சிலரே தாம் பெற்ற மேனாட்டுப் புலமைச் சிறப்பினைத் தமிழ் நாட்டிற்களித் தனர். அவர்களுள் நம் மதிப்புக்குரிய திரு. அ.கி.ப. அவர் களும் ஒருவராவார்கள். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங் கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்பதற் கிணங்க, இவர்கள் மேனாட்டு விஞ்ஞானிகளின் வியத்தகு செயல்களை ஆங்கிலம் அறியாத தமிழர்களுக்குப் பயன்

படும் முறையில், 'மானிடன் செய்த மாண்புறு செயல்' என்னும் நூலியற்றி இவர்கள் கற்ற ஆங்கிலப் புலமையின் நற்பயனை முப்பதுயாண்டுகட்கு முன்னமேயே நம்மவர்கட்கு அளித்துள்ளார்கள். ஆங்கிலத்தில் கையெழுத்திடத் தெரியாதவர்களும்கூட மேனாட்டு நடை உடைகளிற் பேரார்வம் கொண்டுள்ளனர். ஆனால், அருந் தமிழ் மொழியோடு ஆங்கில மொழியிலும் சிறந்த புலமை பெற்றுள்ள நம் பேராசிரியர் அவர்களோ என்றும் நம் தமிழர் மரபினைத் தம் தூய உடை, நடை, செயல் முதலியவற்றால் காத்து வருகின்றார்கள் என்பதை அவர்களுடன் பழகும் வாய்ப்புள்ளோர் அனைவரும் அறிவர்.

திரு. அ.கி. பரந்தாமனார் அவர்கள் சென்னையில் வாழ்ந்த காலமெல்லாம் தமிழ்த்தொண்டு புரிவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். சென்னைப் புரசைப் பாக்கத்தில் திருவள்ளுவர் கழகத்தை நிறுவிக் கிழமை தோறும் திருக்குறட் சொற்பொழிவுகளை நிகழ்த்தியும், நிகழ்த்துவித்தும் பல்லாண்டுகள் சென்னை மக்கட்குச் செவியுணவு ஊட்டினார்கள். அவர்கள் நடாத்திய திருவள்ளுவர் கழக ஆண்டு விழாக்களின் தோற்றம் இன்றும் சென்னை வாணரின் மனக்கண்ணிற்றோன்றிக் காட்சியளிக்கின்றது. "அ.கி.ப. அவர்களின் மணிவிழா" என்று தலைப்பிட்ட அறிக்கைத்தாளை முதலில் நான்கண்ட போது இவ்விழாவைச் சென்னைத் திருவள்ளுவர் கழகம் தான் ஏற்பாடு செய்ததோ என்றெண்ணினேன். அறிக்கையை முழுவதும் படித்த பின்னர்தான் மதுரைத் திருவள்ளுவர் கழக ஏற்பாடென்பதை அறிந்தேன்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் மயிலையிற் பிறந்தவர் என்றும் பின்னர் அவர் மதுரைக்குச் சென்று சிறப்புற்றார் என்றும் எண்ணுகின்றவர்களுள் அடியேனும் ஒருவன். அங்ஙனமே சென்னையிற் பிறந்து சென்னையில் திருவள்ளுவரின் புகழைப் பரப்பிய உயர்திருவாளர்

அ. கி. பரந்தாமனர் அவர்கள் மதுரைக்குச் சென்று மதுரை மாவட்டத்தில் திருவள்ளுவரின் செந்நெறியினைச் செம்மையாய்ப் பரவச்செய்து மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினரால் மணிவிழாச் சிறப்பினைப் பெறுவதும் சாலச்சிறந்ததே யாகுமென்றெண்ணி அமைதியுறுகின்றேன்.

இவர்கள் பக்கலில் அடியேன் இருந்து கழித்த காலமெல்லாம் பயனுள்ளனவாகவே சென்றன. இவர்கள், கடமையை ஒல்லும்வகை ஒழுங்காய்ச் செய்தல் வேண்டுமென்பதை இவர்களுடன் பழகுகின்றவர்கட்கும் பழக்குவிக்கும் பண்பு வாய்ந்தவர்கள்; தாய்மொழிப்பற்றும் தாய்நாட்டுப்பற்றும் இவர்களிடம் சிறந்து விளங்கும் நற்பண்புகளாயினும், பிறமொழிகளையோ பிறநாட்டினரையோ எள்ளி இகழ்ந்துரைக்கும் தீயபண்பினை இவர்களிடம் காண்டலரிது. தமிழர் யாவரும் ஓரினம் என்னும் உயரிய நோக்கமுடைய உத்தமசீலர் இப்பெருந்தகையார். இத்தகைய நற்குணசீலருக்கு மணிவிழா பண்டைச் செந்தமிழ்நாட்டின் தலைநகராகிய மதுரைமாநகரில், தமிழ்நாட்டின் பெருமையை உலகறியச் செய்த தெய்வப் புலவரின் செந்நெறிகளைச் செம்மையாய்ப் பரப்பும் திருவள்ளுவர் கழகச் சார்பில், தமிழர்களின் பொன்னுளாகிய பொங்கற் புதுநாளில் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமேயாகும். இவர்களின் மணிவிழா ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் நடைபெறும் மணிவிழாவாகும். இவர்களின் நல்வாழ்வு தமிழ்நாட்டின் நல்வாழ்வாகும்; ஆகவின், இவர்கள் எல்லா நலன்களையும் பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்துதல் தமிழ் மக்களின் இன்றியமையாத கடமையாகும்.

என் மதிப்புக்குரிய தலைவர், என்வாழ்க்கையின் நல்வழி காட்டி, தமிழ்த் தாயின் தவப்புதல்வர், புலவர்

மாமணியாம் அ. கி. பரந்தாமனர், எம். ஏ. அவர்களின் மணிவிழா எல்லா வகையிலும் இனிது நிறைவேறுதல் வேண்டுமென்று அங்கயற்கண்ணி மணாளன் மலரடிகளைப் போற்றி வாழ்த்துகின்றேன்.

**கீ. இராமலிங்கம், எம்.ஏ.,**
தனி அலுவலர் (ஆய்வுகள்),
தமிழ் ஆட்சிமொழிக் குழு,
தமிழக அரசு.

'தமிழ் மணம்',
21, பூங்கா கிழக்குச் சாலை,
சென்னை-30.

உயர்திரு. அ. கி. பரந்தாமனர், எம்.ஏ. அவர்கள் ஆழ்ந்த தமிழ்ப்புலமை படைத்தவர்கள்; ஆரவாரமற்ற அமைதியான தோற்றமும், குழந்தைபோலக் குழைவாகப் பேசுந் தன்மையுமுடையவர்கள்; நட்பாடுவதற்கு நனி சிறந்தவர்கள்.

பிறர் கேட்டுத் தம்மை அறிவாளியென்று போற்ற வேண்டும் என்பதற்காகவே, தாம் கற்றதையும் கல்லாததையும் கண்டவிடத்திலெல்லாம் தாமே பறையறைந்து கொள்ளும் வழக்கம் இவர்களிடம் கிடையாது.

உள்ளொன்று இருக்கப் புறமொன்று பேசுவது என்பதும் இவர்களது இயல்புக்குப் புறம்பானது. தமக்கு வாழ்வளித்துவரும் தலைமை நிலையுடையவர்களேயாயினும், அவர்கள் தவறுதலாக ஏதாவது ஒரு கருத்தைச் சொல்லிவிட்டால், அதனை மறுத்துரைக்க உடனுள்ள மற்றப் புலவர்கள் தயங்கும்போது, இவர்கள் சிறிதும் தயங்காமல், 'அது தவறு' என்று எடுத்துக்கூறப் பின்னிடைய மாட்டார்கள். நான் ஒருமுறை நேரில் காண நேர்ந்த செய்தி, இவர்களது இந்நக்கீர மனத்திட்பத்தை எனக்கு நன்கு புலனாக்கிற்று.

இவர்களது உள்ளத்தில் ஏழை எளியவர்களுக்கு என்றும் இரங்கும் இடம் உண்டு. இவர்களால் இயன்ற

உதவிகளை ஆர்வத்தோடு அவர்களுக்குச் செய்வார்கள். கைம்மாறு கருதாது, பிறர்க்குப் பணிபுரிவது இவர்களது பாங்கான பண்பு.

இவர்களது உள்ளத்தினுள்ளே ஆழ்ந்த இறைப்பற்று அடர்ந்து வளர்ந்திருக்கின்றது. ஆனல், வெளிப்பார் வைக்கு இவர்கள் கடவுள் கொள்கையே இல்லாதவர்கள் போலத் தோன்றுவார்கள். இதுகொண்டு இவர்களை 'இந்தக் கட்சி', 'அந்தக் கட்சி' என்று சிலர் ஒதுக்கிப் பேசுவதைக் கேட்கும்போது. 'என்னே!' அவர்களது அறிந்துகொள்ளமாட்டாமை!' என்று நான் நகைப்ப துண்டு.

தமிழ் இலக்கியங்களில் பற்றுவைக்கவும், அவற்றைப் பயிலவும், தமிழ்மொழியின்பால் அன்பு பூணவும், திருத்த மாகத் தமிழைப் பேசவும் எழுதவும், கவிபாட எளிதில் கற்றுக் கொள்ளவும், திரு. பரந்தாமனர் அவர்களது அரிய நூல்களும் கட்டுரைகளும் பெரிதும் பயன்படுவனவாகும்.

அறுபதாண்டு நிறையப்பெறும் இவ்வரும் பெருந் தகையார், இன்னும் பல்லாண்டு நோயற்றமேனியோடும் குறைவற்ற செல்வத்தோடும், இவர்களது இல்லத்துக் கரசியாரும் இனிய நன்மக்களும் மகிழ்ந்து சூழப் பயனும் புகழும் நிறைந்த பெருவாழ்வு வாழவேண்டுமென எல் லாம் வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுகிறேன்.

வித்துவான்
மு. அருணசலம் பிள்ளை அண்ணமலை நகர்

நம் நண்பர் திரு. அ. கி. பரந்தாமனர், எம். ஏ. அவர் களின் மணிவிழா, நம் திருவள்ளுவர் கழகச் சார்பில் சிறப்பாக நடைபெற இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன். திரு. பரந்தாமனர் அவர்கள் இன்னும்

பல்லாண்டு பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து செந்தமிழ் அன்னைக்குச் சிறந்த பணிபுரியும் வண்ணம், உடல்நலம் முதலான எல்லா நலங்களையும் ஈந்தருளுமாறு அங்கயற் கண் அம்மையுடனுகிய ஆலவாய்ப் பெருமானின் அடியிணை மலரை அகங்கனிய வாழ்த்தி வணங்குகிறேன்.

பரந்தாமனுர் நீடுவாழ்க.!

கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ., சென்னை–4.
ஆசிரியர், 'கலைமகள்',

பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர் அவர்களின் மணி விழாவைச் சிறந்தவகையில் கொண்டாட எண்ணியிருப்பது தெரிந்து அளவற்ற மகிழ்ச்சியை அடைகிறேன். தேர்ந்த புலமையும் ஆராய்ச்சி வன்மையும் உடைய திரு பரந்தாமனுர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

பண்டித-வித்துவான் 'கல்கி' அலுவலகம்,
நா. பார்த்தசாரதி, சென்னை–10.

திரு. பரந்தாமனுரவர்களின் அறுபதாண்டு நிறைவு விழாச் செய்தி அறிந்து பெருமகிழ்ச்சி கொண்டேன். எளிமையும், அடக்கமும், நிறைந்த தமிழ்ப் புலமையும் கொண்ட பேராசிரியரவர்கள் என் மனத்தைவிட்டு நீங்காமல் நிறைந்துள்ளார்கள்.

புலமையும் பண்பும் நிறைந்தவராகிய பரந்தாமனுர் அவர்கள் பல நல்ல தமிழ் நூல்களை இயற்றியிருக்கிருர்கள். அவற்றைப் படித்து மகிழ்ந்ததோடு அவரையே ஒரு நல்ல புத்தகமாகப் படித்து நினைவில் இருத்திக் கொண்டிருக்கிறேன் நான். பேராசிரியரவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணி புரியத் திருவருள் துணைபுரிய வேண்டும்.

செந்தமிழ்ச் செல்வர், சைவ சமய சிரோன்மணி
வித்துவான் பாலூர்
கண்ணப்ப முதலியார், M A ,B.O.L.,
தமிழ்ப் பேராசிரியர்,
புதுக்கல்லூரி, சென்னை

43, விஜய விக்னேஸ்வரர்
கோயில் தெரு,
சென்னை-7.

உயர்திருவாளர் அ. கி. பரந்தாமனர், எம்.ஏ. அவர்கள் அறுபதாம் ஆண்டு உறுவது குறித்து உள்ளம் உவந்து மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் மணிவிழா நடத்துவது அறிந்து யான் பெரிதும் உளம் உவக்கின்றேன். இம்மணிவிழா ஏற்கும் அறிஞரை நான் கடந்த முப்பதாண்டுகட்கு மேல் நன்கு அறிந்தவன்; உடன் உறைந்து அளவளாவும் வாய்ப்பும் அமையப் பெற்றவன். இவர் அறிவிலும், பண்பிலும் சிறந்தவர் என்பதை நான் நன்குணர்ந்துள்ளேன். இவர் தம் உளத்திற்கு ஒவ்வாதன வற்றை நன்கு எடுத்துக்கூறி மறுக்கும் உரம்படைத்தவர்; மூடநம்பிக்கை, குருட்டு நம்பிக்கை ஆகியவை எவையாக இருப்பினும் அவற்றை அறவே தள்ளுபவர்; காலஞ் சென்ற ச. த. சற்குணர் B.A. அவர்களிடம் இலக்கண இலக்கியங்களைத் தெள்ளத் தெளியக் கற்றவர்; நல்ல கட்டுரைகளை எப்படி எழுதுவது என்பது பற்றி ஒரு தனி நூலையும், செய்யுள் புனைவது எங்ஙனம் என்பதுபற்றிச் செய்யுள் இலக்கணக் கட்டுரைகளையும் எழுதிவருபவர். இன்னோரன்ன அருஞ்செயல் புரியும் இவர்கள் அறுபதாம் ஆண்டு விழாவினைக் கண்டும் நூற்றாண்டு விழாவினையும் காணும் அளவிற்கு நல்லுடன் வளனும் நற்பொருள் வளனும் இனிதுறப்பெற்று வாழ யான் வழிபடும் முழுமுதற் பரம்பொருளாம் அம்மை அப்பனது அணிமலர் இணைகளை வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

மயிலை சீனி வேங்கடசாமி, 74, காரணீசுவரர் கோவில் தெரு,
சென்னை-4.

பேராசிரியர் திரு அ. கி. பரந்தாமனர், எம்.ஏ. அவர்களுக்கு மணிவிழாக் கொண்டாடுவது பற்றி மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். நண்பர் பரந்தாமனர் அவர்கள் ஆழ்ந்த தமிழ்க் கல்வியும் பல நூற் பயிற்சியும் பாடங் கற்பிக்கும் ஆற்றலும் உள்ளவர்கள்; அமைதியும் பொறுமையும் உள்ளவர்கள். திருக்குறள் போன்ற தமிழர் பண்பாட்டினை விளக்கும் நூற்களைப் பரவச் செய்வதில் ஊக்கம் உள்ளவர்கள். சீர்திருத்த மனப்பான்மை உள்ளவர்கள். அமைதியான முறையில் தமிழ்த்தொண்டு செய்து வருகிற இப்பெரியாருக்கு மணிவிழாக் கொண்டாட வேண்டுவது அவசியமும் கடமையும் ஆகும். பரந்தாமனருக்குப் பாராட்டு விழா கொண்டாடுவதன் மூலம் மதுரைத் திருவள்ளுவர் கழகம் நல்லதோர் தமிழ்ப் பணியைச் செய்கிறது. கழகத்துக்கு எனது நன்றி. பேராசிரியர் பரந்தாமனருக்கு எனது வாழ்த்தும் வணக்கமும் உரியதாகும். வாழ்க ஆசிரியர் அ. கி. பரந்தாமனர்!

ந. சஞ்சீவி, எம்.ஏ., 2, கஜபதி லாலா சந்து
சென்னை-5.

பேராசிரியர் - உயர்திரு. அ. கி. பரந்தாமனர் அவர்கள் உழைப்பால் உயர்ந்த தமிழறிஞர்; அன்பும் பண்பும் நிறைந்த பெருமகனர்.

பேராசிரியர் பரந்தாமனர் வரைந்துள்ள நூல்கள் பலவும் என் உள்ளம் கொள்ளை கொண்டவை. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' என்ற நூலும், 'நாயக்கர் வரலாறு' என்ற நூலும். முன்னது பேராசிரியர் அவர்கள் நெடுநாளைய தமிழாசிரியப் பணியின் நினைவுச் சின்னம்; பின்னது அவர் தம்

ஆராய்ச்சித் திறத்தையும், உழைப்பின் பெருமையையும் புலப்படுத்தும் கலங்கரை விளக்கம்.

பேராசிரியர் பரந்தாமனர் நீடுழி வாழ்க! அவர் தம் புகழ் ஓங்குக!

'சோமலெ' நெற்குப்பை,
இராமநாதபுர மாவட்டம்.

பேராசிரியர் பரந்தாமனர் அவர்களுக்கு மணிவிழா நடைபெறுவது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். அறிஞர் பரந்தாமனர் அவர்களைக் காண்பதே ஓர் அரிய காட்சி. அவர்களோடு உரையாடுவதே ஓர் இனிய அனுபவம்.

பரந்தாமனர் அவர்களுடைய நூல்கள் பல்வேறு துறைகளை அணி செய்கின்றன. வரலாற்றுத் துறையில் அவருடைய உழைப்பின் பயனும், ஆராய்ச்சித் திறனும் "நாயக்கர் வரலாறு" வாயிலாக வெளிப்படுகின்றன. உரைநடை பெருகி வரும் இந்நாளில் நல்ல தமிழ் எழுத விரும்பும் இளைஞர்களுக்கு இவரது நூல் வழிகாட்டியாக விளங்குவதை யான் அறிவேன். இவ்வாறே கவிதை ஆக்கியும், இளங் கவிஞரை ஊக்கியும் இவர் செய்துவரும் தொண்டு பெரிது.

தமிழ்க்கல்வி பரப்பி வரும் கல்லூரிகளில் மதுரைத் தியாகராசர் கல்லூரிக்குத் தனிச் சிறப்புண்டு. அப்பெருமைக்குக் காரணமாய் இருப்பவர்களில் ஒருவரான பரந்தாமனர் இனிது இருந்து நெடிது வாழ்க!

வாழ்க அன்னர் தமிழ்த் தொண்டு!

S. N. சொக்கலிங்கம், எம்.ஏ., சென்னை-6.
தனி அலுவலர், பாட நூல் வெளியீடு,
பொதுக் கல்வி நெறியாளர் அலுவலகம்,

பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்கட்கு அறுபதாண்டு நிறைவு விழா நடக்கப் போவதறிந்து பெருமகிழ் வெய்துகிறேன்.

தமிழ்மொழியின் ஆக்கங் கருதிப் பொருள் பொதிந்த பல கட்டுரைகளையும், நூல்களையும் வரைந்துள்ளார். அசைவிலா ஊக்கத்துடன் வாழ்வில் படிப்படியாக முன்னேறியவர். இவர் மேலும் அறுபதாண்டுகள் உடல் உரத்துடனும், நலத்துடனும் வாழ்ந்து சிறந்த தொண்டாற்ற வேண்டும் என்பது என் விருப்பம்.

R. இராசமணி, B.A. (Hons.)L.T., 87, புதுத் தெரு,
முன்னைய தமிழ் விரிவுரையாளர், ஸ்ரீரங்கம்.
மேரியரசியர் கல்லூரி, சென்னை.

வணக்கம். பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனார் அவர்களது மணிவிழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன்; நன்றி. 'அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்' என்னும் பொன்மொழிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் பேரறிஞரது மணிவிழா செவ்விய முறையில் நடைபெற வேண்டுமென்றும், அப்பெரியார் பல்லாண்டுக் காலம் இந்நிலவுலகில் இனிது வாழ வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை மனமார வாழ்த்துகிறேன்.

இராசரத்தினம், எம்.ஏ., எல்.டி. சென்னை-5.
தமிழ்ப்பேராசிரியை,
வெலிங்டன் சீமாட்டியார் பயிற்சிமுறைக் கல்லூரி,

பேராசிரியர் பரந்தாமனர் அவர்கள் தமிழ்த்தொண்டே தலையாய தொண்டெனக் கொண்டவர்கள். அவர்கள் திருக்குறளைப் பயின்றதோடமையாது அக்குறள் வழியே தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள். அவர்கள் எங்கு வசித்தாலும் அவ்விடங்களிலெல்லாம் திருக்குறளைப் பரப்புவார்கள். அவர்கள் தமிழ் நூல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார்கள். அதிலும் சிறப்பாக மாணவர்களுக்கு பயன்படுமாறு பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார்கள். அதன் பயனாக இளைஞர்கள் பிழையற எழுதவும் பேசவும் படிக்கவும் கற்று வருகின்றனர். நல்லாசிரியருக்குரிய எல்லாப் பண்புகளும் வாய்க்கப் பெற்றவர்கள். அத்தகைய பெரியாருடைய மணிவிழாவைச் சிறப்புற நடத்தித் தரும் மதுரைத் திருவள்ளுவர் கழகமானது பாராட்டற்குரியதாகும். அவ்விழாவானது இனிது நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல தமிழறியும் பெருமானைப் பெரிதும் வழுத்துகிறேன்.

வாழ்க நம் மணிவிழாத் தலைவர்!

வித்துவான் நா. சேதுரகுநாதன், 1, சௌந்திர பாண்டியன்
செந்திக்குமார நாடார் கல்லூரி. வீதி, விருதுநகர்.

அன்பின் மேன்மை தங்கிய பெரியீர்! தக்க புகழும் தமிழின் வளமும் ஒரு சேரத்தழைக்க அரும்பெருந் தொண்டாற்றிய தங்கள் பெரும்புகழ் நெடிது வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

தங்கள் மணிவிழாவின் செய்தியறிந்து மகிழ்வு கொண்டேன். மாண்புமிகு தமிழ்ப் பேராசிரியர் பணியைப் பன்னெடுங்காலம் செய்த ஆன்றவிந்தடங்கிய

கொள்கைச் சான்றோராகிய தங்களின் உள்ளம் அன்பு நிரம்பிய நல்மகிழ்வு அடைவதாகுக. தக்க பொருள் வளமும் மேல் மேலும் வாழ்வின் மகிழ்வும் நிரம்ப நெடிது வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

வாழிய பரந்தாமனர்!

பேராசிரியர் 82-B, டவுன் ஹால் ரோடு,
அ. சங்கரநாராயணன், எம்.ஏ. மதுரை.
முதல்வர், மாணவர் தனிப் பயிற்சிக் கல்லூரி,

பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் மணிவிழா அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

கருத்தும் சுவையும் உள்ள சொற்பொழிவாற்றுவதிலும், புத்தகங்கள் எழுதுவதிலும் புகழும் நற்பெயரும் பெற்ற பேராசிரியர் பரந்தாமனர் நூறாண்டு வாழ்ந்து தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் அவரது தொண்டினைத் தொடர்ந்து செய்து வரவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

ப. துரைக்கண்ணு முதலியார், காரைக்குடி.
முதல்வர், அழகப்பா ஆசிரியர் கல்லூரி,

அன்னைத் தமிழின் அணிமலரடியில் ஆராய்ச்சி நூல் பல அணிவித்த திரு. அ. கி. பரந்தாமனர் மணிவிழாக் காண்கிறார் என்பதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் என் கெழுதகை உழுவலன்பர். முப்பத்தைந்து ஆண்டுகளாக நானறி முகத்தினர். சென்னை, தூயபவுல் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்ப்பணி ஆற்றிய நாள் முதலாக நான் அவரை அறிவேன். அவர் தமிழ் முதறிஞர் திரு. சற்குணர் என்பாரின் தலைமாணக்கர். சங்கத் தமிழ்க் கடலில் மூழ்கித் திளைத்தவர்.

அவர் தமிழறிஞர் மட்டுமல்லர், தமிழ்க் காதலர். தமிழ் மணம் கமழும் நெஞ்சினர். பட்டாங்கு ஏற்கும் பளிங்கு போலாது கலந்த பாலில் நீரறியும் அன்னம் போல நுணுகி ஒரும் நுழைபுலவர். எழுத்து, பேச்சு முதலிய துறைகளில் அவர் வண்ணம் காணலாம்.

இத்தகு தமிழர் மணிவிழாக் கண்டு பொலிக! அவர்க்கு 'நீண்ட ஆயுளும், வேண்டு நலன்களும் ஆண்டவன் அருள்க!' என வாழ்த்துகின்றேன்.

K. பாக்கியரத்தினம், F.R.G.S., F.R.ECON.S., APPRAISER.

H.M. CUSTOMS, COLOMBO.

அன்று தமிழறிஞர் ஒருவர்க்கு அரசன் கவரி வீசி நின்றான். இன்று தமிழறிஞர் ஒருவர்க்கு மக்கள் மணி விழாக் கொண்டாடுகிறார்கள்.

தமிழைக் கற்பதிலும் அதனை வளர்ப்பதிலும் இற்றை நாள் தமிழிளைஞர்கள் பேரார்வமுற்று முந்துகின்றனர். அன்னார்க்குத் துணையாய்ச் செந்நெறிப்படர்தற்கு வழி காட்டியாய், ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலரும் தம் முதிர்ந்த புலமைச் செல்வத்தாலும் ஆராய்ச்சி வளத்தாலும் அவ்வப்போது வேண்டுவ விருப்புடனீந்து ஊக்குவிக்கின்றனர். அத்துணைப் பெருந்தகையாளருள் மதிதகு அ. கி. பரந்தாமனார், எம்.ஏ. அவர்களுமொருவரென்பது பலருமறிந்ததொன்றும்.

புலமையொடு புகழ் வளரப் பெற்றுள இவர்கள் பொருளொடு பொருந்தும் உரை பல மேலும் உலகிற்கீந்து, இன்னமும் ஆலவாயெம் இறைவன் அருளினாலே, பன்னரு நலங்கள் குன்றாப் பாக்கியம் உடையவர்களாக நீடு வாழ்க!

டாக்டர் D. M. N. சீதாராம், திருப்பரங்குன்றம்,
இயக்குநர், தமிழ் மருத்துவக் கல்லூரி, மதுரை.

தமிழுக்கும் தமிழ்க்கலைகளுக்கும் சளையாது தொண்டாற்றி வரும் பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனரின் மணிவிழா நடாத்துவது நம் கடமையே.

பேராசிரியர் அவர்கள் இன்னும் பல்லாண்டு தமிழுக்கும், தமிழ்க்கலைகளுக்கும் தொண்டாற்ற அருள் புரிய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

வித்துவான் க. கொன்றையாண்டி, சிவகாசி.
தமிழாசிரியர்,

தமிழ் நாட்டில் தக்க தமிழறிஞர்களைத் தக்க காலத்தில் பாராட்டும் பழக்கம் இடைக் காலத்தில் இறந்துபட்டது. அது தங்கள் கழகத்தால் மீண்டும் உயிர்பெற்று கடந்த பல ஆண்டுகளாகப் பல தமிழ்ப்பேரறிஞர்களைத் தமிழுலகத்திற்கு அறிமுகப்படுத்திப் போற்றி வருகின்றமையை எண்ணி எண்ணி மகிழ்வெய்துகின்றேன். திருவாளர் அ. கி. ப. அவர்கள் மறத் தமிழர் என்று கூறும் தகுதியில் ஏற்றத்திலும் தோற்றத்திலும் ஆற்றலிலும் அறிஞர் ச. சோ. பாரதியாருக்குப் பிறகு இவரே என்று கூறலாம். அவர்களின் அறிவினையும் ஆற்றல்களையும் ஓய்வு என்பது வந்து குறுக்கிடாமல் அரசாங்கம் வழி வகுக்கத் தங்கள் கழகம் ஆவன செய்வதாக.

நா. வேணுகோபால் நாயகர், "வாசுதேவ நிலையம்"
89, சுவாமி நாயகர் தெரு,
சென்னை-2.

அன்புடைய ஸ்ரீ நண்பர் அவர்கட்கு, வணக்கம். பேராசிரியர் திரு. பரந்தாமனர் அவர்கட்குப் பாராட்டு விழா நடைபெறுவது அறிய மகிழ்ச்சி. திருக்குறளுக்

-காகப் பெரும்பணி புரிந்துள்ள இப்புலவர் பெருமகனைத் திருக்குறள் அரங்கேறிய மதுரை மாநகரிலே பாராட்டுவது மிகப் பொருத்தமானது. நமது பேராசிரியர் அவர்கள் காட்சிக்கு எளியர், கடுஞ் சொல்லர் அல்லர். தம் கல்விச் செல்வத்தை ஈத்துவக்கும் பெரியார். தம் மாணுக்க மக வினர் பிறர் மதிப்பில் 'சான்றோராதல்' கண்டு களிக்கும் இயல்புடையவர். தமிழும், தமிழகமும் வாழ இவர் பல்லாண்டு வாழப் பிரார்த்திக்கின்றேன்.

புலவர் வீ. இளங்கண்ணனுர், பொன்மலை, திருச்சி-4.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் ரேன்ருமை நன்று.

என்ற வள்ளுவம் கூறும் வாய்மையின்படி சிறந்த புகழோடு தோன்றிப் புகழத்தக்க செயல்களைச் செய்து வரும் பேராசிரியர் பரந்தாமனுர் அவர்கட்கு மணிவிழாக் கொண்டாடுதல் தலை சிறந்த செயலாகும். பேராசிரியர் காட்சிக்கு எளிமையும், இன்சொல்லும் உடையவர். இத் தகைய பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழகத்திற்குச் சிறப்புச் செய்யுமாறு எல்லாம் வல்ல பரம் பொருளை இறைஞ்சுகின்றேன்.

புத்தனேரி ரா. நடராசன்,
துணைச் செயலாளர்,
மதுரை எழுத்தாளர் மன்றம்.

'தமிழ் இல்லம்'
4/9, நகராட்சிக் குடியிருப்பு,
மதுரை-2.

பேராசிரியர் அ. கி. ப. அவர்கள் எங்கள் மன்றத்தின் சொத்து. உடைமை எங்கள் உடைமை என்ருலும் 'தமிழகத்தின் பொதுவுடைமை'. மன்றத்தின் தொடக்கக் காலத்திலிருந்து உறுதுணையாய் நின்றுவரும் பெருந்

துணைத்தலைவர். மன்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து, மன்றம் வலிவோடும் பொலிவோடும் வாழ, வளர வழிகாட்டி வருபவர்கள். மதுரைத் திருவள்ளுவர் கழகத்தாரோடு தோளோடு தோள் நின்று தமிழ்ப் பணியாற்றுவதிலே மதுரை எழுத்தாளர் மன்றமும் முன்னணியில் நின்று வருவதை மதுரை அறியும்—தமிழகம் நன்கு அறியும். மன்றத்தின் நிலையான துணைத் தலைவரும், திருவள்ளுவர் கழகத்தின் ஆட்சித் தலைவருமான அ. கி. ப. அவர்களுக்கு மணி விழா நடப்பது ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமையோடு பாராட்ட வேண்டிய செய்தி.

அ. கி. ப. அவர்கள் ஆன்றவிந்தடங்கிய அறிஞர். பேச்சும் மூச்சும் தமிழுக்காகவே என்று வாழ்பவர். தமிழுக்கு அவருடைய தொண்டு அளப்பரியது. இந்நன்னளிலே அவர் நூறாண்டு நலம்பட வாழ்ந்து தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும், நல்ல தமிழ்த்தொண்டாற்ற வேண்டும் என்றும் அவருடைய நூறாண்டு நிறைவு விழாவையும் மன்றம் பெருமையோடு கொண்டாட வேண்டும் என்றும் உளமார விரும்பி எனது பாராட்டுரையை அனுப்புகிறேன்.

வாழ்க அ. கி. ப.! வாழ்க தமிழ்!

**வித்துவான் வை. சு. தண்டபாணி,**
**உதவித் தலைமை ஆசிரியர்,**
**சிவகாமி அம்மாள் உயர்நிலைப்பள்ளி.**

இராங்கியம்,
திருச்சி மாவட்டம்.

பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்களோடு பல முறை பழகும் வாய்ப்பை நான் பெருவிடினும், ஓரிரு முறை பழகும் வாய்ப்பையும், அவர்களுடைய அரியசொற்பொழிவைக் கேட்கும் பேற்றையும் பெற்றிருக்கிறேன்.

பழகும் முறையாலும் பயிற்றுவிக்கும் திறத்தாலும் புலவர் பெருமக்களையும் மாணவர்களையும் தன்பால் ஈர்க்கும் தன்மை படைத்தவர்கள் அ. கி. ப. அவர்கள். பழமையின் பண்பும் புதுமையின் பொலிவும் பெற்றுத் திகழும் அ.கி.ப. அவர்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் செய்துவரும் தொண்டுகள் எண்ணிலடங்கா.

இன்றைய எழுத்தாளரிற் சிலரும் இளைஞரிற் பலரும் நல்ல தமிழில் எழுதுகின்றனர் என்றால் அதற்குக் காரணம் அ. கி. ப. அவர்களின் நல்ல தமிழ் எழுத வேண்டுமா? என்ற அரிய நூலே ஆகும். அவர்களுடைய பேச்சும் எழுத்தும் உறுதியும் உண்மையும் உடையனவாகவும் புலமையும் தெளிவும் நிரம்பியனவாகவும் இருக்கும். அறுபது ஆண்டையும் பெற்ற அ. கி. ப. அவர்கட்கு மணிவிழாக் கொண்டாட இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

அ. கி. ப. குன்றாத இளமையுடனும் குறையாத உடல் நலத்துடனும் பல்லாண்டுகள் வாழ்ந்து நம் மொழிக்கும் இனத்திற்கும் நற்றொண்டாற்றி வர எல்லாம் வல்ல செந்தமிழ் முருகனின் திருவடிகளைப் போற்றுகிறேன்.

புலவர் இரா. ஏகாம்பரநாதன், தஞ்சாவூர்.
உதவித் தலைமை ஆசிரியர்,
வீரராகவர் உயர்நிலைப் பள்ளி,

மதுரைத் திருவள்ளுவர் கழக உறுப்பினர் அவர்களே, பாண்டிய மன்னன் (இன்றிருந்தால்) செய்யவேண்டிய தமிழ்ப் பணியைத் தாங்கள் மேற்கொண்டுள்ளீர்கள். மதுரைத் தமிழ்ச்சங்கம் இன்று செய்யும் தமிழ்ப்பணி ஒரு சார்விளங்கத் தங்கள் திருவள்ளுவர் கழகம் எடுத்துக் கொண்ட பாராட்டு விழாவின் அமைப்பு வெற்றியுற வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் திரு. அ. கி. பரந்தாமனுர் அவர்கள் செய்துவரும் தமிழ்த் தொண்டு பல. அருந்தொண்டு செய்துவரும் பேராசிரியர் அவர்களைத் தமிழ் மக்கள் பாராட்டும் கடப்பாடுடையவர். தமிழர் சார்பில் நான் உளமார வாழ்த்துகிறேன். அன்னுர் பல்லாண்டு வாழ்க! அவரது தமிழ்த்தொண்டும் மக்களிடம் சிறக்க!

ப. அமிர்தம், எம்.ஏ. மதுரை.

பாராட்டுப் பெறும் பாவலரும், சீர்திருத்தக் காவலருமாகிய பேராசிரியர், பாற்கடலில் துயிலாது பைந்தமிழ் நூற்கடலிற் பயின்றுவரும் பண்புடையராவர். அவர் நலம் பல பெற்றுச் சீரிய தமிழ்த் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிக்க வேண்டுமென அவன் இணையடி தொழுது வேண்டுகின்றேன்.

அ. காமாட்சி, எம்.ஏ., திருவனந்தபுரம்.
அரசினர் ஆராய்ச்சி மாணவர்,
தமிழ் ஆராய்ச்சித் துறை, கேரளா பல்கலைக் கழகம்,

ஆசிரியர் அ. கி. பரந்தாமனுர் அவர்கள் அறிவின் இருப்பு; அன்பின் பிறப்பு; பண்பின் வைப்பு. அவர்தம் கள்ளமிலா வெள்ளை உள்ளம் என்னை விழுங்கியிருக்கிறது; கலகலத்த பேச்சு எனது நொந்த செவியிலே செந்தமிழைப் பொழிந்திருக்கிறது. எனது கல்லூரி வாழ்க்கையிலே அப்பெரியார் கற்பகத் தருவாகவும் காமதேனுவாகவும் விளங்கிய சீர்மையை எண்ண எண்ண என் உளம் நெகிழ்கிறது; உடல் சிலிர்க்கிறது; விழிகள் குளமாகின்றன. பேய் போலாடிய என்னைத் தாயினும் சாலப் பரிந்தோம்பிக் காத்த அந்தப் பெருமகன் இன்னும் இன்னும் பல்லாண்டு வாழுமாறு இம்மணிவிழாவின்போது நாத்தழும்பேற வாழ்த்துகிறேன்.

பெ. தியாகராசன், எம்.ஏ., நாகர்கோவில்.
தமிழ்த் துறை, தெ. தி. இந்துக் கல்லூரி,

பேராசிரியர் பரந்தாமனார் என்றதும் அவருடைய பரந்து ஏறிய நெற்றியும் திரண்டு வளைந்த மூக்கும் மலர்ந்த மாவடுப் போன்ற கண்களும் முறுக்கிவிட்ட மீசையும் உருட்டிவிட்ட ஒள்ளிய தலைப்பாகையும் நினைவிற்கு வரு கின்றன; ஏறு போல் பீடுநடை போட்டு எடுப்பாக வரு கின்ற செஞ்சொற்புலவர் திருவுருவம் ஒன்று காட்சியளிக் கின்றது; அஞ்சாநெஞ்சமும் அறவழிப் பிறழாச் செம்மை யும் ஆன்றவிந் தடங்கிய புலமையும் அடுக்காகத் தெரி கின்றன.

"வயது முதிர்ந்து விடினும்—எந்தை
வாலிபக் களையென்றும் மாறுவதில்லை
துயரில்லை; மூப்பில்லை;—என்றும்
சோர்வில்லை நோயொன்று தொடுவதில்லை
பயமில்லை பரிவொன்றில்லை—எவர்
பக்கமும் நின்றெதிர்ப் பக்கம் வாட்டுவதில்லை
நயமிகத் தெரிந்தவன் காண்—தனி
நடுநின்று விதிச்செயல் கண்டுமகிழ்வான்."

என்று இந்தப் பரந்தாமனாரை நினைத்துத்தான் பைந் தமிழ்க் கவிஞன் பாரதி பாடியிருப்பானோ என்று கூட எண்ணத் தோன்றும்! உள்ளத்தே உண்மை ஒளி படைத்த ஒண்டமிழ்ப் புலவர் என்பதனை அவருடைய எடுப்பான புறத்தோற்றம் நன்கு எடுத்துக் காட்டும்.

எம் பேராசிரியர் பெருமை யான் கூறித் தெரிவ தன்று. அவர் பழந்தமிழ் இலக்கணங்களைப் பழுதற உணர்ந்து, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மூழ்கித் திளைத்த, பழுத்த புலமையுடையவர் என்பதையும், பண் பின் இருப்பிடம், அன்பின் பிறப்பிடம் என்பதையும் இந்த நாடே அறியும்; நல்லறிஞர் நன்குணர்வர்.

ஆனல், மதுரைத் தியாகராசர் கல்லூரி மாணக்கர்களின் "சொந்தப் பாட்டனர்" பைந்தமிழ்ப் புலவர் பரந்தாமனர் என்னும் உண்மை உலகிற்குத் தெரியாது; அதை நாங்களே அறிவோம். அதிலும் குறிப்பாக, அவர்களுடன் உரிமையோடு பழகி உறவு கொண்ட என் போன்ற மாணக்கர் இன்னும் நன்குணர்வர். மாணக்கர்களைப் பார்த்து வைதாலும் அந்தக் கடுமையான வசவுச் சொல்லில் அன்பும் குழைவும் இருக்கும்; பண்பும் பற்றும் இருக்கும்; திட்டியாவது திருத்த வேண்டும் என்னும் உயரிய நோக்கம் இருக்கும். திட்டினலும் அவர்களை விட்டு நாங்கள் எட்டிப் போவதில்லை. மாருக, அவர்கள் திட்டுவதிலே மட்டிலா மகிழ்ச்சி யடைவோம். வகுப்பை விட்டு வெளியே வந்ததும் அவர்கள் சின்னக் குழந்தைகள்போல் சிரித்துக் களித்து விளையாடுவார்கள்; அறவுரைகள் தந்திடுவார்கள்; அன்பால் அணைத்திடுவார்கள்; ஆறுதல் சொல்லித் தேற்றிடுவார்கள்; பெற்ற தந்தையினும் உற்ற தந்தையைப் போல் மாணக்கர் நலத்தையும் முன்னேற்றத்தையுமே நோக்கி யிருப்பார்கள். சுருங்கச் சொன்னல், இரும்பினைக் கவரும் காந்தம்போல் மாணக்கர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர் எங்கள் பரந்தாமனர். அவர் யாம் கொண்டாடும் தெய்வம்.

எம் பேராசிரியர்க்கு மதுரைத் திருவள்ளுவர் கழகம் மணிவிழா நடத்திச் சிறப்பிக்கும் செய்தி எம்மனேர்க்கு எல்லையற்ற இன்பம் தருவதாகும். பைந்தமிழ்ப் புலவர் பரந்தாமனர் இன்னும் பல்லாண்டுகள் வாழவும் நாட்டுக்கும் மொழிக்கும் நற்றெண்டாற்றவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

வாழ்க பரந்தாமனர்! வளர்க அவர்தம் திருத்தொண்டு.

கருணை, மதுரை எழுத்தாளர் மன்றம்,
செயலர். மதுரை.

மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலாளர், மறைந்த மாவீரர் கணக்காயர் டாக்டர் சோம சுந்தர பாரதியார் அவர்களின் நினைவு நாளைத் தனித் தமிழ்ப் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் தலைமையில் கொண்டாடிய நாளன்று, அந்நிகழ்ச்சி முடிந்ததும், எங்கள் மன்றத் துணைத் தலைவரும் திருவள்ளுவர் கழகத் தலைவருமாகிய உயர்திரு அ. கி. ப. அவர்களுக்கு மணிவிழா நடக்கும் என்று ஓர் இனிக்கும் செய்தியைக் கூறினர். அ. கி. ப. அவர்களுக்கு மணிவிழாக் கொண்டாட முடிவெடுத்திருப்பதாக அவர் உரைத்ததும் என் உள்ளம் இனித்தது; அச்சொற் களும் இனித்தன. பூரிப்பெய்திய முகத்தோடு "அவ் விழாவில் நாங்களும் பங்கு கொள்கிறோம்" என்றேன். அதற்கிசைவு தந்து ஊக்கம் அளித்த அன்னருக்கு மன்றத் தின் சார்புடைய நன்றியைக் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கிறேன்.

பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்களிடம் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற எனது நெடுநாள் அவா நிறைவேறியது. எங்கள் எழுத்தாளர் மன்றம் தொடங்கிய நாட்கொண்டு பேராசிரியர் அவர்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அமைந் தது என்று கூறுவதைவிட பேராசிரியர் அவர்களின் நல் லுள்ளத்தை—தொண்டுள்ளத்தை— கடமையுள்ளத்தைப் புரிந்துகொள்ளும் பேறு கிடைத்தது என்று கூறுவது மிகையாகாது. 1958-ஆம் ஆண்டு மன்றச் செயற்குழுவில் இலக்கண வகுப்புக்களை கிழமை தோறும் நடத்திட

வேண்டும் என்று கூறிய போழ்து, நான் சற்றுத் திகைத்தேன். 'இலக்கணம் கூறுவதை அடக்கத்தோடு கேட்டு அமைதியாகக் கற்க இயலுமா? உறுப்பினர்கள் தொடர்ந்து பாடம் கேட்க வருவார்களா?' என்றெல்லாம் அஞ்சினேன். ஆனால், பேராசிரியர் அவர்கள் மதுரைக் கிழக்குக் கோடியிலிருந்து மேற்குக் கோடியிலுள்ள எங்கள் இடத்திற்குத் தமது செலவில் குறிப்பிட்ட வேளையில் வந்து பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கியதும் எனது அச்சம் எங்கோ பறந்தோடியது. அவர்கள் இலக்கணத்தோடு இன்சுவை கலந்து கற்றுக் கொடுக்கும் திறமை வேறு எவர்க்கும் அமையாது என்று துணிந்து கூறுவேன்.

சில வேளைகளில், வகுப்பு அறையைத் திறந்து வைத்து ஏற்பாடு செய்ய வேண்டிய நான், காலம் தாழ்ந்து ஓடோடி வருவேன். ஆனால், ஐயா அவர்கள், கல்லூரி உடையையும் களையாமல் எனக்கு முன்பே அவ்விடத்தில் காத்திருப்பார்கள். அது போழ்தும், சில ஆசிரியர்கள் போன்று, கடுமையான சொல்லோ, கொடுமையான பார்வையோ வீசாமல் இன்முகம் காட்டி வரவேற்கும் பண்பு இருக்கிறதே, அந்தச் சீரிய பண்பை என் வாழ்நாள் முழுவதும் மறக்க இயலாது. வகுப்பை முடித்து ஏறத்தாழ இரவு 10 மணி யளவிலுங்கூட, அவர்கள் தளர்ச்சியின்றிச் சோர்வின்றிக் கடமையாற்றிய பெருமையில் நிமிர்ந்த நடைபோட்டுச் செல்லும் காட்சியை எங்கள் மன்ற உறுப்பினர்கள் எளிதில் மறக்கும் பண்பாளர்களல்லர்.

செயற்குழுக் கூட்டமோ நிகழ்ச்சிக் கூட்டமோ பொதுக்குழுக் கூட்டமோ எதுவாயினும் குறிப்பிட்ட வேளையில் வருகை தந்து பணியாற்றும் செயல்வீரர் எங்கள் பேராசிரியர். அவர்கள் பேராசிரியர் மட்டுமல்ல,

தனித்தமிழ் எதிரிகளுக்கு ஓர் வைரி ஆவார்கள்; பிறர்க்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக அமைந்து விட்ட வழிகாட்டி. அவர்களிடம் நான் பேசும் போழ்து, "குறிப்பிட்ட வேளையில் குறித்த இடத்தில் எவ்வாறு ஐயா தங்களால் கலந்து கொள்ள இயல்கிறது" என்று கேட்டதற்கு, "நாம் காலம் தாழ்ந்து செல்வதால், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்பவர்களின் காலத்தை வீணாக்குகிறோம். வருகை தந்திருப்போரின் காலத்தையும் வீணாக்குகிறோம்; தொல்லை கொடுக்கிறோம். அதனால், நமக்கு நாமே தீமையை ஏற்படுத்திக் கொள்கிறோம். ஒருவனுக்காகப் பலருடைய காலத்தையும் உழைப்பையும் வீணாக்கலாமா...?" என்று கூறுவார்கள். இவ்வாறு அவர்கள் அடுத்தவர்களின் நன்மை கருதித் தம்முடைய உழைப்பைக் கொடுக்கும் உயரிய எண்ணம் படைத்தவர்; அன்புள்ளம் கொண்டவர்;

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்னும் குறளோடு ஒத்து வாழ்பவர்; நாட்டுக்கு நல்ல தமிழ் எழுத வழிகோலியவர்; வரலாறு கண்டவர். அன்னாருடைய எழுத்துக்களின் பகுதிகள் என்றென்றும் எழுத்தாளர்கள் பின்பற்றக் கூடியவை. அவை பொதுச் சொத்தாக என்றென்றும் பாதுகாத்து பயன் பெறக் கூடியவை. கடமை, செயல், வாய்மை, கடியாமை போன்ற நற்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற குணக்குன்றான நல்ல தமிழ்ச்சொல்லேருழவர் பேராசிரியர் அவர்களைப் பாராட்டுவது எளிதானதன்று. கடந்த சில ஆண்டுகளில் நான் கண்டவை எத்துணையோ? காணாதவை எத்துணையோ? உள்ளத்து உணர்ச்சியாய் ஊறிக் கிடக்கும் எண்ணங்களை வடித்தெடுப்பது என்பது எளிதானதன்று. அறிவுக் களஞ்சியமாம் அ. கி. ப.

அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா நடைபெறுகின்றது. அது பெருமைக்குரிய மதுரை மா நகரில் திருவள்ளுவர் கழகத்தாரின் நன் முயற்சியால் நடத்தப் படுவது சாலப் பொருந்துவதாகும். அவ் விழாவில் பங்கேற்றுப் பேராசிரியர் அவர்களுக்குப் பொற்பதக்கம் அளிப்பது எங்களுக்குப் பெருமை அளிக்கின்றது. ஏன், எழுத்தாளர் உலகுக்கே பேருவகை அளிக்கிறது என்று தான் கூறவேண்டும். எனவே, இது ஓர் இனிக்கும் செய்திதானே...?

வாழ்க நமது அருமைப் பேராசிரியர்!
வளர்க அவர்கள் தமிழ்ப் பண்பு!

## வாழ்க, நற்றமிழர்!

வி. க. சீனிவாசன், B.A., L.T., மதுரை.

2—4—1955 அன்று காலை தமிழ்ப்பேராசிரியரும் பன்னூல் ஆசிரியருமான உயர்திரு அ. கி. பரந்தாமனர் அவர்களைக் கண்டு அளவளாவும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நான் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றிருந்த போது சாய்வு நாற்காலியில் அமர்ந்து எதிலோ எண்ணம் செலுத்தியிருந்தார்கள். நான் சென்று "வணக்கம்" என்ற போது ஏற்கனவே பழகிய இயல்புகாட்டி, "வாருங்கள், அமருங்கள்," என்றூர்கள். அவர் சுட்டிய நாற்காலியில் உட்கார்ந்தேன். என் எதிரே அன்பும் நண்பும் பண்பும் உருக்கொண்டு தோற்றங் காட்டுவதை உணர்ந்தேன்.

"நீங்கள்......" என்று உரையாடலைத் துவக்கினர் திரு. அ. கி. ப.

"ஐயா! யான் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிகிறேன். 'பரிதிமாற் கலைஞரின் பெண்

வழிப் பேரன் யான்," என என்னை அறிமுகம் செய்து கொண்டேன்.

"மிகவும் நன்று. 'பரிதிமாற் கலைஞர்' தமிழ்க்கடல் அல்லவா! அவருக்குத்தான் எவ்வளவு தமிழுணர்ச்சி! நல்லதொரு தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நீங்கள். மெத்த உவகை. தமிழுணர்ச்சி தங்கள் உள்ளத்திலே நிரம்பியுள்ளதென்றால் வியப்பில்லை. ஆசிரியப் பணி நல்ல பணி என்பது எனது கருத்து."

பேராசிரியர் தமிழிலக்கியப் பூங்காவிலே என்னையும் உடனழைத்துச் சென்றவாறு உலவி வந்தார். இருவரும் இலக்கிய உலகின் இன்பமார் ஒளியையும் தென்றல் காற்றையும் மாந்தியிருந்தோம். பின்னர் சில வினாக்கள் விடுத்தேன்; அவர்களும் அமைதியுடன் ஆனால் உறுதிப்பாட்டுடன் விடை பகர்ந்தார்கள். யான் பேறு பெற்றவன் ஆனேன்.

"ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்று சொல்கிறார்களே, இவற்றுள் தலையாயது எதுவோ?"

"நல்ல வினா! தலையாய கலை அறுபத்து நான்கனுள் அடங்கவில்லையே; அக்கலை அவற்றைத் தன்னுள் அடக்கியது: அது அரியது, பெரியது!"

"என்ன, ஐயா!"

"ஆம் மானிடர்க்கு இன்றியமையாத அது வாழ்க்கைக் கலையேயாகும்."

"சற்றே விளக்க வேண்டும், ஐயா!"

"தொல்காப்பியம் பயின்றிருக்கலாம். ஞான நூல் வான நூல் பயின்றிருக்கலாம். தமிழிலக்கியம் ஆங்கில இலக்கியம் பயின்றிருக்கலாம். இசை, ஓவியம், நாடகம், நடனம் என்னும் நுண் கலைகள் பயின்றிருக்கலாம். எது

பயின்றால் என்ன? வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்க்கைக் கலையை அறிந்திராவிட்டால் யாது பயன்? கலைகளிலும் பெரிய கலை வாழ்க்கைக் கலை. கலைகள் எல்லாம் வாழ்க்கையின் நிழல்கள். வாழ்க்கையோ கலைகளுக்கெல்லாம் உயிர்! ஆகையால் எக்கலைகள் கற்றிடினும் தக்கவாறு இப்புவியில் நிலவ வாழ்க்கைக் கலையைக் கற்றுக்கொள்ள வேண்டுவது அவசியம்."

"ஐயா, வாழ்க்கைக் கலை என்பது யாது?"

"பெரிய வினா ஐயா, இது! ஏதோ எட்டிய மட்டும் சிறிது விளக்குவேன். இன்ப துன்பம், போராட்டம் அமைதி, உழைப்பு ஓய்வு, வெற்றி தோல்வி, விருப்பு வெறுப்பு, உளநிறைவு நிறைவின்மை, அன்பு, பசி, காதல் இவற்றால் ஆனதுவே வாழ்க்கை. இங்ஙனம் உள்ள வாழ்க்கையை எங்ஙனம் நடத்த வேண்டும் என்று தெரிந்து நடப்பதுதான் அறிவுடைமை. இதுதான் வாழ்க்கைக் கலை."

"நல்வாழ்வு வாழ விழைபவர்கள் நாடவேண்டிய நோக்கம் எதுவோ?"

"'எதுவரினும் சரியே இது வாழ்வின் நெறியே' என மனவுறுதியோடு இன்ப நோக்கை வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டு வாழ வேண்டும். இத்தகைய நோக்கமே தாழ்வில்லாத நல்லின்பம் நல்கி உலக வாழ்க்கையை இனிதாக்க வல்லது."

"கடவுள் நம்பிக்கைபற்றிய தங்கள் கருத்து...?"

"கடவுளை நம்புவது கண்மூடிப் பழக்கம் என்று எண்ணிவிடலாகாது. பெரும்பாலும் கற்றாரும் கல்லாதாரும் ஒழுக்க நெறியில் வழுவாது நடப்பதற்கும், துன்ப மிகுந்து மனம் முறியுங் காலத்தில் இன்பவொளி காண்பதற்கும் கடவுள் எண்ணம் பெருந்துணை செய்யும்.

'ஒருவனே தேவன்' என்னுங் கடவுள்பற்றே ஒவ்வொருவர் உள்ளத்திலே இருக்க வேண்டிய பற்றாகும்."

"யான் வாழ்க்கையில் சட்டமாகக் கொள்ளத்தக்க தமிழ்ப் பாடல்கள் ஒன்றிரண்டு இயம்புங்கள், ஐயா! நன்றியுடையேன் ஆவேன்."

"நாலடியாரிலிருந்து இரண்டு வெண்பாக்களைச் சொல்கிறேன். குறித்துக் கொள்ளுங்கள் :

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

இவை உங்கட்கு நன்கு வழிகாட்டும், முன்னேறச் செய்யும்"

"நன்றி, ஐயா, நன்றி; தங்களோடு உரையாடியதில் பெரும் பயன் பெற்றுள்ளவன் யான். தங்கட்கு நேரம் பொன்னனையது. யான் விடைபெறுகிறேன். வணக்கம்."

புறப்படுகின்ற நேரத்திலே பேராசிரியர் அன்பளிப்பென, "நல்ல தமிழ் எழுத வேண்டுமா?" என்னும் தமது நன்னூலை எனக்கு அருளினர்கள். தமிழ் கற்போர் பயில வேண்டிய இன்றியமையாத நூலிது.

நிரம்பிய உள்ளத்தோடு, நற்றமிழர் ஒருவரைக் கண்டு உரையாடி உவகை பூத்த உள்ளத்தோடு, பெரும் பயன் பெற்ற பாங்கோடு வீடு நோக்கித் திரும்பினேன்.

"நல்ல தமிழ் எழுத வேண்டுமா?" என்னும் ஆக்கம் தரு நூலை எடுத்துப் பார்க்கும் போதெல்லாம்,

"ஆசிரியர் அன்பளிப்பு — திரு V. G. சீனிவாசன், B.A., L.T. அவர்கட்கு—அ. கி. பரந்தாமனர்—2-4-'55"

என்பது கண்ணில் படும். பேராசிரியரின் தமிழ்ப் பேருள்ளத்தைப் போற்றுவேன். அவர் தந்த நூலை அருஞ் செல்வமென மதித்திருப்பேன். அத்தேதி என்றென்றும் என் உள்ளத்தில் பசுமையாக நிலைத்திருந்து 'வாழ்க்கைக் கலை' விளக்கிய நற்றமிழரை நினைப்பூட்டிக் கொண்டே இருக்கும்!

### சென்னை மாணவர் மன்ற நல்வாழ்த்து

மயிலை சிவ. முத்து,
தலைவர்.

கோ. வில்வபதி,
தணிகை உலகநாதன்,
அமைச்சர்கள்.

நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் உலகில் எவர்க்கும் அஞ்சாப் பெருநெறியும் திமிர்ந்த ஞானச் செருக்கும் அமைந்தொளிரும் தமிழறிஞர் பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்களுக்கு அறுபதாம் அகவை நிகழ்வது நினைந்து நனிமிக மகிழ்கின்றேம். கேட்டார்ப் பிணிக்கும் சொல்வன்மை மிகுந்த நாவல ராய்த் தித்திக்கும் தேனமுதக் கவிதைகள் இயற்றும் பாவலராய்த் தனித்தமிழ் போற்றும் தமிழ்க் காவலராய் அருங்குணக் குன்றன்னராய் விளங்கும் பைந்தமிழ்ப் புலவர் பரந்தாமனர் அவர்களுக்குச் 'சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த' மதுரை மா நகரில் மணிவிழாக் கொண்டாடுவது கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத் தின்புறுகின்றேம். பேராசிரியர் பரந்தாமனர் அவர்கள்,

இமயத்து ஈண்டி இன்குரல் பயிற்றிக் கொண்டல் மா
மழை பொழியும் நுண்பல் துளியினும் வாழிய பலவே!
என்று உள்ளம் களித்து வாழ்த்துகின்றோம்.

தொண்டை நாடு தந்த தமிழ்ச் செல்வராய் விளங்கும் அ. கி. ப. அவர்கள் சென்னை மா நகரில் புரசையம் பதியில் அமர்ந்து அற்றை நாட்களில் ஆற்றிய அருந் தமிழ்த் தொண்டுகளின் நினைவு அலைகள் எங்கள் உள்ளங்களில் என்றும் பசுமையோடி நிற்பனவாகும். பனி பெய்யும் நள்ளிரவானாலும், பகலோன் காயும் நடுப்பகலானாலும் கவலாது சென்னை மாணவர் மன்றத்திற்கு வந்திருந்து தொண்டாற்றித் தமிழ்வளர்த்த அ. கி. பரந்தாமனர் அவர்கள் இன்றும் மாணவர் மன்றப் பணி போற்றும் புலவராகத் திகழ்ந்து வருகின்றார்கள். சென்னை மாணவர் மன்றம், புரசைத் திருவள்ளுவர் கழகம் ஆகிய அமைப்புக்களின் வாயிலாக அ. கி. ப. அவர்கள் எழுப்பிய தமிழ் முழக்கம் ஆயிரக்கணக்கான தமிழர்களை விழித்தெழச் செய்தது. புரசைப் பகுதியில் இன்று புலவர்களும், கவிஞர்களும் அறிஞர்களும் மிகுந்துள்ளமைக்குக் காரணராய் விளங்குபவர் அ. கி. ப. அவர்கள் என்னும் உண்மையினை எண்ணுந்தோறும் இறும்பூதெய்துகின்றோம்.

தலைநகரில் தமிழ்விருந்து நல்கிய தனிப்பெரும் புலவரைச் சங்கம் கண்டு தமிழ் வளர்த்த மா மதுரை தன் மருங்கிருந்து தமிழ்பரப்ப அழைத்தது. இத்தகு இனித்த முடைய வாய்ப்பினைத் தமிழ்ப் பெருமகனர் அ. கி. ப. அவர்கள் உடனே உளமுவந்து ஏற்றார். ஏற்ற பணியினை எழிலுற ஆற்றி முடிக்கும் அருந்திறனமைந்த அ. கி. ப. அவர்கள் இன்று மதுரை மூதூரின் புகழ்மணக்கும் தமிழ்ச் சான்றோராக விளங்குகின்றார்கள்.

அ. கி. ப. அவர்கள் ஆற்றிவரும் அரும்பெருந் தொண்டுகளை விளக்கிக் கூறின் விரியும், சுருக்கிச் சொல்லின் எஞ்சும் என்று அஞ்சுகின்றோம். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்–தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்னும் பெருநோக்குடன் அருந்தமிழ்ப் பணி புரிந்துவரும் அ. கி. ப. அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகு நன்கறியும். மக்கள் நல்ல தமிழ் எழுத, பேச்சாளராக, கவிதை இயற்றக் கற்றுத் தரும் வகையில் என்றும் இறவாப் பெரும் பணி புரிந்து வரும் அ. கி. ப. அவர்கள் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க இடத்தினைப் பெற்றுவிட்டார்கள்.

அ. கி. ப. அவர்கள் வாழ்ந்தால் நல்ல தமிழும் தமிழர் பண்பாடும் வாழும், வளரும் என்பதைத் தமிழ்ப் பெரு மக்கள் நன்குணர்ந்து நான் மாடக் கூடலில் மணி விழாக் காண முடிவு செய்தது பெருஞ் சிறப்புப் படைத்ததென எண்ணி மகிழ்கின்றோம்.

அ. கி. பரந்தாமனர் அவர்களின் மணிவிழா தமிழ் நாடெங்கணும் கொண்டாடப் பெறல் வேண்டும் என்று கருதுகின்றோம்.

மாசறு தமிழ் வளர்க்கும் மதுரைத் திருவள்ளுவர் கழகப் பேரன்பர்கள் அ. கி. ப. அவர்களுக்கு மணிவிழாக் காணும் பெரும் பணியில் மிகுவென்றி பெற எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினரைப் பின்பற்றித் தமிழகத்தின் பல்வேறு கழகங்களும் மன்றங்களும் மணிவிழாக் கண்டு அ. கி. ப. அவர்களைப் பாராட்டுதல் வேண்டும் என்று இப்பொன்னுளில் கேட்டுக் கொள்கிறோம்.

தனித் தமிழ் வளர்க்கும் தகைசால் அறிஞர் அ. கி. பரந்தாமனர் அவர்கள் எல்லா நலன்களையும் மேன்மேலும் பெற்று வையை நுண்மணலினும் நீடு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலேயினர்
பாராட்டுப் பொன்னுரை — 14-1-1962

மணிவிழாக் கொள்ளும் மாண்புறு தமிழறிஞரே, வாழி, வாழி! வணக்கம்! தங்களை இம்மணி விழாவில் வாழ்த்தும் பேறு பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கின்றோம்; உள்ளம் களித்து வாழ்த்துகின்றோம்.

தண்பாண்டி நாட்டில் தண்ணூர் தமிழ் வளர்க்கும் தகைசால் அறிஞரே, வாழ்க! வணக்கம்!

எண்ணம் சொல் செயலால் ஏற்றமிகு தமிழ்ப்பணி புரிந்துவரும் தாங்கள் நல்லுடற்பேற்றுடன் பல்லூழிக் காலம் வாழ்க வாழ்க என்று இப்பொன்னுளில் வாழ்த்துகின்றோம். தமிழ் ஆர்வமும் சிறந்த ஒழுக்கமும் மிகுந்த மாணவ மணிகளை உருவாக்கிவரும் தாங்கள் நாட்டின் காவலராக விளங்குகின்றீர்கள். தங்கள் நுண்மாண் நுழை புலத்தாலும் அருந்திறனுலும் அறிவாற்றலினுலும் எழுந்த தமிழ் நூற்கள் கலைக்களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. தங்களால் மொழியும் மக்களும் நாடும் பெற்றுவரும் பெரும் பயன்கண்டு பேருவகைக் கடலில் திளைத்தின்புறுகின்றோம்.

ஈத்துவக்கும் இயல்பினராம் தமிழவேள் தலைமையில் இனித்தமுடன் விழாக்காணும் உத்தமரே,

தங்கள் மணிவிழா, தமிழ்ப்பெரு விழாவாகத் திகழ்வது கண்டு பெரிதும் மகிழ்கின்றோம். தமிழ்நாடு பெற்ற தமிழ்ச் செல்வர் தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பிக்கவும், எழுபதாம் அகவையினைக் கடந்த நிலையிலும் தமிழர் தம் எழுச்சிக்குப் பண்பாடி வரும் பேராசிரியர் மயிலை சிவ. முத்து அவர்களும், அவர்களைத் தொடர்ந்து பல பேரறிஞர்களும் பாராட்டுரை வழங்கவும் இம்மணிவிழா மாபெரும் பெருவிழாவாகத் திகழ்கின்றது.

தங்களை எங்கள் உள்ளமெல்லாம் இனிக்க வாழ்த்துகின்றோம். தாங்கள் வருபுகழும் பெருந்திருவும் வளம் பலவும் பெற்று நீடு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

அன்பும் பண்பும் மிகுந்த அறிவும் திருவும் நிறைந்த அருங்குணப் பெரியீர்,

தாங்கள் எங்கள் கல்வி நிலையத்தோடு ஒன்றியிருந்து ஊக்கமூட்டும் பேரன்பராய்த் திகழ்ந்து வருகின்றீர்கள். இந்துமத பாடசாலையிலும் வள்ளலார் இல்லத்திலும் பயன் பெற்றுவரும் ஓராயிரத்து எண்ணூற்று மாணவ மணிகளின் சார்பிலும் எங்கள் சார்பிலும் தங்கட்கு வணக்கமும் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மணிவிழாத் தலைவர் அ. கி. பரந்தாமனர் வாழ்க!

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தினரின் மாண்புறு பணிகள் வாழ்க! வளர்க! வெல்க!

### நெல்லைச் சமரச சுத்த சன்மார்க்க சங்க வாழ்த்து

சு. முத்துசாமி,
ஆசிரியர்.

'அருள்ஒளி',
நெல்லைநகர்.

பேராசிரியப் பெருமகனர் பரந்தாமனர் எம்.ஏ. அவர்கட்கு மணிவிழாக் கொண்டாடுவது தமிழணங்கிற்குச் செய்யும்விழாவாகும். அவர்கள் கடந்த நாற்பதாண்டுகட்குமேலாகத் தமிழே நினைந்து, தமிழே பேசி, தமிழ்த் தொண்டே புரிந்து, நாவரசரின் பொன்மொழியாம் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு இலக்கியமாக இன்றும் காட்சி யளிக்கின்றார்கள். அவர்கள் எங்கள் சமரச சன்மார்க்க சங்கத்துடன் பத்தாண்டுகளாகத் தொடர்பு

கொண்டு வள்ளற் பெருமானும் இராமலிங்க அடிகளாரின் கருத்துக்களைத் தெள்ளு தமிழில் வடித்துப் பேசியும் எழுதி யும்வருபவர்கள்; "அருள் ஒளி" என்னும் எங்கள் திங்கள் இதழில் காலந்தவறாது கட்டுரையனுப்பியும், அன்பர்கள் இதயங்குளிர "இங்கித மாலை" என்னும் திருவருட்பாப் பகுதிக்கு இனிய உரை வரைந்தும் காலத்திற்குத் தக்க பணி செய்பவர்கள்; "அருள் ஒளி" என்னும் செய்தி இத ழுக்குக் கூட்டாசிரியர் குழு உறுப்பினராக அமைந்து பெருமைப்படுத்தி வருபவர்கள். ஊதியம் கருதாது உழைப்பதையே கொள்கையாக யுடையவர்கள். இப்படிப் பட்ட பெருந்தக்காராம் தமிழ் உள்ளங் கொண்டாருக்கு எடுக்கும் விழாச் சிறப்படைவதாக! அவர்கள் வள்ளற் பெருமான் திருவருளால் மேலும் பல விழாக்களைக் கண்டு, இனிய தொண்டாற்றி நீடுழி வாழ்வாராக! வாழ்க பரந் தாமர்! வளர்க அவர் தம் வாணாள்! ஓங்குக புகழ்!

**திருமங்கலம் திரு. வி. க. தோழமைக் கழகத்தாரின் வாழ்த்து**

வி. இரத்தினம்,
செயலாளர்.

திருமங்கலம்,
மதுரை மாவட்டம்.

தங்கள் கழகத்தின் சார்பில் தமிழ்ப் பேராசிரியர் திரு அ.கி. பரந்தாமனார் எம்.ஏ. அவர்கட்கு மணிவிழாக் கொண் டாடுவது குறித்து மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தோம். தமிழ்த் தொண்டே குறிக்கோளாகக் கொண்ட தங்கள் கழகம் தமிழ்ப் புலவரைப் பாராட்டுதல் சால்புடைத்தே. பல்லாண்டுகளாகத் தமிழ்ப் பேராசிரியராகவும் சிந்தைக் கினிய செந்தமிழ் நூலாசிரியராகவும் செவிக்கினிய சொற் பொழிவாளராகவும் பேராசிரியர் செய்து வரும் தமிழ்ப்

பணிகள் தமிழுலகம் அறிந்தனவேயாகும். ஆக்கமும் ஊக்கமும் நல்கும் அவரது தமிழ்ப்பணி மேன்மேலும் சிறந்தோங்குமாறு நீடிய ஆயுளும் நல்லுடல் வன்மையும் பெற்றுப் புகழ்ச் செல்வராக வாழ வேண்டுமென்று எங்கள் திரு. வி. க. தோழமைக் கழகத்தின் சார்பாக வாழ்த்துக் கூறுகின்றோம்.

## பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் வாழ்த்து

எஸ். வீரராகவன்,
செயலாளர்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்,
பம்பாய்-22.

பேராசிரியர் அ. கி. பரந்தாமனர், எம்.ஏ. அவர்களின் மணிவிழாவைக் கழகத்தில் கொண்டாட இருப்பதை அறிந்துமிகவும்மகிழ்ச்சி. பொன்னுடை போர்த்தி வாழ்த்து மலர் வழங்கிச் சிறப்பிக்கப்படவிருக்கும் அம்மணிவிழா, பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய இந்தப் பாராட்டுவிழா மணியாக அமையச் சங்கம் தன் இதயங் கனிந்த வாழ்த்துக்களை அளிக்க விரும்புகிறது.

வாழ்க பேராசிரியர் அ. கி. பரந்தாமனர்!
வாழ்க மதுரைத் திருவள்ளுவர் கழகம்!
வாழ்க தமிழ்!

## விருதை மாதர் மணிவாசக சங்கத்தாரின் வாழ்த்து

ச. ப. தொ. மீனம்மாள், விருதுநகர்,
செயலாளர். இராமநாதபுர மாவட்டம்.

இருபெருந்திருவும் ஒருங்கெய்திய கலைமன்னரும் கொடை வள்ளலுமாகிய கருமுத்து தியாகராசர் அவர்களின் கல்லூரியிலே பண்டைக் காலத் தமிழ்ப் புலவராகிய நக்கீரரை நினைவூட்டிக் கொண்டு தமிழ் விரிவுரையாளராய்த் திகழும் திரு. அ. கி. பரந்தாமனுர், எம்.ஏ. அவர்கள் தமிழ்த் தாயின் தவப் புதல்வர்; பலநூல்களியற்றித் தமிழ் மொழித் தொண்டாற்றும் பேரறிஞர். கல்லூரி மாணவர் கருத்தை ஈர்க்கும் வண்ணம் தமிழ்ச் சுவையூட்டும் அவரது திறமையாவரும் அறிந்ததே. சற்குருநாதன் திருவருளால் அறுபது யாண்டு நிறைவெய்துவதாகிய இப்பொன்னுளில் அவர்களை மனமார வாயார வாழ்த்துகிறோம். அவர்கள் சகல செல்வயோகமிக்க நல்வாழ்வும் நல்லுடலும் எய்தி இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழக் கூத்தப் பெருமானின் தூக்கிய திருவடியை ஏத்தி இறைஞ்சுகின்றோம்.

## விருதைக் காரைக்காலம்மையார் பெண்கள் வைதீக வித்தியாலயத்தாரின் வாழ்த்து

சி. நாகம்மாள், விருதுநகர்,
ம. ச. க. ந. வில்லி புஷ்பம்மாள், இராமநாதபுர
செயலாளர்கள். மாவட்டம்.

மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. அ.கி. பரந்தாமனுர்,M.A. அவர்களுக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் மணிவிழாக் கொண்டாடுவது அறிந்து பெருமகிழ்ச்சி எய்துகிறோம்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக விளங்கும் பெரும்புலவர் திருமிகு பரந்தாமனுர் அவர்கள், அன்னூரிடம் ஒரு சிறிது பழகினுலும், "இனி இத்தகைய குணப்பெருங் குன்று போன்றோரை எப்பொழுது கண்டு உரையாடி மகிழ்வோம்" என்று எண்ணும் வண்ணம் கற்றோரைப் பிணிக்கும் கல்விக் கடலாகக் காட்சியளிக்கும் கலைச்செல் வர் பரந்தாமனுர் அவர்கள், பரந்த நோக்கமும், சிறந்த செந்தமிழ்ப் புலமையும், எளிய தோற்றமும், ஆற்றொழுக் குப் போன்ற அழகிய விரிவுரையாற்றும் திறமையும் பெற்ற பேராசிரியர் பரந்தாமனுர் அவர்கள், இன்னும் பல்லாண்டு வாழ்க; பல பல நூல்களைத் தமிழ்த்தாய்க்குத் தருக; தம் மைப் போலத் தமிழ்ப் பேரறிஞர்களைப் படைத்துத் தந்து தமிழ் நாட்டுக்கு நற்பணி செய்க; பற்பல அணிவிழாக் கண்டு தமிழ் மக்கள் போற்றப் புகழ் பூத்து நீடு வாழ்க" என எங்கள் அன்னையாம் காரைக்காலம்மையின் திருவடி மலர்களை இறைஞ்சி வாழ்த்துகிறோம்.

### தஞ்சைத் தொல்காப்பியர் கழகத்தாரின் வாழ்த்து

புலவர் தி. பாலசுப்பிரமணியன்,
பொதுச்செயலாளர்.

2536, வே. பெ.
கோயில் திருமுன் தெரு,
தஞ்சை.

பேராசிரியர் பரந்தாமனுர்க்குச் சிறந்த முறையில் மணிவிழா நடத்தும் திருவள்ளுவர் கழகம் வாழ்க! தமிழறி ஞர்கள் பாராட்டப் பெறும் நிகழ்ச்சிகள் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டுக்களாகும். நாடோறும் தமிழ்ப்பணி செய் தலையே தம் தலையாய பணியாய்க் கொண்டு வாழ்ந்து வரு கிற பேராசிரியர்க்கு எழுத்தாளர் மன்றம் 'பொற் பதக்கம்' அளிப்பது பெரிதும் பாராட்டற்குரியதாகும்.

மணிவிழாக் கண்டு மகிழ்கிற பேராசிரியர் மேலும் பல விழாக்களைப் பெற விழைகின்றோம். மணிவிழா, சிறப்பாய் நடைபெறுகின்றமை அறிந்து தொல்காப்பியர் கழகம் பெரு மகிழ்ச்சியடைகின்றது. வாழ்க பரந்தாமனர்! வளர்க எழுத்தாளர் மன்றம்! நன்றி, வணக்கம்.

### கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் வழங்கிய வாழ்த்து

எஸ். குப்புசாமி,
செயலாளர்.

93-A, இராஷ் பீகாரி அவினியு,
கல்கத்தா.

பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் அவர்களது மணிவிழாப்பற்றிய செய்திகிடைக்கப்பெற்றோம். விழா இனிதே நடைபெற எல்லாம்வல்ல இறைவன் அருளை வேண்டுகின்றோம்.

உயர்திரு. பரந்தாமனர் அவர்கள், நீடித்த ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்று, இன்றுபோல் என்றும் உற்சாகமுடன் தமிழ்த்தொண்டு புரியக் குழந்தை வெண் மதிக் குடுமியன் செந்தாள்களைப் போற்றி இறைஞ்சுகின்றோம்.

## திருத்தசாங்கம்

பு. மு. சாந்தமூர்த்தி, M.A.,
மதுரை.

### பெயர்

பாடத் துடிக்கும் பசுங்குயிலே செந்தமிழைப்
பாட அமைந்தார்பேர் பாடாயோ—நாடத்
தரநிற்கும் தண்ணுர் தமிழ்பெற்ற மைந்தன்
பரந்தாம ளுரென்று பாடு. 1

### நாடு

பாட்டுப் பொருளாய்ப் படர்குயிலே பாவலரின்
நாட்டுப் பெயர்தான் நவிலாயோ—ஈட்டும்
புகழ்சேரப் பைந்தமிழில் புத்துணர்வைக் காட்டும்
திகழ்தொண்டை நாடே தெளி. 2

### ஊர்

விண்ணில் இசையாய் விரையும் இளங்குயிலே
அண்ணலவர் ஊரை அறிவிப்பாய்—எண்ணில்
திறமுடையார் என்றும் தெளிவுடையார் அன்பால்
உறவாடும் சென்னையே ஊர். 3

### ஆறு

இன்ப மொழிபாடும் இன்னிசை தேர்குயிலே
அன்ப ரவர்காணும் ஆறுரையாய்—முன்னம்
பெரும்புகழாய்த் தாளுேடிப் பேரின்பம் தந்த
பெரும்பாலா றென்றுநீ பேசு. 4

### மலை

இன்மொழி சொற்குயிலே ஈட்டுபுகழ் நல்லன்பர்
என்றும் மருவுமலை என்னென்பாய்—இன்றும்

அருளுடனே வாழும் வடஎல்லை கொண்ட
திருத்தணிகை நன்மலையாய்த் தேர். 5

ஊர்தி

தென்றலிடை ஊரத் தெரிந்தாடும் நற்குயிலே
மன்னரவர் ஊர்கின்ற மாண்பென்ன?—மன்னும்
உலகவாழ்வில் நல்லமைதி ஒன்றடையத் தேர்ந்த
இலக்கியமே ஊர்ந்தார் இனிது. 6

படை

இன்மென் மொழிக்குயிலே இன்னல் ஒழிந்திடவே
அன்பர் கரங்கொள் அழிபடையென்?—என்றும்
திருத்தம் செய்யத் தெரிந்தெடுத்தார் குற்றம்
திருத்தும் இலக்கணத்தைத் தேர்ந்து. 7

முடி

தண்ணார் மொழியைத் தருங்குயிலே நெஞ்சுடையார்
கொண்ட முடிவைத்தான் கூறிடுவாய்—பண்ணார்ந்து
நெஞ்சுடனே பண்பை நிலைநிறுத்திச் சொற்பயிலும்
அஞ்சாமை என்றே அறி. 8

தார்

மஞ்சுதவழ் மாண்பின் மணிக்குயிலே மாசில்லா
நெஞ்சுடைய நல்லார்மெய்த் தாரென்ன?—செஞ்சொல்லில்
பண்ணோடு வாழ்த்திடப் பாவலர் கொள்கின்ற
தண்டமிழே அன்னவரின் தார். 9

கொடி

இன்னோசை நல்லிசை இங்களிக்கும் மென்குயிலே
அன்புடையார் கைக்கொடி ஆட்டிடுவாய்—குன்றாய்ப்
பகைவரினும் மெய்யைப் பகர்ந்திடத்தான் கொண்டார்
பகைமாய்க்கும் உண்மைக் கொடி. 10

பண்பு நலத்தின் படிவம்

வித்துவான்
வீ. ப. கா. சுந்தரம், எம். ஏ.,
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

நேரிசை வெண்பா

அன்பர்நல் லாசிரியர் ஆய்ந்துணர் பேரறிஞர்
இன்பர் எவர்க்கும் எளியர்—துன்பகற்றும்
பண்பு நலத்தின் படிவம் பரந்தாமர்
தண்புகழ் வாழ்க தமிழ்க்கு. 1

தீரா அன்பினுல் செந்தமிழ்த் தேனுண்ணும்
பேரா சிரியர் பெருமானுர்—சீராரும்
வல்ல தமிழை வளர்த்த பரந்தாம
நல்லரைப் போற்றுவோம் நாம். 2

இன்னிசை வெண்பா

தாமரை போன்ற தகைசால் முகமும்
சாமரைமென் காலென்னச் சாந்த அகமும்
ஏமமாம் நல்லுறவும் இன்றளவும் கொள்பரந்
தாமனுர் வாழ்க தமிழ்க்கு. 3

(வேறு)

ஞாலம் புகழும் நாயக்க
நல்ல மன்னர் வரலாறு
கால மெல்லாம் கணித்தறிந்து
கற்ருேர் போற்றக் கனிந்தளித்தார்
சாலச் சிறந்த சற்குணரின்
சாந்தம் நிறைந்த மாணவராம்
சீலஞ் செறிந்த பரந்தாமர்
சிந்தை நிறைந்து வாழ்த்துவமே. 4

கல்லில் பொறித்த வரலாற்றைக்
கண்டு தெளிந்து கனிந்தளித்தார்
சொல்லில் இன்பக் கவியமுதம்
சொட்டச் சொட்டச் சுவையளித்தார்
செல்லாச் சிற்றூர் பள்ளியெலாம்
சென்று தமிழ்மா மழைபொழிந்தார்
நல்லார் பண்புப் பரந்தாமர்
நாளும் நாளும் போற்றுவமே. 5

(வேறு)

உள்ளத்தே உறைஇருள் ஒழிந்திட அறிவெனும்
ஒளியை ஏற்றிப்
பள்ளத்தே பாய்ந்திடும் புனலென அன்பினைப்
பாய்ச்சி நட்டுத்
துள்ளித்தி ரிந்திடும் பள்ளியர் மகிழ்வுறக்
கலைகள் ஈந்து
தெள்ளத்தெ ளிந்திடச் செய்பவர் சீர்பரந்
தாம னாரே. 6

## தன்னேரில்லாத் தமிழ் பெற்றார்!

மதுரைத் தியாகராசர் நன்முறை
உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்
புலவர்மணி—வித்துவான்
தி. கி. சுந்தரமூர்த்தி.

நினைத்தால் சிரிக்கும் பேச்சுமுறை
நெடிதே ஆற்ற வல்லவராம்
நினைத்தால் எல்லாம் செய்தருளும்
நிகரில் தன்மை பெற்றவராம்

நினைத்தால் தொன்மைத் தமிழ்ப்புலவர்
நேர்மை கொண்ட உருவினராம்
அனைத்தும் பெற்ற பரந்தாமர்
அறுபானுண்டு நிறைந்தவராம்! 1

உள்ள முவந்து வள்ளுவனர்
உரைத்த அறநூல் உலகெல்லாம்
கொள்ளும் வகையில் எளிதாகக்
கூறிப் பரப்பும் கொள்கையராய்த்
தெள்ளு தமிழ்நூல் நெறிவகுத்துத்
தேர்ந்து நடக்க வழிகாட்டும்
விள்ளற் கரிய பரந்தாமர்
மேவும் பணிகள் விளங்கிடுக! 2

சென்னை நகரில் சிலவாண்டு
சிறக்கப் பணிகள் செய்துயர்ந்தார்!
மன்னு தமிழ்க்குப் பணிகள்பல
மாண்பா யியற்றிப் புகழ்பெற்றார்!
தென்னர் நாடும் தம்பணியால்
சிறக்க மதுரை நகருற்றார்!
தன்னே ரில்லாத் தமிழ்ப்பணியைத்
தலைமேற் கொண்டு போற்றிடுவோம்! 3

எங்கும் தமிழே இலங்கிடவும்
எங்குந் தமிழே இசைத்திடவும்
எங்கும் தமிழே நடமிடவும்
எங்குந் தமிழே நிறைந்திடவும்
எங்கும் தமிழே வளர்ந்திடவும்
எழுத்தால் சொல்லால் பணியாற்றும்
எங்கள் இனிய பரந்தாமர்
என்றும் நின்று வாழியவே! 4

## சொல்லின் செல்வன்

புலவர் வே. ஐயா நாயக்கர்,
ஆரணி.

பூமகள் நாமகள் காமுறும் சான்ருேர்
உறையும் தொண்டை நாட்டில் நிறையும்
பொன்வள மாருஞ் சென்னைமா நகரில்
தாளாண்மை மிக்க வேளாண் மரபில்
உயர்குடித் தோன்றும் நயனிறை யன்பன்
ஆங்கிலஞ் செந்தமிழ் பாங்குடன் தேர்ந்தோன்
நல்ல பண்பினன் சொல்லின் செல்வன்
ஆய்ந்த நூல்செய வாய்ந்தபே ராசான்
மலைநிலந் துலாக்கோல் மலர்நிகர் மாண்பினன்
அமிழ்தினும் இனிய தமிழ்வளர் மதுரைத்
தியாக ராயர்கல் லூரியின் உயர்தமிழ்ப்
பேராசிரியனுய் யாரும் போற்றப்
பணிசெய் அறிஞன் அணிதிரு வள்ளுவர்
கழகத் தொண்டிற் கலந்தோன் பற்பல
சிற்றூர் பேரூர் சென்று நற்றமிழ்
வளர்த்து வருவோன் அளப்பி லாத்தமிழ்த்
திருமணம் பலர்க்குச் செய்து வைத்தோன்
தமிழகப் புலவர் குழுவின் உறுப்பாய்த்
தமிழ்நிலை உயரத் தமிழகம் வளர
ஆவன புரிவோன் அருந்தமிழ் காக்கும்
பரந்தாமன் என்றும் நிரந்தரம் வாழ்க!
அறுபது நிறைந்தோன் எண்பதும் நூறும்
முறையே நிரம்பி நிறைவாழ் வடைக!
'இன்னம் ஒருநூற் ருண்டிரும்' என்ன
வாழ்த்துகம் வம்மோ வண்டமிழ்ப் புலவீர்
வாழ்க வாழ்கென வாழ்த்துவம் இனிதே!

## செந்தமிழ் வாணர்

மதுரைச் செந்தமிழ்க் கல்லூரித்
தமிழ் விரிவுரையாளர்
புலவர் அன்பு கருணையானந்தா.

திருப்பரந் தாமனுர் செந்தமிழ்க் குரிசில்
அருட்பரங் குன்றத் தாறு முகனருட்
செல்வர் இவரெனச் செந்தமிழ் வாணரீர்
அறிவோம் இவர்தமக் கறுபதாம் ஆண்டு
நிறைவுறும் மணிவிழா நிகழ்த்துவான் அமர்ந்துளோம்
முன்னர் நம்முளம் முந்துவ உரைப்போம்
என்னெனில் இவர்நம தின்பத் தமிழினை
தென்னவன் உளங்கொடு சிறந்திட வளர்ப்பவர்
கலைகள் கவிதைகள் கட்டுரை முதலிய
நலந்தரும் மதுரை நகர்வர லாறுடன்
பழமையும் புதுமையும் பாங்குற நுணுகி
ஆராய்ந் துரைத்த அருந்தமிழ்ப் புலவர்
புலவர் குழுவெலாம் போற்றற் குரியவர்
தமிழ்ச்சங் கத்தைத் தந்திடுந் தமிழவேள்
பாண்டித் துரைமகன் பண்புக் குரியவர்
தக்கதோ ராட்சித் தலைமைப் பாகையர்
மிக்கவீ ரம்புரி மீசைவாழ் தீரர்
ஐந்து மடிப்புடை அந்தணர் இன்றைய
அறங்கூ றவைக்கோ ராண்டகை யாளர்
திருவள் ளுவர்சொல் திருவுளங் கொண்டே
உலகெலாம் உய்ந்திட ஓயா துரைத்து
நடந்துதம் நாட்டினர் நடக்கப் பயிற்றும்
அருந்தமிழ் முனிவர் அமுதத் தமிழ்மொழி
காக்குங் காவலன் கம்பன் பாரதி
நோக்கும் உடைய நுட்ப மதியினர்

பணியினுல் உலகெல்லாம் பண்பில் உயச்செயும்
தனித்தமிழ்ப் பாவலர் தந்தருள் வாழ்த்தினுல்
மணிவிழாப் போன்று மாபெருந் தமிழீர்!
அணிவிழா வயிர அருள்விழா வதுவும்
கண்டுநாம் வாழ்ந்திடக் கயற்கண் ணம்மையாள்
உண்டே அவளரு ளுண்டுவாழ்த் துதுமே!

செந்தமிழறிஞன்

அ. சுருளியாண்டிப் பாவலர்,
கோம்பை.

அமிழ்தினு மினிய தமிழ்நனி வளர
நாற்பா ணுண்டு நற்றமிழ்த் தொண்டு
செய்தே சிறந்த செந்தமி ழறிஞன்,
தமிழகப் புலவர் சால்புறு குழுவின்
உறுப்பின ஞகிச் சிறப்பினே யுற்ற
பரந்தாம ஞரைப் பாராட்ட எண்ணிப்
பொன்னுடை போர்த்தி இன்னுரை வழங்கி
மணிவிழா நிகழ்த்தத் துணிவுடன் முனைந்தார்
சங்கங் கண்ட தண்டமிழ் மதுரையில்
வள்ளுவர் கழகம் மாணுடன் நிறுவித்
தமிழ்ப்பணி புரியும் சான்ருேர் பலரே.
இன்னவர் முயற்சி இனிதே நிகழவும்
தொன்மொழி யாம்நம் தென்மொழி ஓங்கவும்
துங்கமாய் மதுரையிற் றுலங்கும்
அங்கயற் கண்ணி அருள்செய் திடுகவே!

எந்தலைவ வாழ்க!

மதுரைச் செந்தமிழ்க் கல்லூரித்
தமிழ் விரிவுரையாளர்
வித்துவான்
கு. மா. திருநாவுக்கரசு.

ஆன்றதமிழ் மன்னரைப் போற் றலையிற் பாகை
அணிந்துமீசை மிடுக்குடனே யஞ்சா நெஞ்சம்
தேன்மாரி போல்மேடை தோறும் நல்ல
செந்தமிழிற் சொன்மாரி பொழியும் நாவே,
கான்மணக்கும் முல்லையென மறும லர்ச்சிக்
கவிதொடுக்குந் திருவாயின் புன்சி ரிப்பே,
வான்புகழும் வள்ளுவரின் குறளிற் றேர்ந்த
வண்புலமை பெற்றபரந் தாம வாழி! 1

பழமரத்தை நாடிவரும் பறவை போல்நான்
பண்புடையோர் வாழ்மதுரை வந்த காலை
அழகுதமிழ்ச் சங்கத்திற் பணியி யற்ற
ஆசியெனக் கருள்புரிந்தீர்! மறவேன் ஐயா!
பழகுதற்குப் பைந்தமிழ்போ லினிய பண்பீர்!
பக்குவமாய் வாய்ந்தவுளத் திண்மை சாலும்
எழிற்கவிதை யாராய்ச்சி நூல்கள் யாத்த
எந்தலைவ! என்ஞான்றும் வாழ்க! வாழ்க! 2

அறுபதாண்டு மணிவிழாவை யெடுத்தே யன்பர்
அகமகிழ வாழ்த்துகின்றார் கழகந் தன்னில்;
பிறமொழியின் பெட்போங்கு நூல்கள் தம்மைப்
பெயர்த்துதமிழ்ச் செல்வத்தை நாளும் பேணிக்
கருதரிய வள்ளுவரின் குறட்க ருத்தைக்
கண்ணகன்ற வுலகெங்குங் காணச் செய்தே
திருவுடைய செந்தமிழ்போ லென்றும் நீவீர்
திக்கெல்லாம் புகழோங்க வாழ்க மாதோ! 3

புலமைச் சிங்கம்

மீ. இராசேந்திரன், எம். ஏ.,
சிவகங்கை.

ஆண்டிருந்த அண்டிரன்போல் மீசை வைத்தே
அஞ்சியைப்போல் தமிழின்மேல் ஆசை வைத்து
நீண்டுயர்ந்த தோள்களிலே வீரம் வைத்து
நீள்விழியில் முதிர் இரக்கம் வைத்து, மானம்
பூண்டிருந்த கடைச்சங்க மக்கள் வாழ்க்கைப்
புகழ்கூறும் இலக்கியத்தை நெஞ்சில் வைத்துப்
பாண்டியரின் பதியிருந்தே தமிழ்வ ளர்க்கும்
பரந்தாமன் பசுந்தங்கம்! புலமைச் சிங்கம்! 1

எழுத்துள்ள மொழிக்குத்தான் பெருமை உண்டே;
இசையுள்ள பாட்டுக்கே இனிமை உண்டு;
பழுத்துள்ள மரத்துக்கே கவர்ச்சி உண்டு;
பகுத்துண்ணும் நாட்டில்தான் அமைதி உண்டே;
அழுத்தமுள்ள மனக்கருத்தைக் கொஞ்சங் கூட
அஞ்சாமல் எடுத்துரைக்க வல்ல வர்க்கே
முழுமனிதர் என்கின்ற பட்டம் உண்டு;
முதல்மனிதர் பரந்தாமன் இவ்வி தத்தில்! 2

மருக்கொழுந்தின் மணத்தைப்போல், கூந்தல் ஏந்தும்
மல்லிகைப்பூ மணத்தைப்போல், வையம் எங்கும்
திருக்குறளின் ஒளிபரவ வேண்டு மென்றே
தினந்தோறும் பாடுபடும் தொண்டர்! நேர்மை
உருக்கொண்டே விளங்குகின்ற அறிஞர்! சான்றோர்
உளந்தெளித்த பாராட்டுப் பன்னீர் பட்டும்
செருக்கில்லா திருக்கின்ற கல்விச் சீமான்!
செந்தமிழர்க் கிவர்நூல்கள் வைரக் கற்கள்! 3

"நல்லதமிழ் எழுதுதற்கே" வழியைச் சொன்னார்;
"நாயக்கர் வரலாற்றை" அறியச் செய்தார்;
வெல்லமெனத் தித்திக்கும் தமிழில், இன்ப
வெள்ளமெனப் பாய்கின்ற கவிதை தந்தார்;
சொல்லமுதக் கடலுக்குள் மூழ்கச் செய்தே
சுகமளிக்கப் பசுமலையின் நாவலர் தாம்
இல்லையென்ற ஏக்கத்தைத் தணிக்கும் வண்ணம்
இருக்கின்ற பரந்தாமன் வான்போல் வாழ்க! 4

## தமிழ் மகன்!

கள்ளிவாடி கழக உயர்நிலைப் பள்ளி
முதன்மைத் தமிழாசிரியர்
வித்துவான் சி. இராமசாமி.

பண்பாற் சிறந்த பரந்தாமனார்புகழை
நண்பாற் சிறந்தோர் நனிநாட்ட — வண்பா
உரையால் மலர்ந்திலகும் ஒண்மலரைச் சூட்டி
விரைகமழச் செய்வோம் விழைந்து. 1

ஆண்டறுப துற்ற அறிஞர்பரந் தாமனுக்(கு)
ஈண்டு மணிவிழா ஏனெடுத்தோம் — வேண்டுமவன்
தாய்மொழிக்குச் செய்யும் தரமான தொண்டுகளை
வாய்மொழியால் வாழ்த்த மகிழ்ந்து. 2

சென்னை தனிற்றோன்றித் தென்மதுரை தான்போந்து
தன்னைத் தமிழுக்குத் தந்தென்றும் — முன்னைப்
புலவோர் மரபின் புகழ்பூக்கச் செய்யும்
நலமுடையோன் வாழ்க நயந்து. 3

உருவால் அறிவால் உயர்பண்பால் எல்லாம்
மருவும் தமிழ்மகனை வாழ்ந்து — திருவார்
எழுத்தாலும் பேச்சாலும் இயற்றமிழைப் போற்றி
வழுத்தவிவன் வாழ்க மகிழ்ந்து. 4

பைந்தமிழ் ஆய்ந்த பரந்தாமன்

வித்துவான்
நா. இராமையா பிள்ளை,
M.A.,B.O.L.

அன்பொ(டு) அருமை ஆர்வம் அடக்கம்
பண்பொடு சால்பு பதட்ட மின்மை
தூய்மை தொண்டு தொன்மை விருப்பம்
வாய்மை இனிமை வண்மை நல்ல
மதிநலம் கல்வி மாண்பு பெற்றே
மதுரை மாநகர், சென்னை விட்டே,
வந்து வாழ்ந்த வளமுடைப் பெரியோய்!
பைந்தமிழ் ஆய்ந்த பரந்தா மய்யா!
நேர்மை கண்டால் நெஞ்சம் மகிழ்வாய்
தீமை கண்டால் தீயென வெறுப்பாய்
அன்னோய் ஆகலின் அறந்தனை வழுவாய்
நின்னை நினைந்து நினக்குச் சால
நீண்ட ஆயுளும் வேண்டிய நலனும்
ஈண்டத் தருவாய் என்றே கூடல்
அங்கயற் கண்ணியை அடிபணி கின்றேன்
மங்கள அறுபதாம் ஆண்டின் போழ்தே.

பெருந்தகை!

மதுரைப் பசுமலை உயர்நிலைப் பள்ளித்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான் வீ. ப. நடராசன்.

தமிழ்மொழியைப் பரப்புதலே
தம்பணியென் றதைமேற்கொண்டீர்
தமிழ்எழுத்தைத் தூய்மையுடன்
தமிழர்களை எழுதச்செய்தீர்

தமிழ்ப்பேச்சை மேடைகளில்
தருவிதத்தில் முழங்கச்செய்தீர்
தமிழ்நாட்டின் நலன்வளர்த்தீர்
தக்கோரே பரந்தாம!வாழி. 1

அன்புருவாய் அகங்கனிந்(து)
உரையாடும் அழகுகண்டோம்
புன்முறுவல் பூத்துநிற்கும்
திருமுகமும் என்றுங்கண்டோம்
என்புருகும் நின்னுயர்ந்த
பண்புகளை யாண்டுங்கண்டோம்
பொன்னுருவாம் அடக்கத்தின்
நல்லுருவே பரந்தாம!வாழி. 2

பிறர்க்கென்றும் நலஞ்செய்யும்
பெருந்தகையோய் வாழி
மறக்கொணுது நின்பணியை
மறத்தமிழ வாழி
புறம்கலந்து அகம்வளர்க்கும்
பெருங்கடலே வாழி
அறம்தழைக்கச் செயும்அன்பர்
பரந்தாம! வாழி. 3

தழைத்திடுக!

சென்னைப் பல்கலைக் கழக
மதுரைத் தமிழ்ப் பேராசிரியர்
டாக்டர். மொ. அ. துரை அரங்கனுர்,
M. A., M. O. L., Ph. D.

மற்றுமோர் ஆண்டறுப துய்கதமிழ் வாழவெனச்
சற்றும் தளர்வின்றிச் சஞ்சலமும்—அற்றுத்
தழைத்திடுக நற்பரந் தாமனுர் என்றும்
உழைத்திடுக மண்மேல் உவந்து.

## தமிழ்ப் பணிபுரியும் தக்கோர்

*மதுரைத் தியாகராசர் கல்லூரித்*
*தமிழ்த்துறைத் தலைவர்*
பேராசிரியர்
டாக்டர் சி. இலக்குவனார்.
M. A., M. O. L., Ph. D.

பரந்தா மனாரின் பண்பார் மணிவிழா
திருவள் ளுவரின் செந்தமிழ்க் கழகம்
சிறப்புற நடாத்தும் செய்தி யறிந்தோம்
மகிழ்ந்தோம். அவர்தம் வாணாள் தாமும்
வையை ஆற்றின் மணலிலும் பலவாய்
நிறைந்து வாழ்க! நீடு வாழ்கவே!
தண்டமிழ்ப் புலமையும் தகைசால் பண்பும்
அன்பும் நண்பும் ஆர்வ நன்மொழியும்
என்றும் தம்பால் இனிதே கொண்டே
தமிழ்ப்பணி புரியும் தக்கோர் ஆவார்.
புகழ்மிகப் பெருகிப் பொன்மிக நிறைந்து
தமிழ்க்குறும் இடரைத் தடுக்கும் உரனுடன்
வாழ்க வாழ்க வாழ்க
ஆழ்கடல் உலகில் அளப்பில ஆண்டே!

## வீறுடைத் தோன்றல்

*மதுரைத் தூயமரியன்னை உயர்நிலைப் பள்ளித்*
*தலைமைத் தமிழாசிரியர்*
பண்டித அ. முத்துசாமிப் புலவர்.

தண்டமிழ்ச் சான்றோர் தழைத்தினி திருக்கும்
தொண்டைநன் னாட்டிற் கண்டவர் புகழும்
சென்னையில் வேளாண் செல்வக் குடியில்
நன்னர்த் தோன்றிய நலந்திகழ் குரிசில்
வரந்தரு வேங்கட மாமலை யமர்ந்த

பரந்தா மன்பெயர் பாங்குறப் பெற்ளுேன் ;
நற்குணம் வாய்ந்த சற்குண ரிடத்திற்
கற்கவேண் டுவவெலாங் கசடறக் கற்ளுேன்;
ஆங்கில மொழியிலும் அழகுறு தமிழிலும்
ஓங்கிய புலமை யொருங்குகொள் செல்வன்;
கேட்டவர்ப் பிணித்துக் கேளா தவரும்
வேட்ப மொழியும் மிகுதிறன் படைத்தோன்;
பழகறு தமிழிற் பயிலும் நயங்களே
அழகுற விளக்கும் ஆற்றல் சான்ளுேன்;
நெஞ்சிற் ருேன்றும் நேரிய கருத்தை
அஞ்சா துரைக்கும் ஆண்மையிற் சிறந்தோன்;
வ. உ. சிதம்பர வள்ளலின் தோற்றம்
மேவிய பெருமகன்; வீறுடைத் தோன்றல்;
இனிமையும் எளிமையும் இயைந்தநற் கவிதைகள்
நனிமிகப் பாடும் நாநலம் உடையோன்;
நாயக்க மன்னரின் நல்வர லாற்றைத்
தாயகம் புகழும் தன்மையில் தந்தோன்;
பிறங்கிடும் மேடைப் பேச்சுப் போன்ற
சிறந்தபல் லுரைநூல் செய்தநற் செம்மல்;
அன்னவன் செய்த அளப்பருந் தமிழ்ப்பணி
உன்னுபு மணிவிழா ஒன்றை நடாத்திப்
பொன்னுடை புனேந்தவற் போற்றி மகிழ்ந்தது
தன்னிக ரில்லாத் தலேமைசால் மதுரையில்
மன்னிய பெருபுகழ் வள்ளுவர் கழகம்;
இன்னும் பன்ளுள் இறைதிரு வருளால்
உன்னத வாழ்வில் ஓங்குக அவனே !

## உயரிய நண்பர்

பச்சையப்பன் கல்லூரி
முன்னைய துணைத்தமிழ்ப்பேராசிரியர்
வித்வான்-பண்டித ரா. நடேச நாயகர்.

மன்னிய புகழின் மாண்புறு சென்னைப்
புரசை தன்னில் சீரிய பொற்புடன்
பொலியும் எங்கள் உயரிய நண்பர்
உயர்பரந் தாமர் எனும்பெயர் உற்றோர்,
தமிழுடன் ஆங்கிலம் தகவுடன் அறிந்த
சீர்சற் குணர்பால் சிறப்புடன் பயின்றோர்,
தமிழாம் அன்னை தழைத்திட் டோங்க
அன்பெனும் நீரால் வளர்த்தநற் றொண்டர்,
சென்னையி லுள்ள திருப்பவுல் பள்ளியில்
பல்லாண் டமர்ந்து தமிழ்ப்பணி புரிந்து
பலர்புகழ்ந் தேத்தப் பண்புடன் திகழ்ந்தோர்,
திருவள் ளுவர்தம் கழகம் நிறுவிப்
புகலருந் தொண்டுகள் பற்பல புரிந்தோர்,
சொல்லும் செயலும் ஒத்தமைந் திருக்க
வாழ்க்கையில் காட்டிய உயர்தகை யாளர்,
ஒழுக்கந் தன்னை உயிரினும் ஓம்பி
விழுப்பத் துடன்மிளிர் மேம்பாட் டாளர்,
உயர்சீர் திருத்தக் கொள்கை யுடனே
தெய்வ பத்தியில் திகழ்ந்து பொலிவோர்,
எம். ஏ. பட்டம் எழிலுடன் பெற்றபின்
மதுரையம் பதிக்கு மாண்புடன் சென்று
பன்மாண் புகழார் தியாக ராசர்
கல்லூரி தன்னில் கவினுடன் திகழ்வோர்,
ஆங்குறும் நற்றிரு வள்ளுவர் கழகத்
தலைவர், நிகரில் பல்புகழ் பெற்றோர்,

தமிழ்வளர் கூடலம் பதியுடன் பற்பல
இடங்கள் தோறும் தமிழினை வளர்ப்போர்,
ஆய்வுக் குரிய நூல்கள் பற்பல
சீர்மையின் வரைந்து சிறப்புடன் மிளிர்வோர்,
தந்தை அறிவு மகனறி வென்பபோல்
அவர்தம் தந்தை கிருட்டின சாமி
முதலி யார்தம் உயரறி வுற்றோர்,
நவில்தொறும் தோன்றும் பண்புடை நண்பர்,
இத்தகை எந்தம் நண்பர்க் கியற்றும்
அறுபான் ஆண்டாம் மணிவிழாத் தன்னில்
அவரும் அவர்தம் கிளையும் என்றும்
ஆறு படைவீட் டண்ணல் அருளால்
அன்பும் பண்பும் தழைத்திட் டோங்கி
வாழ்க வாழ்கென வாழ்த்திடு வேனே!

காரைக்குடி அழகப்பர் தமிழ்மன்றத்தார்
ஐந்தாம் அழகப்பர் விழாவன்று அளித்த வாழ்த்து.

திருக்குறள் பரப்பிச் செந்தமிழ் வளர்க்கும்
ஒருபெரும் அறிஞ, உயர்பரந் தாம,
சங்கம் வளர்த்த ஆலவாய் நகர்தனில்
சங்கக் கனிபிழி சாற்றினை ஊட்டிடும்
ஆய்வுரைப் பெருநிறை ஆசிரிய, அ. கி. ப.,
தூய மொழிப்பணி தோய்ந்த நாவல,
ஏட்டினில் எழுத்தினில் எழுந்த பிழைகளை
ஓட்டியே வழிநெறி காட்டியே தமிழ்க்குறு
செறுபகை ஒறுத்து வருபுகழ் நிறைத்திங்
கறுபது கடந்த முதுபெருந் தலைவ,
வள்ளல் அழகனின் வண்மை அறிவொளி
உள்ளத் திருத்தி உள்ளம் திருத்தும்

மாணவர் மொழிக்குடை மணிநிழல் வளர்க்கும்
மாணரு மன்ற வாழ்த்தினைச் சொன்னேம்.
அணிதமிழ்த் தாயின் மணிமுடி முத்தே,
மணிவிழாக் கண்டீர்! வாழியபல் லாண்டே!

மதுரைத் தியாகராசர் கல்லூரி மாணவர்கள்
படித்தளித்த வாழ்த்து

ஒழுக்கம் பேணி உண்மை பேணி
விழுப்பம் கண்ட விளங்கு புகழோன்
வாழ்க்கைக் கலையை வகுத்துச் சொல்வோன்
மேடைக் கலையை விரித்துச் சொல்வோன்
விரிவுரை தருவோன் விளக்கம் தருவோன்
அறிவுரை தன்னை ஆய்ந்து தருவோன்
நல்ல தமிழை நாளும் நல்கி
வல்லமை எய்த வழிபல சொல்வோன்
பாவின் நலமே பருகச் செய்வோன்
நாவில் அமரும் நடுநிலை யாளன்
தக்கோர் நடுவில் தனிச்சீ ராளன்
தாய்மை ஒத்த தகைமை வாய்ந்தோன்
மலையை ஒத்த மாண்பு பெற்றோன்
நிலையில் திரியா நேர்மை யாளன்
அடக்கத் திற்கே அருங்கல மானோன்
மடமைத் தனத்தை மாய்க்க வல்ல
அஞ்சா நெஞ்சன் அ. கி. ப. எனநம்
மாணவர் உலகம் மகிழ்ந்து போற்றும்
அறிஞன் தன்னை மறவோம் யாமே!
அவனே,
பொதிகைத் தென்றல் போலப்
பொலிந்து வாழிய நீள்பல் லாண்டே!

# பரந்தாமனுர் தென்றல் விடுதூது

இரா. இளங்குமரன்,
மு. மு. உயர்நிலைப்பள்ளி,
திருப்பரங்குன்றம்.

தண்டேன் துளிக்கும் தமிழின் உடன்வந்த
கண்டே! கனியே! இளந்தென்றல் மென்காலே!
இன்னல் அகற்றி இயலின்பம் தந்தருள்வோய்!
உன்னை அடைந்தேன் ஒருபொருட்டாய்க் கேட்டருள்க:
ஓடி விளையாடி உள்ளம் நிலைப்பின்றிக்
கூடிப் பிரிந்து குறிப்பற்று வாழ்கின்ற
பிள்ளைப் பருவத்துப் பேதையேன் காதல்கேள்!
வள்ளல் அவரின் வனப்பறியேன் வாழ்வறியேன்
ஊரறியேன் பேரறிவேன் உற்றார் உறவினர்கள்
சீரறியேன் செய்தொழில்கள் ஆனவெலாம் யானறியேன்
தொட்டறிவோ பட்டறிவோ எங்கட்குள் இல்லெனினும்
விட்டறியா தெந்நெஞ்சம்; வேட்கைக் களவில்லை;
"காட்டும் இயற்கை கடவுள் வடி"வென்றோர்
பாட்டுத் திறத்தால் பரிந்தென்னை ஆட்கொண்ட
அவ்வேளை தொட்டென் அகத்திரையில் ஓவியமாய்ச்
செவ்வையுற வீற்றுள்ளார் சேதி மனங்கொள்வாய்!
காலைக் கதிர்கண்டால் மாலை வெயில்கண்டால்
கோல மலைகண்டால் நீல முகில்கண்டால்
சோலை மரங்கண்டால் ஆலுங்கொடி கண்டால்
பாலர் தமைக்கண்டால் பாவை தனைக்கண்டால்
"காட்டும் இயற்கை கடவுள் வடி"வென்னும்
பாட்டுத் தலைதூக்கிப் பற்று மிகுவிக்கக்
"காணுநாள் எந்நாளோ காதலரைக் கண்டன்பு
பூணுநாள் எந்நாளோ?" என்றெண்ணிப் போகாத
ஏக்கத்தால் பல்லாண்டு போயகலச் செய்தித்தாள்
தூக்கிவரும் தூய கவிதைத்தேன் கட்டுரைப்பால்

உண்டு பருகி உவந்தேன்; ஒருநாட்கண்
கண்டேன் 'கருவை' உயர்பள்ளி மன்றத்தில்;
நோக்கினேன் நோக்கி மிகநோக்கி இன்புற்றேன்;
ஆக்கை அழகும், அவர்மீசைப் பேரழகும்
"பைந்தமிழைக் காக்கவொரு பாண்டியனர் வந்துள்ளார்;
செந்தமிழர் பின்பற்றிச் செல்லின் சிறப்புண்டு ;
வாழி ! இவர்வாழி ! வண்டமிழர் வாழ்வாங்கு
"வாழ இவர்வாழி !" என்றேத்தி நின்றேன்;பின்,
சேல்கொண்ட கண்ணம்மை செம்மாந் துளம்பொங்க
வேல்கொண்டு வீற்றிருக்கும் வீரன் பரங்குன்றில்
வாய்த்தவுயர் முக்குலத்தோர் பள்ளியிலே என்னருமைத்
தாய்த்தமிழ்போதிக்கும் தொண்டேற்றேன். தண்ணளியாய்!
முன்னை வருகாதல் முத்துச் செழித்தோங்கிப்
பின்னும் பெருகிப் பிறங்கிமேல் ஓங்கிற்ருல் ;
கோடை எனிலோ கொடுமையால் தாமகல்வார்,
வாடை எனிலோ வரிந்திறுக்கி வாயடைப்பார்,
சூறை எனிலோ சுழித்து முகங்காட்டார்,
வேறெவரைப் போக்கி உளக்காதல் சொல்விப்பேன்?
தென்னன் பொதியில் விளையாடும் தென்றலே !
உன்னை வெறுப்பார் உலகத்தில் யார்கண்டாய் ?
மூத்த தமிழ்க்கவியால் ஆர்த்த கிழவரைப்
பார்த்தென்றன் பற்றைப் பரிவோ டுரைத்திடுவாய்;
"ஓ! ஓ! இளமைக்கும் வாய்த்த முதுமைக்கும்
ஆ! ஆ! அழகன்ரே காதல் அரும்புவ(து)"
என்றெண்ணி ஏளனமாய் என்னை நினைத்தாயோ ?
நன்றன்பே ! நானுரைத்தல் நன்ருகக் கேட்டறிவாய்!
கைக்கிளையோ காழ்த்த பெருந்திணையோ என்றென்று
பொய்க்கேள்வி போட்டென்னைப் புண்ணுக்க வேண்டாங்காண் !
அன்பினல் தோற்றிய ஐந்திணைதான் ஆய்ந்தறிவாய் !
இன்னுயிர்க்கோர் மூப்பும் இளமையும் பேசிடுவோர்
பேயர் பெரும்பேயர்! பேச்சிதுதான் மெய்யென்ருல்

தூய உயிர்க்காதல் பேற்றுக்கும் உண்டன்றே!
எங்காதல் பொய்க்காதல் இல்லை புவிபோற்றும்
மங்காத தெய்வக் கவிக்காதல்; மாத்தமிழாம்
தீஞ்சாற்றில், தேன்கண்டு தித்திக்கும் தீங்கனி
யாயவைகள் ஊற்றிருந்த தெய்வக் கவிக்காதல்!
பாட்டொன்றே மூச்சென்றால் பன்னுதற் கின்றுகாண்!
மீட்டும் இசைவெள்ளம் மேவி நுகரரார்?
கேட்கும் செவியில்லார் கேளார் கிளர்மொழிகள்!
கூட்டுள் உயிரான நீயறிய மாட்டாயோ?
சீரார் செழுந்தென்றற் செல்வனே! இப்போதே
நேராய் நடந்திடுவாய் நேயன் திருமுன்னர்;
உற்ற பொழுதறிந்(து) ஓசை வரவைத்து
வெற்றி யுடனே எனக்குள்ள வேட்கையினைப்
பன்னி உரைத்திடுவாய்! "பல்லாண்டு பல்லாண்டு
மன்னி நலமாக வாழ்"கென்று வாழ்த்திடுவாய்!
போய்வா நலமாகப் போழ்தெல்லாம் காத்திருப்பேன்!
"ஏஏ! பெயரின்றி எப்படிக் கேட்டறிவேன்?"
என்று நினைத்தாயோ? நன்று நனிதென்றால்!
சென்று வருக செழுங்கூடல் மாநகருள்
"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்"
தண்டமிழ்க்கே ஈந்த தனித்தகையோர் யாரென்றால்
பிஞ்சுக் குழந்தைகளும் பெம்மான் பெயர்சொல்லும்:
நெஞ்சில் பதித்திடுவாய் நேயன் பரந்தாமன்
மெய்யாய் உனக்கொன்று சொல்கின்றேன் அன்னேனின்
மெய்யைத் தழுவின் 'தமிழ்த்தென்றல்' நீயாவாய்!
பேற்றுள் தலையாய பேறே! 'தமிழ்த்தென்றல்!'
ஆற்றுப் படுத்தேன்; அருள்மிக்காய்! நீசென்று
பூமாலை வேண்டிப் பொருட்செலவுக் காக்காமல்
பாமாலை வாங்கு பணிந்து!

# A friend, philosopher, and guide Sri A. K. P.

Thiru : T. V. Ramachandran, M.A.,B.L., J.P., Madras.

I am very happy to learn that A. K. Paranthamanar, M.A., whom I have known since the last four decades ever since he was a student of the S.S.L.C. class in St. Paul's School, Madras, is to be honoured very shortly on his attaining the age of 60 and that a Souvenir is to be released on the occasion in token of his invaluable services in the cause of Tamil Literature. Nothing will give me greater pleasure than to join those who had been actively associated with him in recording their appreciation of his qualities of head and heart and his contribution to the Tamil world.

A good seed brings forth a good seedling even after lying dormant for some time and so it was with the late Santhiappa Mudaliar, a Veteran Tamil scholar, from whom, as his grandson, Paranthamanar should have inherited from all the qualities that went to make up a Tamil scholar. Earlier foundations for his scholarship were laid in his High School classes by his preceptor, Prof. S. D. Sargunar, especially in the field of Tamil Grammar and Poetry and one noteable feature which Paranthamanar had imbibed from his master which earned for him his later popularity and worth has been his application of literary criticism in his studies and his appreciation of the contribution of English Literature in enriching our own.

Thanks to the active assistance and encouragement that he had received from Mr. Sargunar, he took up the profession of a teacher soon after passing out of the High School and after this interval joined the Pachaiyappa's College for his Intermediate and B.A. courses, underwent training in the Meenakshi Training College, Chidambaram, and rejoined his former profession in the school. When again, on the advice of his Master, he completed his M.A. in Tamil with a I Class, his bright future in the academic field was assured.

Even in our school days, we were trained to do Social Service by our Principal, Rev. K.C. Mc. Pherson, M.A. (Oxon) under whose able leadership and guidance, we were sent in batches to visit Hospitals for ministering to the sick and the slums for educating the poor to live a cleaner and healthier life. This school day experience taught us the spirit of fellowship, tolerance and willingness to help the needy so that soon after leaving our school we started running a Free Night School in Kilpauk for the benefit of the slum children and adults whose evening hours could be usefully employed. The people of the locality began to love us for our Social Service and leaders like Sri C. Rajagopalachari, Dr. S. Muthulakshmi Reddi, Mrs. Rukmani Lakshmipathi and the then Provincial Ministers visited our school and encouraged us in our missionery work.

The starting of the South Indian Tamil Academy in 1925 with separate Literary and Social Service Sections was a natural corrollary of our earlier training in Social Service. Under the auspices of this Academy, weekly literary classes were held, public meetings organised and pocket diaries published each year recording our work.

As the General Secretary of this Academy for several years, Paranthamanar has been responsible for enlarging its activities and contributing to its attaining high status as the premier Literary and Social Service organisation in South India.

Mr. Paranthamanar is a Tamil Scholar in the fullest sense of the term. Realising the maxim that what has been learnt is but an atom of what has yet to be learnt, he continues his studies of books and periodicals, magazines and journals and is posted with information on a wide scale, covering many subjects. He loves to be in the midst of books, writes books on varied subjects, contributes to journals and periodicals and continues to collect information from different sources so as to be uptodate in his lectures. Since mere learning without dissemination of knowledge so gained is of not of much use, Mr. Paranthamanar readily gives out what he has acquired and takes pleasure in offering guidance to students and Pandits as and when required without expectation of any monetary reward.

His invocation of the Goddess of Tamil in his *Tamil Perundevi Tiruppalli Yeluchi* - his maiden effort–showed signs of promise, and today he is a proud author of several books and poems which find a ready reception and offer the public, instruction on a wide field. His style is simple and flowing, and in verse, he excels in the *Venba*. He edited Tamil Texts for Higher Forms, wrote many verses for children. His *Nalla Tamil Eluthavenduma* goes a long way in correcting many common errors in writing the Tamil language and is a valuable guide for essay writing, precis and Grammar to the student public. *Pechalaraga* is designed to train our

men in public speaking and oratory. His collection of small poems in *Kadai Nilai Kavithaigal* is a record of his random thoughts on the subject taking us deep in Agapporul and his articles in the *Tamil Nadu* on subjects of literary interest are much appreciated by the public. *Madurai Naicker Varalaru* reveals his deep interest in research and skill in marshelling historical anecdotes in a readable form.

Concentrated industry with an ambitious planning has its own reward and Mr. Paranthamanar is what he is today on account of his sustained hard work over a long stretch of years with a will to achieve great ends.

By nature, Paranthamanar is not a strict disciplinarian. He is always generous and readily gives out whatever he could spare; with his tendency to mistake for gold all that glitters before his eyes, he is loathe to wound others' feeling. These qualities have contributed to land him in monetary difficulties in a few instances, as some of his friends unscrupulously took undue advantage of this weakness.

As a Senior Tamil Lecturer in Thiagarajar College and Warden of the Students' Hostel at Madurai, he has succeeded to win over the students more by his persuasive language and forbearance than by the wielding of an iron hand. He has carved out a name for himself in Madurai, both in the literary field by his many works and lectures and in public life by his public speeches, conducting of many marriages in the Tamll style and writing of numerous congratulatory verses and epitaphs. He thus

shines as a jewel both in his College and in Literary circles.

I join with numerous friends of his in Madras, Madurai and elsewhere in wishing Mr. Paranthamanar with the grace of the Almighty a long life of continued prosperity and public service.

# அ. கி. ப. நூல்கள்

★

| | |
|---|---|
| வாழ்க்கைக் கலை | ரூ. 2-50 |
| நல்ல தமிழ் எழுத வேண்டுமா ? | ரூ. 5-00 |
| கவிஞராக | ரூ. 5-00 |
| பேச்சாளராக | ரூ. 2-00 |
| வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும் | ரூ. 2-00 |
| பன்னிரு கட்டுரைகள் | ரூ. 2-25 |
| மறுமலர்ச்சிக் கவிதைகள் | ரூ. 2-50 |
| எங்கள் தோட்டம் (சிறுவர் பாடல்கள்) | ரூ. 2-00 |
| மதுரை நாயக்கர் வரலாறு | ரூ. 8-00 |
| திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும் | ரூ. 1-50 |
| தமிழ் இலக்கியம் கற்க | ரூ. 1-50 |

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1


Jacket Printed at Neo Art Press, Madras - 2